بسم الله الرحمن الرحيم

"

உலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை. பயபக்தியுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும். நீங்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டாமா?

- 6:32 அல்குர்ஆன்

"


மியான்மர் முஸ்லிம்கள்... பௌத்தர்களின் தீவிரவாதம் அணிதிரண்ட முஸ்லிம் நாடுகள் 7

ரோஹிங்கியாக்களை கைவிடுவதுதான் இந்தியாவின் அறமா? 40

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் 43

எது முதலில்? 47

சுதந்திர தின விழாவில் மோடி விட்ட புருடா...! வீழ்ச்சியில் இந்திய பொருளாதாரம் 53

வங்கியில் தேங்கிக் கிடக்கும் ரூ. 67.5 லட்சம் கோடி முஸ்லிம்களின் பணம் 59

இந்துத்துவா பிரமுகரின் சதி அம்பலம்..! 62

மாற்றத்தை நோக்கி 64



அக்டோபர்-2017

# வைகறை வெளிச்சம்

மொஹரம்-1439

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



http:/www.facebook.com/vaigarivelicham

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

## தலையங்கம்

# அழிவைத் தவிர்ப்போம்... அறிவைப் பெறுவோம்...

20-09-2017 காலை 7.30 மணிக்கு பாலிமர் தொலைக்காட்சி ஓர் ஆய்வை வெளியிட்டுக் கொண்டிருந்தது.

ஈரல் பாதிக்கப்பட்டு, வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கும், இளம் பெண்களைப் பற்றிய ஆய்வு அது.

ஆமாம் ஐ.டி. கம்பெனிகளில் அதிகம் சம்பளம் வாங்குகின்றார்கள், பெண்கள். இவர்கள் வாரத்திற்கொருமுறை வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என அனுபவிக்கத் தொடங்கி விடுகின்றார்கள். இவர்களுக்கென இரவு முழுவதும் இயங்கி வரும், "பப்"கள் எனப்படும் களிப்பாட்டத் தளங்கள் நகர்ப் புறங்களில் இரவெல்லாம், இடைவிடாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. - இளம் பெண்கள் குடியும், கும்மாளமுமாக இரவு கழிப்பில் மிதக்கின்றனர்.

இந்தப் பரம ஆனந்தம் முடிந்தபின் இந்த இளம்பெண்களுக்கு ஈரல் கோளாறுகள் ஏற்படுகின்றன. இளம் வயதை தாண்டுவதற்கு முன், ஈரலை மாற்றிட வேண்டிய நிலை. மாற்றிட இயலாத நிலையில் இளம் வயதிலேயே அவர்கள் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள்.

இந்த இளம் பெண்களுக்கு திருமணமாகி குழந்தைகள் இருந்தால், ஏக்கங்கள் தாம் அந்தக் குழந்தைகளின் எதிர்காலம், என்றாகி விடுகின்றது. அவர்களைத் திருமணம் செய்து கொண்ட ஆண்கள் அல்லோல கல்லோலப்படுகின்றனர்.

ஆண்கள் அத்துணை எளிதாக இதுபோன்ற பாதிப்பிற்கு உள்ளாவதில்லை. பெண்கள் தாம் பெரிதாகப் பாதிக்கப்படுகின்றார்கள். காரணம் ஆண்களின் ஈரல் மிகவும் பலமானது. இதில் பாதி அளவே பெண்களின் ஈரல் பலமானது.

ஆகவே ஆண்களின் ஈரல்கள் மதுவால் கெட்டுப் போவதற்கு சற்று காலமாகும். பெண்களைப் போல் மென்மையாக இருக்கும் ஈரல் அதிவிரைவில் அழிந்து விடுகின்றது. இந்த உண்மையை பாலிமர் தொலைக்காட்சி ஈரல் தொடர்பான நோய்களின் நிபுணர் ஒருவரைக் கொண்டு உறுதி படுத்தியது. அவர் அப்பல்லோ மருத்துவமனைச்சார்ந்த மருத்துவர், அவர் இன்னொரு உண்மையையும் சொன்னார், அது குடியால் ஈரல் சம்மந்தப்பட்ட நோயால் பாதிக்கப் பட்ட பெண்கள் நகர்ப் புறங்களில்தான் அதிகம். கிராமப் புறங்களில் அறவே இல்லை எனலாம் என்றார்.

ஆக இளம் பெண்கள் அனுபவிக்கின்றோம் என்ற போர்வையில் அழிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இது முதல் முறையல்ல முன்னர் விபச்சாரம் தொடர்பான ஒரு பெரும் போலீஸ் சோதனையில் இதேபோன்று இளம் பெண்கள் அதிகமாக சிக்கினார்கள். அவர்கள் காசுக்காக அதனை செய்யவில்லை. அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே அதனை செய்தார்கள்.

இந்தப் பெண்களை / விடுதிகளில் கையும் களவுமாகப் பிடித்த காவல் துறை அதிகாரி, அவர்களை கைது செய்து கபளீகரங்களைச் செய்யாமல் அவர்களின் பெற்றோர்களுக்கு தகவல்களைத் தந்து பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

இவையெல்லாம், எதைக் காட்டுகின்றன

என்றால் பணம் என்றொன்றை இலட்சிய மாகக் கொண்டு வாழ்க்கையை வழி நடத் திட முற்பட்ட பின் வேறு இலட்சியங்கள் இல்லை என்பதையே காட்டுகின்றது.

அந்தப் பணம் கை கூடிய பின் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒழுக்க நெறிகளைக் காற்றிலே பறக்கவிட்டு விடுகிறார்கள். தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றியும் கவலைப்படவில்லை. அனுபவிக்க வேண்டும், அதுவும் இப்போதே அனுப விக்க வேண்டும் என அவசரக் குடுக்கை யாகச் செயல்பட்டு அகப்பட்டுக் கொள்கின் றார்கள்.

இதனால்தான் இஸ்லாம், மனிதர்களை எடுத்த எடுப்பிலேயே மூன்று விஷயங்களில் தெளிவு படுத்துகின்றது.

1. மனிதன் எங்கிருந்து வந்தான்?
2. இந்த உலக வாழ்வின் இலட்சியம் என்ன?
3. மரணத்திற்குப் பின் மனிதன் எங்கே செல்கின்றான்?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிட வந்த இஸ்லாம், முதன் முதலில், ஒரு விஷயத்தைப் பொட்டில் அறைந்தார் போல் சொல்லுகின்றன.

மனிதனை இறைவன்தான் படைத்தான்.

முதலில் ஓர் ஆணைப் படைத்தான், ஆணிலிருந்தே ஒரு பெண்ணைப் படைத் தான். இவ்விருவரிலிருந்தே மனித இனத் தைப் பாரெல்லாம் பரவச் செயதான்.

ஆக மனிதர்கள் அனைவரும் ஒரே தாய் தந்தையரின் பிள்ளைகள். ஆகவே சமமான வர்கள், சகோதரத்துவ வாஞ்சையோடு வாழ்ந்திட வேண்டியவர்கள்.

மனிதன் இந்த உலகில் திக்கற்றவனாக, திசையற்றவனாக, கண்டதே காட்சி, கொண் டதே கோலம் என வாழ்ந்திட வேண்டிய வனல்ல. மாறாக அவன் ஓர் இலட்சிய வாழ்வை, வாழ்ந்திட வேண்டியவன். அந்த இலட்சியம் மறுமை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் வெற்றிப் பெற்றிட வேண்டும் என்பதே!

அந்த வாழ்க்கையில், வெற்றி பெற்று விட்டால் அவன் சொர்க்கம் என்ற சுக வாழ் வில் நிரந்தரமாக இருந்திடுவான். அவனுக்கு வேண்டிய சுகங்கள், நிம்மதியெல்லாம் அங்கே தாராளமாகக் கிடைத்துவிடும். அந்த வாழ்க்கை நீண்டது, நிரந்தரமானது. ஆகவே அவசர கோலத்தில் மனிதன் இந்த உலகில் இப்போதே அனுபவித்திட வேண்டும் என்ற வாஞ்சையில், வேகத்தில் வாழ்க்கையைப் பாழாக்கிட வேண்டியதில்லை. ஒழுக்க நெறிகளை உடைத்து அவமானப்பட வேண்டியதில்லை.

அந்த வாழ்க்கையில், அதாவது மறுமை வாழ்க்கை என்ற மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் வெற்றி பெற்றிட நாம் செய்திட வேண்டியதென்ன?

உலகைப் படைத்து, உவகையோடு நமக்கு வழிகாட்டிய இறைவன், நாம் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும் என்று வழங்கிய வழிகாட்டுதலை அப்படியே நாம் பின்பற்றி வாழ்ந்திட வேண்டும். அவ்வளவு தான், அவன் வகுத்து வழங்கியுள்ள அறுதி வழிகாட்டுதலே இஸ்லாம்.

அதனை உள்ளடக்கிய பொக்கிஷமே அருள்மறை குர்ஆன். அதன் நடைமுறை விளக்கமே அண்ணலெம் பெருமானாரின் முன் மாதிரி வாழ்க்கை.

இறுதியில், இந்த வாழ்வின் இறுதியில், நாம் படைத்த இறைவனிடமே சென்று சேர்ந்திடுவோம்.

ஆக, வாழ்வின் தொடக்கம் வாழ்வின் ஓட்டம், நோக்கம், முடிவு அனைத்தும், தெளிவுபடுத்தப் பட்டுவிட்டது. இஸ்லாத் தின் வழிகாட்டுதல்களில்,

இந்தத் தெளிவும் தெளிந்த வழிகாட்டு தல்களும் இதர கொள்கைகளில் இல்லை. அதனால்தான் மக்கள், இளைஞர்கள், இளம்

வயது பெண்கள், இவர்கள் நெறிகெட்டுப் போகின்றார்கள்.

இவர்களின் பார்வைக்கு இஸ்லாம் இளம் வயதிலேயே வைக்கப்பட வேண்டும். அப்போது மட்டுமே இவர்களை இழிவிலிருந்தும், அழிவிலிருந்தும் மீட்டிட இயலும்.

இஸ்லாத்தைத் தங்கள் வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள், இதனை செய்திட முன் வருவார்களாக.

இதில் காலம் தாழ்த்தும் தோறும் சில இளைஞர்கள் தங்கள் இளமை, வளம், எதிர்கால வாழ்க்கை இவற்றை இழந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இறைவன் கூறுகின்றான் :

*நிச்சயமாக நாம் ஆதி மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம்.*

*பின்னர் நாம் மனிதனைப் படைப்பதற்காக அதனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஓர் தசைப்பிண்டமாக்கினோம். பின்னர் அந்த தசைப் பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம், பின்னர் அதை மனிதனாகச் செய்தோம், இவ்வாறு படைத்தவனான அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன். (அல்லாஹ்) மிக அழகியப் படைப்பாளன்.*

*பிறகு நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கின்றீர்கள். பிறகு நியாயத் தீர்ப்பு நாளன்று நீங்கள் எழுப்பப்படுவீர்கள். (அல்குர்ஆன் : 23:12-16 முஃமினூன்)*

இந்த உலக வாழ்க்கையைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்...

*உலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை. பயபக்தியுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும். நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா? - 6:32 அல்குர்ஆன்*

*மறுமையைவிட இவ்வுலக வாழ்க்கையைக் கொண்டே நீங்கள் திருப்தி அடைந்துவிட்டீர்களா? மறுமையின் வாழ்க்கைக்கு முன்பு இவ்வுலக வாழ்க்கையின் இன்பம், மிகவும் அற்பமானது. (அல்குர்ஆன் 9:38 அத்தவ்பா)*

மேலும் நம்மைப்படைத்த அல்லாஹ் கூறுகின்றான்...

*அறிந்துகொள்ளுங்கள் : நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும். மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும், பொருள்களையும் சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும். (இது) மழையின் உதாரணத்திற்கு ஒப்பாகும். (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகின்றது. ஆனால் சீக்கிரமே அது உலர்ந்து, மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது களமாகி விடுகின்றது. உலக வாழ்க்கையும் இத்தகையதே! எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு மறுமையில் கடுமையான வேதனையுண்டு. (அல்லாஹ்வை நம்பி அவன் வழியில் நடந்தோருக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு.*

*ஆகவே இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை. (அல்குர்ஆன் 57:20)*

*(மனிதர்களே!) நிச்சயமாக நீங்கள் அவசரப்படுவதையே பிரியப்படுகிறீர்கள். ஆகவேதான் (இம்மையைப் பற்றிக்கொண்டு) மறுமையை விட்டு விடுகின்றீர்கள். ( அல்குர்ஆன் 75 : 20,21)*

**ஆகவே அவசரப்பட்டு அனுபவிக்கின் றோம் என்ற போர்வையில் அவமானப்பட்டு அழிவதை விட்டு அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை ஏற்போம், அதன்வழி வாழ்வோம்...**

**இன்ஷா அல்லாஹ்...**



## மியான்மர் முஸ்லிம்கள்

# பௌத்தர்களின் தீவிரவாதம் அணிதிரண்ட முஸ்லிம் நாடுகள்

### மே 28, 2012.

புத்தமதத்தைச் சார்ந்த பெண் ஒருத்தியை கற்பழித்து விட்டார்கள் என்றொரு புரளி. மூன்று முஸ்லிம் இளைஞர்கள் இது விவகாரத்தில் கைது செய்யப்பட்டார்கள்.இவர்களுக்கு, விசாரனைகள்எதுவுமின்றி, தண்டனை வழங்கப்பட்டு விட்டன.

புத்த பெண்ணை கற்பழித்ததாகக் கூறப்படும் முஸ்லிம்களை எங்களிடம் ஒப்படைத்திட வேண்டும் என்று புத்தமதத்தைச் சார்ந்தவர்கள் அவர்களைக் கைது செய்தவர்களிடம் கோருகின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் தண்டனையையும் அறிவித்துவிட்டோம். இந்நிலையில் அவர்களை நீங்கள் கேட்க வேண்டாம் என வாதிடுகின்றார்கள் அரசாங்கத்தினர்

.இதே வேளையில் ரங்கூனிலிருந்து வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றைவழிமறித்தார்கள் புத்தமதத்தைச்சார்ந்தவர்கள்.

பேருந்துலிருந்து 11 முஸ்லிம் இளைஞர்களை கீழே இறக்கிக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டார்கள்.வாய் நிறைய மதுவை ஏந்தி அந்த சடலங்களின் மீது உமிழ்ந்தார்கள் .சடலங்களை சுற்றிச்சுற்றி வந்து ஆனந்த களிப்பில் ஆடினார்கள்.

புத்தம் என்றால் அகிம்சை, அவர்கள் எந்த உயிரினத்திற்கும் தீங்கிழைக்காதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்குப் பேரிடியாகி இருந்தது புத்தர்கள் செய்த கொலை பாதகம், அதன் பின் மதுவை வாயில் ஏந்தி உமிழ்ந்து போட்ட ஆட்டம் கொண்டாட்டம்! இந்த அளவுக்கு “பௌத்தர்கள்-அகிம்சாவாதிகள்” என அறியப்படுபவர்கள் கொலை பாதகங்களைச் செய்வார்கள்-பிணங்களின் மேல் நர்த்தன மாடுவார்கள் என்பனவற்றிற்கு இது உன்னதமான எடுத்துக்காட்டு1:

புத்த பெண்ணொருத்தியைக் கற்பழித்து விட்டார்கள். அதனால் தான் முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள் என்ற செய்திகளெல்லாம் பின்னர் காணாமற்போய்விட்டன. எந்த அளவுக்கு இந்தச் செய்திகள் காணாமற் போய்விட்டன என்றால்,அப்படியொரு நிகழ்வு நடந்ததா? என்பதே இப்போது ஐயத்திற்கிடமான ஒன்றாக ஆக்கப்பட்டுவிட்டது.



புத்தபெண்-ஐ கற்பழித்தவர்களைப் பழிவாங்க புத்த இனவாதம் பேசுவோர் தேடிச் சென்றார்கள். மியான்மர் (பர்மா) அரசு அவர்களை நாங்கள் கைது செய்துவிட்டாம் எனக் கூறி இருக்கின்றார்கள். அவர்கள் எத்தனை பேர் என்ற வினாவுக்கு மியான்மர் அரசே, அவர்கள் மூன்று பேர் என்றும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் .தண்டிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும் கூறி இருக்கிறார்கள்.

அவர்களைத் தேடிவந்த புத்த இனவாதிகளிடம் அவர்கள் தண்டிக்கப்பட்டு விட்டதால் உங்களிடம் ஒப்படைக்க முடியாது எனக்கூறி இருக்கின்றார்கள்.

மியான்மர் இராணுவம் சொன்னதைப் போல் அவர்கள் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். இதற்குள் அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், அவர்கள் விசாரிக்கப் படாமலே தண்டிக்கப்பட்டு விட்டார்கள் என்று பொருள்.

இதற்கு பர்மா என்ற மியான்மரில் எல்லா வாய்ப்புகளும் உண்டு. காரணம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முஸ்லிம்கள். முஸ்லிம் களை குறிப்பாக மேற்கு பர்மாவில் வாழும் முஸ்லிம்களை, அந்த நாட்டுக் குடிமக்கள் அல்ல. அவர்கள் பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்றொரு வாதத்தை நீண்ட நாள்களாகவே பர்மாவை ஆட்சிச் செய்பவர்கள் முன்வைத்து வருகின்றார்கள். முஸ்லிம்கள், அந்நியர்கள் அவர்கள் பர்மாவின் பூர்வகுடிகள் அல்ல என்ற வாதத்தை 2011 வரை பர்மாவை ஆண்ட இராணுவ ஆட்சியாளர்கள் தாம் கூறிவந்தார்கள் என்றில்லை. 2012 இல் ஒரு ஜனநாயக ஆட்சி என்ற போர்வையால், இராணுவத்தின் துணையுடன் ஒர் ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த ஆட்சியின் தலைவர் தென்சிங் என்பவரும், அந்த முஸ்லிம்களை அந்நியர்கள், அகற்றப்பட வேண்டியவர்கள் என்றே கூறிவருகின்றார்.

அதே போல் அண்மையில் ஒர் அம்மை யார் வானளாவப் புகழப்பட்டார். மியான்மரின் ஜனநாயகத் தாய் எனப்புகழப்பட்டவர் அவர். அவருடைய திருப்பெயர், அங்க் சான் சூ கி! Aung San suu kyi அவரும் இந்த இனப்படு கொலைகளைப் பற்றிக் கனைத்துக்கூட காட்டிடவில்லை. ஆயிரக் கணக்கில் இறந்தவர் களுக்கு ஓர் இரங்கல் செய்தி கூட இல்லை. இந்த லட்சணத்தில் இந்த அம்மையாருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

இப்படி ஆட்சியில் இருப்பவர்களும், எதிர்கட்சியினரும் ஒன்றுபோல் பர்மா முஸ்லிம்களை அந்நியர்களாகக் கருதுவதுதான் பர்மா முஸ்லிம்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சனை.



இதுதான் அவர்களை பிணங்களாகக் குவிப்பவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக் கின்றது. இப்போது, புத்தப்பெண் கற் பழிப்பு,கொலை என்பனவற்றைத் திரும்பிப் பாருங்கள் .விசாரணையின்றி அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தாலும் சரி. அல்லது அப்படி ஒரு சம்பவமே நடக்காமல் "மோடி" பானியில் புரளியைக் கிளப்பி முஸ்லிம்களைக் கொலை செய்திருந்தாலும் சரி. இரண்டு நிலையிலும் முஸ்லிம்களை இனப்படுகொலை செய்வதே நோக்கம் என்பது புலப்படும்.

## பர்மாவில் இதற்கு முன்னால் நடந்தவை:

இந்த நிகழ்வுகளை நாம் இங்கே சுட்டிக்காட்டுவதன் நோக்கம், பர்மாவில் முஸ்லிம்களைக் கொலை செய்வதற்குப் பெரிய காரணங்கள் எதுவும் தேவைஇல்லை, சாதாரண காரணங்களே போதும்என்பதை எடுத்துக் காட்டிடத்தான்.

பெப்ருவரி 2001 இலும், பர்மாவில் இப்போது முஸ்லிம்கள் கூட்டாகக் கொலை செய்யப்பட்டதைப் போல், கொலை செய்யப் பட்டார்கள். காரணம், ஏழு புத்தமதத்தைச்ச ார்ந்தவர்கள் ஒரு டீ கடையில் கேக்குகளைச் சாப்பிட்டார்கள். டீயும் குடித்தார்கள். டீக்கடையை நடத்திக் கொண்டிருந்தவர் ஒரு முஸ்லிம் பெண்மணி. இவர் குடித்த டீக்கு காசு கேட்டார். தரமட்டோம் என அடம் பிடித்தார்கள் புத்தமதத்தைச்சார்ந்தவர்கள். அத்தோடு அந்தப்பெண்மணியைத் தாக்கவும் செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் இனப் படுகொலை களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அப்போது நடைபெற்ற கலவரம் சொன்ன செய்தி முஸ்லிம்களுக்குப் பர்மாவில் இடமில்லை, அவர்கள் அங்கே வாழ்ந்தால் இன படுகொலை களுக்கு உள்ளாவார்கள் என்பதே.

ஐக்கிய நாடுகளின் சபை 1981இலேயே மேற்கு பர்மாவில் வாழும் முஸ்லிம் கள்,ரோங்கிய்யா முஸ்லிம்கள் பர்மாவின் பூர்வகுடிமக்கள் தாம் என அறிவித்துள்ளது .

ஆனால், பர்மாவில் வாழும் புத்தர்களும் ஆளும் வர்க்கத்தினரும் எதிர்கட்சியினரும் அவர்கள் பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்றொரு கருத்தைத் தொடர்ந்து பரப்பி வருகின்றார்கள்

.இப்போது ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதலைவர் எனப் போற்றப்படும்(தென் ஸியங்: ஜிபிணிமிழி ஷிணிமிழி)என்ற ஆட்சியாளன் 2012-ஜுனில் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கும் போதே- ரோங்னியா முஸ்லிம்கள் பர்மாவின் பூர்வ குடிகளல்ல அவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என அறிக்கைவிட்டார்.

இவரது அறிக்கை ஏற்கெனவே முழுஅளவில் கலவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை மேலும் உசுப்பேற்றி விட்டது.

## 2001 மே பாமியான் சிலைகளும் பர்மாவும்

2000 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானின் பாமியான் பகுதியிலிருந்த சிலைகள் அகற்றப் பட்டன. அதற்குக் காரணம் ஆப்கானிஸ்தானில் ஆட்சிச் செய்து கொண்டிருந்த தாலிபான்கள் எனக் கூறப்பட்டது.

ஆனால் அதுவே, பர்மாவில் இன்னொரு இனப்படுகொலையை நடத்திட போதுமானதாக இருந்தது.

பாமியான் புத்த சிலைகளைக் காரணங் காட்டி பர்மாவில் ஒருபெரும் இனப்படு கொலையை நிகழ்த்தினார்கள்.

300 பள்ளிவாசல்களை-மஸ்ஜித்களை தரைமட்ட மாக்கினார்கள். எந்த அளவுக்கு இந்த மேற்கு பர்மாவில் பள்ளிவாசல்கள் தரைமட்ட மாக்கப்பட்டன என்றால், அங்கு முஸ்லிம்கள் தொழுவ தற்கு பள்ளிவாசல்களே இல்லாமல் போய்விட்டன. பல மாதங்கள் முஸ்லிம்கள் தொழுகைகளை தங்கள் இல்லங்களிலேயே நிறை வேற்றிட வேண்டியவர்களானார்கள்.



பாமியான் சிலை உடைப்பை முஸ்லிம் களைக் கூட்டாகக்கொலை செய்திட வும், அவர்களின் வழிபாட்டுத் தலங்களை சுவடுகள் இல்லாமலாக்கிடவும் ஒரு வாய்ப்பாகவே பயன்படுத்தினார்கள் என்பதே உண்மை.

ஈவிரக்கமற்ற இந்தக் கலவரங்களை முன்னின்று நடத்தியவர்கள் பௌத்தர்கள்தாம்.

‘தவ்கூட’ என்ற இடத்தில் “ஹன்தா மஸ்ஜித்” என்றொரு பெரிய மஸ்ஜித் இருந்தது இந்தப் பள்ளிவாசலை அரசே இடிக்க வேண்டும். இல்லையேல் நாங்களே இடிப்போம். அந்தப் பள்ளிவாசலை இடிக்கும் வரை நாங்கள் ஓயமாட்டோம் எனப் பிடிவாதம் பிடித்தார்கள் புத்தர்கள்.

பள்ளிவாசலை இடிக்கும் சாக்கில் 400முஸ்லிம் குடியிருப்புகளையும் அழித்தார்கள். (Source: Reuters (via)HRKL.org)

பள்ளிவாசலை இடிக்க நெருங்கும் போதுபள்ளிவாசலுக்குள் தொழுது கொண்டி ருந்தவர்களை அடித்தே கொன்றார்கள்.

## 1997 இல் நடந்தது

2012 இல் என்ன நடந்ததோ, இதுவே1997இலும் அப்படியே நடந்தது.

அப்போது 1997 இல் ஒரு கலவரத்தைத் திட்டம் போட்டு வைத்துவிட்டு இதே புரளியைக் கிளப்பிவிட்டார்கள். ஆமாம் புத்தமத பெண்ணொருத்தியை முஸ்லிம் ஒருவன் கற்பழித்துவிட்டதாக வதந்தியைப்பரப்பினார்கள். முஸ்லிம்களைக் கொன்று குவித்தார்கள்.

அன்று முஸ்லிம்களுக்கெதிரான கலவரத் தில் 1000 முதல் 1500 புத்தபிட்சுகள் கலந்து கொண்டார்கள்

.புத்தமத துறவிகள் கலவரக் களத்தில் இறங்கிடும் போதெல்லாம் ,பள்ளிவாசல் களையும், முஸ்லிம்களின் சொத்துக்களையும் வாகனங்களையுமே குறிவைத்தார்கள்.

100 புத்தமத துறவிகளைக் கைது செய்த போதே அன்றைய கலவரம் அடங்கியது.

இப்படி எடுத்ததெற்கெல்லாம் முஸ்லிம் களின் மேல் பாய்வதும் கொலை செய்வதும் கொள்ளையடிப்பதும், பர்மாவில் நிலவி வரும் ஒரு சூழல்.

எந்த அளவுக்கு, முஸ்லிம்கள் அந்நியர்கள், அதனால் அழிக்கப்பட வேண்டியவர்கள்,என்ற எண்ணங்கள் தழைத்தோங்கி நிற்கின்றன என்றால், இந்தோனேசியாவில் ஒரு சலனம் ஏற்பட்டால் கூட அடுத்தநாள் அதன் எதிர்ப்பையும், கொலைகளையும் கொள்ளை களையும் பர்மாவில் எதிர்பார்க்கலாம் என்ற அளவுக்கு நிலைமை கனன்று கொண்டி ருக்கின்றது.

## இதர கெடுபிடிகள்

பர்மாவில் வாழும் முஸ்லிம்கள் எப்போதாவது, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக் கொலை செய்யப்படுகின்றார்கள் என்பதோடு நின்றுவிடவில்லை. முஸ்லிம்கள்

மீதான கெடுபிடிகள், அடக்குமுறைகள் சர்வகாலமும், தொடர்ந்து கொண்டேதானிருக் கின்றன. அவர்களை-அதாவது முஸ்லிம்களை அங்கே வாழ்ந்திடும் உரிமையுள்ள முஸ்லிம்கள் என ஏற்றுக் கொள்ளாததினால் நிலங்களை வாங்குதல் வீடுகளைக்கட்டுதல் போன்ற பரிவர்த்தனை களில் அவர்கள் ஈடுபட இயலுவதில்லை. மேற்கு பர்மாவைப் பொறுத்த வரை அவர்கள் அப்படி நிலங்களை வாங்கினால் கூட அவர்கள் நிரந்தரமாக அங்கே வாழ்ந்திட இயலுவதில்லை. அவர்கள் சுதந்திரமாக சுற்றித்திரிந்திடவும் இயலுவதில்லை. திருமண நிகழ்வுகளைக்கூட ஆசுவாசமாக நடத்திட இயலுவதில்லை.

திருமணங்களைக் கண்காணிக்க வும் வருடத்திற்கு இத்தனை திருமணங்கள்தாம் என நிபந்தனை விதிக்கவும் புத்தமததுறவிகளைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் பெறுவதில் கூடபுத்தபிட்சுகள் ஒரு தம்பதியருக்கு இத்தனை குழந்தைகள் எனக் கட்டுப்பாட்டை விதித்துள்ளார்கள்.

அடிபட்டா லோ, அநியாயங்கள் நடந்தாலோ காவல் நிலையத்தில் புகார்களைப் பதிவு செய்திட இயலாது காரணம், அங்கே நீங்கள் இந்த நாட்டைச் சார்ந்தவர்களல்ல என விரட்டி அடித்து விடுகின்றார்கள். இதனால் மியான்மர் முஸ்லிம்கள் தினம் தினம் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார் கள். முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மிகைத்து விடுவார்கள்

அவர்களைக் கொன்றொழிக்கா விட்டால் பர்மா முஸ்லிம் நாடாக ஆகிவிடும் என்றொரு பிரச்சாரம், அங்கிருக்கின்ற புத்தமதத்தைச் சார்ந்தவர்களால் இடைவிடாமல் செய்யப்பட்டு வருகின்றது. அதனால்தான் கலவரங்களின் போது அதிகமாக முஸ்லிம் குழந்தைகள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப் படுகின்றார்கள்.

## பர்மா கலவரங்களின் மூளையும் கையும்!

நமது கண்களுக்கு முன்னால் காட்டப் படும் கொலைகள், கலவரங்கள் இவற்றிற்குப் பின்அரசின் இயந்திரம் ஒன்று 'சதாசர்வகாலமும்' செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதன் பெயர், DIRECTORATEOF DEFENCE SECURITY INTELLIGENCE, டைரக்டரேட் ஆஃப் டிபன்ஸ் செக்கியூரிட்டி இன்டலிஜென்ஸ் இந்த அமைப்பு பர்மாவின் உளவுத்துறை. இந்த உளவுத்துறை பல மக்கள் அமைப்புகளை நிறுவி முஸ்லிம்களை பர்மாவை விட்டு விரட்டும் பணியை நிறைவேற்றி வருகின்றது.

இந்த உளவுத்துறையில் இயக்கப்படும் பிரதான அமைப்புகள் இரண்டு(1) UNION SOLIDARITY ANDDEVELOPMENT ASSOCIATION (USDA): ஐக்கிய ஒருமைப்பாடு மற்றும் வளர்ச்சிக் குழுமம்.(2) STATE PEACE ANDDEVELOPMENT COUNCIL. அரசு அமைதி மற்றும் வளர்ச்சிகுழு [SPDC].இந்த இரண்டு அமைப்புகளும் பெயரில் காணப்படுவது போல் அமைதியான அமைப்பு கள் அல்ல. மாறாக அவை கலக மூட்டுபவை, கலகங்களை முன்னின்று நடத்துபவை. முஸ்லிம்களை சதாசர்வகாலமும் கண்காணித்து வருபவை. இப்போது நடந்த கலவரங்களை முன்னின்று நடத்தியதோடு. கலகங்கள் நடக்காத இடங்களுக்குப் பிரசுரங்களைப் பிரசுரித்து கலகங்களை உருவாக்கியவை.

2001 இல் நடந்த கலவரங்களின் போது பௌத்தர்கள் என்ற இனமே அழிக்கப்படவிருக் கின்றது என்ற துண்டுபிரசுரங்களை அதிக அளவில் விநியோகித்ததே, மேலே நாம் குறிப்பிட்ட இரண்டு அமைப்புகளுந்தான். அந்தப்பிரசுரங்களுக்கு இப்படிப் பெயர் வைத்திருந்தார்கள். "THE FEAR OFLOSING ONCE RACE ." நமது சொந்த இனத்தை இழந்துவிடும் அச்சம். [SOURCE:REUTERS PIC VIA: HRW.ORG.].

அதேபோல் இந்த 2011 கலவரங்களின் பின்னணியில் 300 பள்ளிவாசல்கள் இடிக்கப் பட்டன. முஸ்லிம்களின் வீடுகளும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இவற்றை எல்லாம் இடித்ததும் தரைமட்டமாக்கியதும் இடிபாடு களை அகற்றியதும் SPDC என்ற அமைப்பின் புல்டோசர்கள் தான். டாங்கூ 'Taungoo' என்னுமிடத்திலுள்ள பள்ளிவாசல்கள், 2002ஆம் ஆண்டு வரை மீண்டும் எழுப்பப்படாமலே இருந்தன. ஒவ்வொரு முறை கலவரங்கள்

நடந்திடும் போதும், பர்மாவின் உளவுத்துறையின் கீழ் இயங்கும் இந்த அமைப்புகள் SPDC & USDA. நேரடியாகக் கொள்ளையடிப்பதில் ஈடுபடுகின்றன. இப்போது 2012 இல் நடந்த கொள்ளை யடிப்புகளிலும் இந்த அமைப்புகள் நேரடியாக ஈடுபட்டன என்று BBC BRITISH BROAD CASTING CORPORATION பிரிட்டனின் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் உறுதி செய்தது.




(SOURCE: IBID & BBC News)

"Human Rights Watch" மனித உரிமைகள் கண் காணிப்பு மையம். முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்களை தூண்டுபவர்கள் SPDC & USPA என்ற அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தாம் எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். பல இடங்களில் இராணுவத்தினர் நேரடியாக களமிறங்கி கொலைகளைச் செய்தார்கள். அம்னஸ்டி இன்டர் நேஷனல் இதனை உண்மைப்படுத்துகின்றது.

## சீனாவின் உதவிகள்:

பர்மாவின் மொத்த மக்கள் தொகை 6 கோடிதான். ஆனால் அதன் நிலபரப்பு மிகவும் பெரியது. அத்தோடு அதன் இயற்கை வளங்கள் இன்னமும் அகழ்ந்தெடுக்கப்படவில்லை. இதை மிகவும் இலாவகமாகப் பயன்படுத்துவது சைனாதான். பர்மாவில் ரெங்கூனுக்கு அடுத்தாற்போல் சிறந்த முக்கிய நகரம், 'Mandalay' மண்டாலே என்பதுதான். இதனை சின்ன "பீஜிங்" சைனாவின் இரண்டாவது தலைநகர் என்கின்றார்கள் .காரணம் இந்த இடத்தின் மொத்த வியாபாரத்தையும் சைனாவே காவுகொண்டுவிட்டது.

சீனர்கள் எந்தத் தங்குத்தடையுமின்றி இங்கே வருகின்றார்கள். வாழுகின்றார்கள். சீனர்களின் தொடர் கெடுபிடிகளால் இங்கேவாழ்ந்த பூர்வ குடிகள், நகர்புறங்களை விட்டு, கிராமப்புறங்களுக்கு ஓடிவிட்டார்கள். 40லட்சம் சீனர்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம் களைப் பூண்டோடு ஒழிக்க நினைக்கும் புத்தமத வெறியர்களுக்குத் தங்குதடையின்றி ஆயுதங் களைத் தருகின்றவர்களும் சீனாவைச் சார்ந்தவர்கள்தாம். அஃது அவர்களுக்கு ஒரு வியாபாரமாகப் போய்விட்டது. நல்ல இலாபம் தரும் வியாபாரம். அன்றாடம் வந்து போகும் சைனாவைச் சார்ந்தவர்கள் பல்லாயிரம் எனக் கூறுகின்றார்கள்.

சீனாவைச் சார்ந்தவர்கள் செய்வதை யெல்லாம் வேடிக்கை பார்ப்பதைத் தவிர பர்மாவைச் சார்ந்தவர்களுக்கு இப்போது வேறு வழி இல்லை. மண்டாலேவின் உள்ளாட்சியில் நகராட்சி தலைவர்கள் போன்ற பல முக்கியப் பொறுப்புகளில் சைனாவைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். இதற்குப் பலக் காரணங்கள்: ஒன்று சைனாவைச் சார்ந்தவர்கள் தாங்கள் செய்யும் உதவிகளையெல்லாம் புத்தமதத்தின் சார்பில் செய்வதாகக் காட்டிக் கொள்கின்றார் கள். பௌத்த தீவிரவாதிகளுக்குத் தங்கு தடை யின்றி ஆயுதங்கள் கிடைத்துக் கொண்டிருக் கின்றன .இன்னொன்று, பர்மாவில் முஸ்லிம் களின் மேல் கட்டவிழ்த்து விடப்படும் கொடுமைகள், இனப்படுகொலைகள், இவற்றின்

பின்னணியில் பர்மாவின் ஆட்சியாளர்கள் உலக நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்திருக்க வேண்டும். ஆட்சியாளர்கள் தண்டிக்கப் பட்டிருக்கவேண்டும்.

அத்தனையையும் உலக அரங்கில் தடுத்துக் கொண்டிருப்பவர்கள், சைனாவைச் சார்ந்தவர்கள் தாம். இதற்கெல்லாம் கைமாறாக சைனா தனது உபரி மக்கள் தொகையை பர்மாவில்குடியேற்றிக் கொள் கின்றது. பர்மாவின் இயற்கை வளங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது. சைனாவிலிருந்து புற்றீசல் போல் வரும் மக்களைத் தடுத்திட இயலாது பர்மாவின் பௌத்தர்கள் சைனாவை சார்ந்தவர்களை இப்போது அநியாத்திற்குள்ளாகி நிற்கும் ரோகிங்னிய முஸ்லிம்கள் வாழ்ந்திடுமிடத்தில் குடியேற்றிட தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறு குடியேறிடும் சைனாவைச் சார்ந்தவர் களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து தந்திட **2013-2014** இல் முடியுமளவில் எரிவுாயு குழாய் வசதிகள் வேகமாகப் புதைக்கப்பட்டு- இணைக்கப்பட்டுவருகின்றன.

SOURCE: BURMA KILLINGTWO BIRDS WITH A STONE OR WIN,WIN SITUATION BY KANBAZAZAWIN.www.bbc.co.uk/news/world asia 1892 1960.

நேர்மையாளர்கள், நடுவுநிலை யாளர்கள், இவர்கள் ரோக்னிய்யா முஸ்லிம்களை நிற்கதியாக ஆக்கிவிட்டு விடுவீர்களா? எனக்கேட்டால் அதிபதி தின்சைன் முதற்கொண்டு அனைவரும் முஸ்லிம்களை வெளியேற்றுவது மட்டுமே வழி என்கின்றார்கள். சில அதிகாரிகள் முஸ்லிம்கள் கிழக்குப் பர்மாவில் சென்று வாழட்டும் என்பதாகக் கூறி விடுகின்றார்கள். மொத்தத்தில் இப்போது அராக்கன் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதாவது மேற்கு பர்மாவிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்கள், அகதிகள் முகாம்களிலேயே இருந்திட வேண்டியது வரலாம் அல்லது படகுகளில் வைத்து கடலில் அனுப்பப்படலாம். அவர்கள் அந்த படகுகளிலேயே மடிவதுமுண்டு ,இந்தோனேசியா சென்று கரையேறுவதுமுண்டு. [இதனை,பிற்பகுதியில் விரிவாகத் தந்துள்ளோம்]



## மேலைநாடுகளின் போட்டி

பர்மா என்ற மியான்மரின் மொத்த இயற்கை வளங்களையும் சைனா கைப்பற்றிக் கொள்ளக் கூடாது தங்களுக்குத் தான் அவைவேண்டும் என்பதில் மேலைநாடுகள் மிகவும்கவனமாக இருந்து வருகின்றன. அதனால் மியான்மர் என்ற பர்மாவின் மேல்விதித்திருந்த பொருளாதார தடைகளை மேலைநாடுகள் தளர்த்தியுள்ளன .இவர்களால் உருவாக்கப் பட்டவர்தான் ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் அம்மணி டா அங் சான் சூ கீ.ஞிணீஷ் கிஙுஸீரீ ஷிணீஸீ ஷிஙுஙு ரிஹ்வீ ஆனால் பர்மாவின் ஆட்சியாளர்கள் இந்த அம்மணியைப் பக்கத்தில் கூட அண்டவிடாமல் பார்த்து வருகின்றார்கள்.

## அண்டை நாடுகளின் மனிதாபிமானமற்ற செயல்கள்.

பௌத்தர்களுடன் பர்மாவின் இராணுவ உளவுத்துறையும் இணைந்தே தான் மேற்கு பர்மாவின் ரோங்னிய்யா முஸ்லிம்களைக் கொலை செய்கின்றார்கள். திட்டம் போட்டு, அவர்களை வெளியேற்றுகின்றார்கள். முஸ்லிம் பெண்களைக் கொலை செய்வதற்கு முன்னால் கற்பழிக்கின்றார்கள் புத்தமத துறவிகள். குழந்தைகளையும் குரூரமாகக் கொலை செய்கின்றார்கள். இந்தக் கொடுமைகள் தாழாமல் முஸ்லிம்கள் படகுகளில் ஏறி தப்பித்துச் செல்லுகின்றார்கள். அந்தப் படகுகளை பர்மாவின் இராணுவத்தினர் விசைப்படகுகளில் சென்று கவிழ்த்துவிட்டு வந்து விடுகின்றனர். கடலில் மூழ்கடிக்கப்படுகின்றார்கள் அந்த மக்கள். இவற்றில், உயிர் பிழைத்தவர்கள் இந்தோனேசியா சென்றால் மட்டுமே, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள். பங்களாதேஷ்-ஐ சார்ந்த எல்லைப்பாதுகாப்புப் படையினர் அவர்களை ,பங்களாதேஷ்-க்குள் அனுமதிப்பதே இல்லை.

பங்களாதேஷ் முஸ்லிம்கள், நம்மை ஆதரிப்பார்கள். அரவணைப்பார்கள் .ஏனெனில் நாம் முஸ்லிம்கள் என்பதனாலேயே குறி வைத்துத் தாக்கப்படுகின்றோம், என நம்பி



செல்லும் பர்மா முஸ்லிம்கள் ஏமாற்றப் படுகின்றார்கள். மீண்டும் கடலில் குதித்துத்தான் தப்பித்தாக வேண்டும் என்ற கையறு நிலை. பல நேரங்களில் அவர்கள் மீண்டும் பர்மாவுக்கே திரும்பிட வேண்டும் என்ற நிலை. அங்கே சென்றால் புத்தமத துறவிகள், தங்கள், பெண்களைத் தங்கள் முன்னாலேயே கற்பழிப்பார்கள் என்ற நிலை. இதனால் தங்கள் பெண்களை அப்படியே விட்டுவிட்டு, கடலிலே மூழ்கவிட்டுவிட்டு, வந்து விடுகின்றார்கள்.

இன்னும் சில செய்திகள் சொல்லும் நிலை நாம் இன்றளவும் கேள்விப்பட்டிறாத நிலையாகவே இருக்கின்றது. அதாவது தங்கள் பெண்களை ஆண்களே கடலில் தள்ளி விடுகின்றார்கள். காரணம், புத்தமத துறவிகளிடம் மானத்தையும் உயிரையும் இழப்பதை விட உயிரை இழப்பது சிறந்தது என அந்த ஆண்கள் முடிவு செய் கின்றார்கள். பங்களாதேஷ் அந்த மக்களைக் கைவிட்ட அவலத்தை இப்படிப்பதிவு செய்கின்றார்கள் .If the refugees thought a shared faith wouldget them, past the border, and into thewelcoming Bangladesh arms, they were in fora shock. உயிருக்குப் பயந்து ஓடிய அகதிகள், நம்மைப் போல் ஈமான் கொண்டவர்கள் தங்களை எல்லைக் கடக்க அனுமதிப்பார்கள், நம்மை அன்போடு அரவணைப்பார்கள் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்குப் பங்களாதேஷ் எல்லையில் அதிர்ச்சிகளே காத்திருந்தன. இன்னொரு பார்வையாளர் இப்படிப்பரிதாபப்படுகின்றார்.

"When these Muslim Flue to Bangladeshauthorities send them back to Burma., Wheremass rapes and brutalities have taken placeagainst women. Many Muslim men pushedtheir wives, daughter and other female familymembers into sea fearing consequences ofreturning to Burma with Women and girls whenauthorities in Bangladesh not allowed them toenter the shore of Bangladesh." Ýî£ó‹:Artice By ABDUL HANNAN SIWANINADWI: BURMA MUSLIMS AND BlindWorld. ahannan @111yahoo.co. BURMESEMUSLIMS AND THE BLIND WORLD.

அதாவது "இந்த முஸ்லிம்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பங்களாதேஷ்-ஐ நோக்கி ஓடியபோது, பங்களாதேஷ் அதிகாரிகள் அவர்களை மீண்டும் பர்மாவுக்கே அனுப்பினார்கள். அந்த பர்மாவில் பெண்களைக் கற்பழிப்பதும் பெண்களைக் கொடுமைகளுக் குள்ளாக்கிடுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன. நிறைய முஸ்லிம்கள் தங்கள் மனைவி, மகள்களை, இன்னுமுள்ள பெண் உறுப்பினர்களை, கடலில் தள்ளினார்கள். அவர்கள் பர்மா திரும்பினால் நடக்கும் பயங்கரங்களை எண்ணி அஞ்சினார்கள். தப்பிச் சென்ற முஸ்லிம்களில் சிலர் தாய்லாந்து சென்றனர். அவர்களைப் படகுகளில் ஏற்றி, நடுக்கடலில் விட்டுவிட்டு வந்துவிட்டனர் தாய்லாந்து இராணுவத்தினர்.

பல படகுகளில் தப்பிச் சென்றவர்கள் திரும்ப வருவதாகக் கண்டால், அவர்களைப் பர்மாவிலுள்ள பாதுகாப்புப் படையினரே குண்டுகளை வீசி அழித்தார்கள். கலவரங்கள் தொடங்கிய மூன்று நாட்களுக்குள், 20,000 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 90,000 முஸ்லிம்கள் அகதிளாக்கப்பட்டனர். புத்தமதத்தை ஏற்றுக் கொண்டால் விட்டுவிடுவோம் என்றொரு மதத் திணிப்பு எஞ்சியவர்கள் மீது செய்யப்படுகின்றது. நிச்சயமாக இத்துணை பெரிய இழப்பு,பர்மாவின் இராணுவத்தின் துணை, காவல்துறை புத்தத் துறவிகளுக்கு தொடர்ந்து ஆயுதங்கள் வழங்குதல் இவை இன் றிநிச்சயமாக நடந்திருக்கவியலாது.

## தாலிபான்கள் எச்சரிக்கை

இத்துணை பெரிய அநியாயங்கள் நடந்துகொண்டிருக்கும் போது, உலக நாடுகள் ஒலிம்பிக்- சிரியா என தங்களது கவனத்தைத் திருப்பிக் கொண்டிருந்தன. மேலைநாடுகள் பர்மாவின் மீதிருந்த பொருளாதார தடைகளைத் தளர்த்திக் கொண்டிருந்தின. நமது இந்தியா பர்மாவின் நல்வாழ்வுக்குப்பல பொருளாதாரத் திட்டங்களைஅறிவித்துக் கொண்டிருந்தது.

உலக ஊடகங்கள் மொத்தமாக இருட்டடிப்புச் செய்தன. இந்நிலையில், ஆப்கானிஸ்தானில், அமெரிக்க பயங்கர வாதத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும், தாலிபான்கள் ஓர் அறிக்கை விட்டார்கள்.அதில் பர்மாவில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்காக பர்மாவை பழிக்குப்பழி வாங்குவோம் எனக்கூறியுள்ளனர். தாலிபான்கள் சார்பில் அறிக்கைவிட்டுள்ள இஹ்ஷானுல்லாஹ் இஹ்ஷான்இப்படிக் கூறியுள்ளார்.

Regarding the current situation in Myammarwhere Muslims are going through their toughestdays, the talibans is with its brothers and sisterswe want to give a reminder to Muslim therethat we have not forgotten you, we will takerevenge of your blood".

அதாவது, மியான்மர் முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாளின் மிகவும் நெருக்கடியான காலத்தைக் கடந்து கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் சகோதரர்களுடனும், சகோதரி களுடனும் இருக்கின்றோம். நிச்சயமாக நாங்கள் உங்கள் இரத்தங்களுக்காகப் பழிவாங்குவோம். முல்லா உமர் அவர்கள் விட்ட அறிக்கையில் இது முஸ்லிம்களுக்கெதிரான குற்றம்மட்டுமல்ல மனித இனத்திற்கு எதிரான குற்றம் எனக் கூறியுள்ளார்கள். (rediff.com)

முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு ரோக்ங்னியி முஸ்லிம்களை பர்மா தன்னுடைய குடிமக்கள் என அறிவிக்கவேண்டும் எனக் கூறியுள்ளது.

## யார் இந்த பர்மாவாழ் முஸ்லிம்கள்?

பர்மாவின் மேற்கு பகுதியிலுள்ள அன்காரா மாநிலம். அதில் பங்களாதேஷ் எல்லையோரம் வாழும் இந்த முஸ்லிம்களை ரோஙனிங்கா முஸ்லிம்கள் என அழை கின்றார்கள். இவர்களைத் தான் புத்ததுறவிகள், பர்மாவின் காவல்துறை, இராணுவம் இவையெல்லாம் இணைந்து கொலை செய்கின்றன. கேட்டால் அவர்கள் பர்மாவின் குடிமக்களல்ல எனக்கூறுகின்றார்கள். 1982 ஆம் ஆண்டில் பர்மாவில் குடிமக்கள் சட்டம் Citizenship Law குடிமைசட்டம்- என்றொன்று கொண்டு வந்தது. அதில் குடிமக்களை மூன்றாகப் பகுத்துக் காட்டியது. குடிமக்கள் Citizen, இணைக்குடிகள்Associate Citizen, இயற்கை யான குடிகள்Natural Citizen இந்த மூன்று பிரிவினரும் குடிமக்கள் தாம். மூன்று பிரிவினருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. இந்தப் பகுப்பல்லாமல், மற்றவர்களை வெளிநாட்டவர்கள் எனக் குறிப்பிடுகின்றது.

இவர்களும் தங்களைப் பர்மா அரசோடு பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் அரசு பதவிகளுக்கோ இதரப் பதவிகளுக்கோ உள்ளாட்சி பதவிகளுக்கோ தகுதியற்றவர்கள். ஆனால் முஸ்லிம்களைப் (ரோங்னிகா முஸ்லிம்களைப்) பற்றி எதுவுமே சொல்ல வில்லை. அதனால் அவர்கள்'Stateless' நாடற்றவர்கன் என எடுத்துக் கொள்ளப் படுகின்றார்கள். அப்படியானால் அங்கே முஸ்லிம்கள் எப்போது எப்படி சந்தித்தார்கள் என்பது மிகவும் முக்கியம். அதனை சுருக்கமாகப் பார்ப்போம்.

## பர்மாவுக்கு இஸ்லாத்தின் வருகை!

பர்மாவின் வரலாற்றை வரைவோர் பலர்அனைவரும் பர்மாவின் வரலாற்றை 9 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் தொடங்குகின்றார்கள். இதனை பர்மாவின்றி ஸிணிபிமிஷிஜிளிஸிசீ பர்மாவின் முன்வரலாறு எனப்பெயரும் சூட்டுகின்றார்கள். இஸ்லாம், பர்மாவுக்கு வந்ததும் இதே 9ஆம் நூற்றாண்டில் தாம் என்பதற்கு அழுத்தமான ஆதாரங்கள் உண்டு. முதலில் வந்தவர்கள், இரண்டு அரபுவணிகர்கள் தாம். இவர்கள் வணிகர்கள் என்றாலும் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதே இவர்களின் நோக்கம்.

இவர்களின் பெயர்கள் (1) BYAT WIBYAT TA, பய்யாத் வி பய்யாத்தா இவை பர்மீஸ் மொழிப் பெயர்கள் இவர்கள் இருவரும் ஒட்டிப்பிறந்த சகோதரர்கள். இவர்களை பர்மாவின் வரலாற்றில் Two Arab Muslim Sailors இரண்டு அரபு முஸ்லிம் பயணிகள் எனக் குறிப்பிடுகின்றார்கள். இஸ்லாத்தை இகமெங்கும் பரப்பிட போந்த இலட்சிய செல்வங்கள், அந்த இடங்களிலேயே உறைந்து திருமண உறவுகளை வளர்த்து அங்கேயே இறைவனிடம் சென்றார்கள். அதேபோல்தான் இந்த இரண்டு இலட்சிய வீரர்களும் பர்மாவிலேயே வாழ்ந்து-மணந்து- இஸ்லாத்தைப் பரப்பினார்கள். அங்கே தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள்.

இவர்கள் பர்மாவுக்கு வந்தது இதேஅன்காரா மாநில ரக்கின் பகுதி என்றும் அன்று அது Ayzavadi River Delta. ஆய்சாவாடி படுகை என்று பேசப்பட்டது. இதனை CHRONICLES OF CHINA 860AD-முதல் 1055 வரை என்ற வரலாற்று பதிவு செய்கின்றது. முதல் முஸ்லிம்கள் வந்து இறங்கிய இந்த இடந்தான் இப்போதுகலவரப் பூமியாகத் திகழ்கின்றது. இவர்களின் காலம் 1044 AD கி.பி. எனக்குறிப்பிடப்படுகின்றது. இதனை பதிவு செய்கின்ற அனைத்து வரலாற்று ஏடுகளும் முஸ்லிம்கள் அங்கே வந்த காலக்கட்டத்தை Prior to the Establishment of FIRST BURMESE EMPIRE 1055 AD. என்றே குறிப்பிடுகின்றன. ‘அதாவது 1055 இல் முதல் பர்மீய சாம்ராஜ்யம் நிலை நாட்டப்படுவதற்குமுன்பு’ என இஸ்லாத்தின் வருகையை அடையாளப் படுத்துகின்றார்கள். அன்றைய நாட்களில் முஸ்லிம்களை‘Pathi’ பதி என அழைத்தார்கள்.

இஃது பாரசீக மொழியாகிய ‘Bago’ பாகோ என்பது “மறுவி” வந்தது எனவும் குறிப்பிடுகின்றார்கள். இஃது பர்மீய மொழி வளர்ச்சியில் முஸ்லிம்களுக்கும், பாரசீ மொழிக்கும் சிறந்த பங்குண்டு என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கும். முதல் பர்மீய

சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்பியவர் மன்னர் அனாத்வாறா 'Anatwara' தான் இவர்தான் இந்த சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்களை தாராளமாகப் பயன்படுத்தினார். இதனிடையே சீனாவை நோக்கிப் பயணம் செய்த அரபுக்கள் பலர், பர்மாவின் கரையோரம் வந்து இளைப்பாறுவது வழக்கம். இவர்களில் பலர் பர்மாவிலேயே தங்கிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை தங்கள் படைகளில் பர்மீய மன்னர்கள் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். தங்கள் பட்டாளத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக மத்திய பர்மாவின், வளமான பகுதிகளில் இவர்களுக்கு வீடுகளும், மனைகளும் இதர வழிகளும் செய்து தரப்பட்டன.ப ர்மீய சாம்ராஜ்யத்தின் மூன்றாம் மன்னன் (3rd King) என அழைக்கப்படும், கியான்ஜோத்தா. இப்படி முஸ்லிம்களை வாழவைத்தவர்களில் ஒருவர். பர்மீய படைகளில், பணியாற்றிய முஸ்லிம் வீரர்களுக்கு 'ஹலால்' உணவுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பர்மா மன்னர்கள் நடத்திய சில போர்கள் இந்தியாவுடனும் நடந்தது. இந்தப் போரில் இந்தியர்களின் படைகளுடன் போராடிய முஸ்லிம்கள் கைதிகளாக பர்மீய படைகளிடம் சிக்கியது முண்டு. அவர்கள் பர்மா முஸ்லிம் களோடு இணைக்கப்பட்டு அங்கே வாழ வைக்கப் பட்டார்கள்.

இதனால் European Chronicle, ஐரோப்பியர்களின் வரலாற்றுச் சுவடுகள்,Chinese Chronicle சைனாவின் வரலாற்றுவரைவுகள், அனைத்தும் முஸ்லிம்களின் வருகையை குறிப்பிடும் போது முஸ்லிம்கள், போர்வீரர் களாகவும், (Military Permnet)adventures-சாதனை வீரர்களாகவும், பலவிஷயங்களில் புதுமையைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தவர்களாகவும் "PIONEERS"கைதிகளாகவும் வந்தார்கள் என்றே குறிப்பிடுகின்றார்கள்.

பர்மாவை கட்டியெழுப் பிடும் முயற்சியில் பர்மாவின் மன்னர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களின் படைகளில் இரண்டு கப்பல்களை இணைத்தவர்களும் முஸ்லிம்கள் தாம் அந்தக் கப்பல்களின் பெயர்கள், Ahlakaree& Salamath அஹ்லாகரி மற்றும் சலாமத். இவை இரண்டும் அரபு இஸ்லாமியப் பெயர்கள். சா, நேமின் கி என்ற மன்னர்,முகலாய மன்னர் ஷ ஆலத்திற்கு பரிசில்களை அனுப்பி வைத்தார். அதில் இந்த இஸ்லாமியப் பெயருடைய கப்பலே அனுப்பப்பட்டது. அதற்கு தலைவனாகச் சென்றவர் ஓர் அரபுதான் இஃது 17 ஆம்நூற்றாண்டில் நடந்தது.

முஸ்லிம்களின் நேர்மை நிர்வாகத்திறமை இவற்றைப் போற்றி அவர்களுக்கு நிருவாகத்தில் அனேகப் பொறுப்புகளை வழங்கி இருந்தார்கள். 1846-1853க்கு இடைப்பட்டக் காலத்தில், பேகன் மின், என்ற மன்னன் பர்மாவின் அப்போதைய தலைநகர், அம்மாராபுராவின் ஆளுநராக பர்மாவைச் சார்ந்த ஒரு முஸ்லிம்,"**யு. ஷவியாஹ்**"(u. shweoh) ஐதான்நியமித்திருந்தார். மன்னருடைய தனிமைச் செயலாளராக u.Paing, யு. பெங்க் என்ற பர்மாவைச் சார்ந்தமுஸ்லிம்தான் நியமிக்கப் பட்டிருந்தார்.

இந்த மன்னருடைய தனிமைச் செயலர் தன்னுடைய பங்காக, 'தாவங்தாமான்' என்ற ஆற்றைக் கடக்க இரண்டு மைல்கள் நீளமுள்ள ஒரு பாலத்தைக் கட்டி பர்மாவுக்கு அர்ப்பணித்தார்.1850களில் இந்த ஏரியைச் சூழ்ந்த பகுதிகளின் கவர்னராக பர்கான் என்பவர்தான் இருந்தார். அவர் ஒரு முஸ்லிம். பர்மாவின் மன்னர்கள் தங்களுடைய அந்தரங்க செயலாளர்களாகவும், நம்பிக்கைக்குரியவர் களாகவும் முஸ்லிம்களையே வைத்திருந்தார்கள்.

அரசவை ஆலோசகர்கள் மெய்க்காப்பாளர் கள் தகவல் தொடர்புகளைப் பரமாரிப்பவர்கள். மொழிபெயர்ப்பாளர்கள் அரசவைக்கு வரும் வெளிநாட்டு தூதர்கள், விருந்தினர்கள் இவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, நல்லுறவு அனைத்தும் முஸ்லிம்களின் கண்காணிப்பின் கீழ்தான் விடப்பட்டிருந்தன. இந்தப் பணிகளையெல்லாம் செய்யும் முஸ்லிம்கள் 20,000 முஸ்லிம் குடும்பங்கள் அரசவைக்கு பக்கத்தில் 'INNER CIRCLE' உள்வட்டாரத்தில் வாழ்ந்தன. 1781-1819க்கும் இடைப்பட்டக் காலத்தில், மன்னர் பாடாவாப் பாயா

(Badawapayah!) பல்வேறு அரசாணை களைப் பிறப்பித்தார்.

இவற்றின் வழி முஸ்லிம்களின் குடியுரிமையை உறுதி செய்தார். Royal decrees to recognize MuslimCitizenship. அன்றைய நாள்களில் 20,000 குடும்பங்களின் பராமரிப்பு என்பது எளிதான விவகாரமல்ல என்பதை எல்லோரும் புரிந்திட இயலும். இந்தக் குடும்பங்களுக்கிடையே, எழும் வழக்குகளை இஸ்லாமிய ஷரீஅத் இன்அடிப்படையில் தீர்த்து வைத்திட ஒரு தலைமை நீதிபதியை மன்னர் நியமித்து அவருடைய தேவைகளையும் நிறைவேற்றி வந்தார். அந்த தலைமை நீதியின் பெயர்ஆபித்ஷா ஹிஷைனி. இவருடைய அடக்கம், நேர்மை எளிய வாழ்க்கை இவை பர்மீய மக்களிடையே இஸ்லாம் இன்னும் வேகமாகப் பரவிட வகை செய்தன. இவருடைய அடக்கஸ்தலம், அம்மாராபுராவில் இன்றளவு மிருக்கின்றது. மன்னருடைய படையிலுள்ள கப்பல்படைக்கு முஸ்லிம்கள்தாம் "எல்லாம்" என்றிருந்ததைப் போல் குதிரைப் படைக்கும் முஸ்லிம்கள் தாம், என்றொரு நிலை இருந்தது.

குதிரைப்படையிலிருந்த 70பிரிவுகளுக்கும் அப்துல் கரீம்கான், வாலிகான் ஆகியோர்தான் பொறுப்பு. அப்போது சைனாவின் பர்மீய தூதராக நஸ்ரத்கான் சாகிப் என்பவர்தான் நியமிக்கப்பட்டிருந்தார்.1824இல் ஆங்கிலேயர் களோடு நடந்தபோரில் 100 குதிரைப்படைகளை வழிநடத்திச் சென்ற கான் சாஹில் போ என்பவரின் வீரதீரங்களே வெற்றியைப் பெற்றுத் தந்தன. இதனால் போர்களத்திலிருந்து திரும்பிய கான் சாஹில் போ அவர்களை வரவேற்று சிறப்பு சிவப்புக் கம்பளங்கள் தருவிக்கப்பட்டு வழியெங்கும் விரிக்கப்பட்டன. இதனை வெல்வெட்கர்ப்பட்டா விரிப்பு என்றும் சில வரலாற்று ஆசியர்கள் குறிப்பிடுகின்றார்கள். முஸ்லிம் குடும்பங்கள்வாழ்ந்த பகுதிகளில், பல்வேறு கட்டடக் கலைகளில் வடிவமைக்கப் பட்ட மஸ்ஜித்கள் பள்ளிவாசல்கள் கட்டப் பட்டிருந்தன .

இவற்றுள் ஜீஸி மஸ்ஜித் என்பது மிகவும் கீர்த்தி வாய்ந்தது. இஃதுமான்டோலே டே நகரில் 27 ஆம் தெருவில் இருக்கின்றது. இந்த மண்டோலே நகரை கட்டியெழுப்புவதில் 400 முஸ்லிம்கள் முழுமையாக உழைத்தார்கள். பர்மீய மொழியில் அரபுமொழியின் கலப்பும் சேவையும் ஏராளம். இப்போது கலவரப் பகுதியாகிய அன்காரா மாநிலம் ரோக்னிங்கா முஸ்லிம்கள், அரபுக்கள், மங்கோலியர்கள், இந்தியர்கள், சைனர்கள் என பல்வேறு நாட்டவர்களால் ஆனவர்கள். இவர்கள் மிகப்பெரியதொரு முஸ்லிம் சமுதாயமாக வாழ்ந்து வளர்ந்தவர்கள்.

இப்படி பர்மாவின் வரலாறு பாரம்பரியம், பண்பாடு, மொழி கலாச்சாரம், வளம், வாழ்வு அனைத்திலும் இரண்டற கலந்தவர்கள் முஸ்லிம்கள். அவர்களை அந்நியர்கள் என அந்நியமாக்குவதும், அவமானப்படுத்துவதும், அழிப்பதும் அடாத செயல்கள் அவர்கள் அந்தநாட்டுப் பூர்வீகக் குடிகள். அவர்களை அங்கேயே பாதுகாப்பாக வாழ வைப்பது பர்மா மக்கள் தங்களுக்குத் தாங்களே செய்திட வேண்டிய நன்றிக் கடன். இடையில் வந்த பௌத்தம் அதற்குக் குறுக்கே நின்றிடுமேயானால், அதனை அப்புறப்படுத்து வதே சிறந்தது.

## பர்மாவின் இடைக்கால வரலாறு!

ஆங்கிலேயர்கள் இந்திய பெருநாட்டில் காலெடுத்து வைத்த நாள் முதலே பர்மாவையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.1885-இல் பர்மாவை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திடவும் செய்தார்கள். 1930இல் பர்மா மக்கள் இந்தியர்கள் வெளியேறிட வேண்டும் என்றொரு பெரும்கலவரத்தை நிகழ்த்தினார்கள். அதிலும் முஸ்லிம்களே அதிகமாகக் குறி வைத்துத் தாக்கப்பட்டார்கள்.

1937 இல் பர்மா பர்மா மக்களுக்கே என்ற இயக்கம், ஆங்கில இந்திய ஆதிக்கத்திருந்து வெளியேறியது.1937 இல் பர்மா பிரிந்தது என்று மக்கள்கூறினாலும், ஆங்கிலேயர்கள் (Separately Administered domain) தனியாக நிருவகிக்கப் பட்ட தன்னாட்சி பகுதி என அழைத்தார் கள்.அப்போது நடந்த கலவரத்திலும் முஸ்லிம்கள் தாம் குறிவைக்கப்பட்டார்கள்.

.பின்னர் பிரிட்டனின் அதாவது ஆங்கில ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபடும் போராட்டத்தை நடத்தினார்கள்.

1948 இல் ஆங்கில ஆதிக்கத்திருந்து முற்றாக விடுபட்டார்கள் அதாவது இந்தியா விடுதலையடைந்து ஒரு வருடத்திற்குப் பின் விடுதலை அடைந்தார்கள். ஆனால் அது ஒருவித சர்வாதிகார ஆட்சியாக அமைந்தது. அந்த ஆட்சியை அகற்றிட சர்வாதிகார எதிர்ப்பு அணியொன்றை தொடங்கினார்கள் பர்மா மக்கள். அதில் முஸ்லிம்கள் BMC என்ற பெயரில் பர்மா முஸ்லிம் கவுன்சில் என்ற பெயரில் தங்களை ஒருங்கிணைத்து அதில் கலந்து கொண்டார்கள். இஃது தளபதி "நூ" என்பவரின் தலைமையின் கீழ் நடந்தது .சர்வாதிகாரத்திற் கெதிரான இந்தப் போர் 1962 இல் பெரும் வெற்றியைப் பெற்றது.

ஆனால் அந்தப்போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முஸ்லிம்கள் வஞ்சிக்கப் பட்டார்கள். ஜெனரல் நூ புத்தமதமே பர்மாவின் மதம் என அறிவித்தார். BMC என்ற பர்மா முஸ்லிம் கவுன்சிலை கலைக்கப்பணித்தார். இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தினார். முஸ்லிம்களை தொடர்ந்து கொடுமைப் படுத்தினார். 1982 இல் நடைபெற்ற தேர்தல் களின் பின்னணியில் தென்சியாங் ஆட்சியாளர் President ஆனார்.

இராணுவத்தின் பிரதிநிதியாகத்தான் அவரைப் பார்க்கவேண்டும். ஏனெனில் பர்மாவிலிருக்கும் ஜனநாயகத்தை (Military packed democracy) இராணுவம் பின்னணி யிலுள்ள ஜனநாயகம் என்றே அனைவரும் அழைக்கின்றார்கள். அவர் முஸ்லிம்களின் பிரச்சனைக்கு, அவர்களை நாடு கடத்துவதே ஒரே வழி என மே 28 கலவரத்திற்கு முன்னும்-கலவரத்தின் போதும் அறிவித்தார்.

அந்த முஸ்லிம்கள், உலக முஸ்லிம்களின் பாதுகாப்பின் கீழ் வந்திட வேண்டும், என்ற துருக்கியின் என்ரோகனின் அறிவிப்புபொருள் பொதிந்தது.



## பர்மாவின் தற்போதைய நிலை

காலங்காலமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறீர்கள். பிறந்தது இந்த ஊரில் தான், வளர்ந்ததும் இந்த ஊரில் தான். திடீரென்று ஒரு நாள் உங்களிடம் அரசாங்கம் நீயோ அல்லது உன் மூதாதையரோ 190 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் தான் வாழ்ந்து வந்தீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும், இல்லையெனில் அகதி முகாம்களுக்கு சென்று இந்த நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கூறினால் உங்கள் நிலை எப்படி இருக்கும். இரத்தம் கொதிக்கும் அல்லவா? அதை விட கொடுமை இதை எவ்வாறு நிரூபிப்பது?

அரசாங்கம் கேட்பது எட்டு தலைமுறைக்கான தகவல் அல்லவா? இவ்வாறு யாரிடம் கேட்டாலும் இருக்காதே? ஆனால் அரசாங்கம் ஏன் நம்மிடம் மட்டும் இவ்வாறு கேட்கிறது? என்ற எண்ணம் உங்களை அழுத்தும் அல்லவா?

அதுதான் பர்மா ரோஹிங்யா முஸ்லிம்கள் விஷயத்தில் நடந்தது. பர்மாவின் சொந்த மக்களான ரோஹிங்யா முஸ்லிம்களை அந்த நாடு குடிமக்களாக அங்கீகரிக்க வேண்டும் என்றால் 1823ஆம் ஆண்டிற்கு முன்னதாக அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வந்ததை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

இது முழுக்க முழுக்க நம்மை நாட்டை விட்டு துரத்துவதற்காக செய்யப்படும் முயற்சி, இது அநியாயம், இது அக்கிரமம், இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

நமக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடக்கிறது. ஏன் யாருமே இதைப்பற்றி கேள்வி கேட்க முன்வரவில்லை?

இது பர்மா முஸ்லிம்களின் மனதில் உள்ள கேள்வி.

## முஸ்லிம்களை ஏன் கொலை செய்கிறோம்?

இதற்கான பதிலை அஹிம்சா மூர்த்திகள் பர்மாவின் புத்த பிட்சுகள் தந்துள்ளனர். அஷின் விராத்து என்ற புத்த மடாதிபதி (969 என்ற இயக்கத்தை சேர்ந்தவன்) இவ்வாறு கூறுகிறான், "புத்த மதம் அஹிம்சையை தான் போதிக்கிறது அதற்காக வெறி நாய்களுடனும் விஷ பாம்புகளுடனும் (முஸ்லிம்களுடன்) உறங்க முடியாது."

"இவர்கள் அதிகமாக பிள்ளைகளை பெற்றுக்கொள்கின்றனர். புத்த மதத்தை சேர்ந்தவர்களை மதம் மாற்றுகின்றனர். இதனால் இவர்களின் (முஸ்லிம்களின்) மக்கள் தொகை பெருகி விட்டது. இவர்கள் கூடிய விரைவில் பெரும்பான்மையாகிவிடுவார்கள். இதனை தடுத்தேயாக வேண்டும்."

"முஸ்லிம்கள் நம் நாட்டை, நம் மக்களை, புத்த மதத்தை அழித்து விட்டனர்"

"அது மட்டுமல்ல முஸ்லிம்கள் பெரும்பான்மை புத்தமதத்தை சேர்ந்தவர்களுக் கெதிராக ஜிஹாத் செய்வார்கள்"

இந்த கோஷத்தோடு தான் பர்மா முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். இந்த கோஷம் பர்மாவில் மட்டும் தான் கேட்கிறதா? இந்த கோஷங்களை நாம் ஏற்கனவே கேட்டது போல் உள்ளதா? ஆம் இதே கோஷங்கள் தான் இந்தியாவிலும் கேட்கிறது. இதே கோஷங்கள் குஜராத்திலும் கேட்டது. ஏன் இதே கோஷங்கள் உலகெங்கம் கேட்கின்றது. இதன் பின்னணியில் இருப்பது என்ன? கலாச்சாரங்களின் மோதல் (Clash of Civilisation) என்ற புத்தகத்தில் தெளிவாகவே சாமுவேல் ஹன்டிங்டன் என்பவன் இதனை கூறுகிறான்.

"உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அதிகமான பிள்ளைகளை பெற்றுக் கொள்கி றார்கள். இதனால் 2025ம் ஆண்டில் உலகில் முஸ்லிம்களே அதிகமான மக்கள் தொகையில் இருப்பார்கள். மேலும் 2025ல் உலகின் சக்தியாக முஸ்லிம் இளைஞர்களே இருப்பார்கள். எனவே, இது தடுக்கப்பட்டாக வேண்டும், முஸ்லிம்கள் எண்ணிக்கை குறிப்பாக முஸ்லிம் குழந்தைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாக வேண்டும்."

எனவே, தான் உலகெங்கும் முஸ்லிம்கள் தாக்கப்படுகிறார்கள். குழந்தைகள் கருவறுக்கப் படுகின்றன. பாலஸ்தீனத்திலும் இதுவே தான் செயல்படுத்தப்படுகின்றது.

எனவே, இதற்கு யூதம், கிறிஸ்தவம், இந்து, பௌத்தம் என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது. முஸ்லிம்களை கருவறுக்கும் பணியில் இவர்கள் அனைவரும் தங்களை இணைத்து கொள்வார்கள். முஸ்லிம்களை எதிர்க்கும் பணியில் இவர்கள் ஓரணியில் நிற்பார்கள் என்பதே உண்மை.

இவர்களுக்கான அஜென்டா கொடுக்கப் பட்டாகிவிட்டது. இங்கே மோடி, அங்கே அஷின் விராத்து என ஆட்கள் வேண்டுமானால் மாறலாம். ஆனால் காட்சிகள் மாறாது. இஸ்ரேல், இந்தியா, இலங்கை, பர்மா என நாடுகள் மாறலாம். ஆனால் படுகொலை ஒரே விதமாகவே நடத்தப்படும்.

அஷின் விராத்து தன்னை பர்மாவை காக்க வந்த ஆபத்பாந்தவனாக காட்டிக் கொள்ள முதலில் முயன்ற போது மக்கள் இவனை ஒதுக்கவே செய்தார்கள். ஆனால் நாளடைவில் இவன் செய்து வந்த தொடர் விஷ பிரச்சாரம் மக்கள் மனதில் நஞ்சை ஏற்படுத்தவே செய்தது.

"ஜேம்ஸ்பான்டை உங்களுக்கு தெரியுமா? அவன் தகவல்களை பெறுவதற்காக பெண்ணு டன் படுக்கையை பகிர்ந்து கொள்வான். இதனை அவன் செய்வது விரும்பி அல்ல, தன்

நாட்டிற்காக, அது போலவே தான் நானும் இந்த நாட்டிற்காக முஸ்லிம்களை படுகொலை செய்கிறேன்" என்று தன் செய்கைகளுக்கு இவன் தரும் வியாக்யானம் கேவலமானது.

அஷின் விராத்துவிற்கு 25 வருட கடுங்காவல் தண்டனை முதலில் கொடுக்கப் பட்டது. ஆனால் பின்னர் 10 ஆண்டுகளுக்குள் இவன் பர்மிய அரசால் விடுதலை செய்யப்பட்டான். பர்மாவின் ஆட்சியாளர் தான் சேன்-இன் செல்லப்பிள்ளையாகி விட்டான்.

பர்மாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வந்த இராணுவ ஆட்சி 2011ல் முடிவுற்றது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசோ முஸ்லிம்கள் விஷயத்தில் மிக மோசமாகவே நடந்து கொண்டது. பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களை குடிமக்கள் இல்லை என்றது. அவர்களை நாட்டை விட்டு வெளியேறும் படி கூறியது. அவர்களுக்கெதிராக அரசு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டது.

தற்போது அரசு முஸ்லிம்களுக்கு உள்ளாக நடத்தப்படும் திருமணத்திற்கு அரசின் அனுமதி பெற வேண்டும், மதம் மாற அரசின் அனுமதி பெற வேண்டும் எனபது போன்ற சட்டங்களை முஸ்லிம்களுக்கெதிராக கொண்டு வர திட்டமிட்டுள்ளது. மேலும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கான ஒரே அரசாங்க அடையாளமான வெள்ளை அட்டையை சரண் செய்ய உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் பர்மாவில் முஸ்லிம்கள் (ரோஹிங்யா) நடமாடுவதே இயலாத நிலை உருவாகி விட்டது. இவர்கள் படிக்க முடியாது, வியாபாரம் செய்ய முடியாது. மொத்தத்தில் ஒன்றுமே செய்ய இயலாது.

http://www.latimes.com/world/asia/la-fg-ff-myanmar-monk-20150524-story.html#page=1

## கடலில் முஸ்லிம்களின் நிலை

"இன்னும் 8000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கடலில் தத்தளித்து கொண்டிருக் கிறார்கள். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது கடலுக்கு இறையாகிவிட்டார்களா என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்" என்று கூறுகிறார் ஜெப்ரி லாபோவிட்ஸ் என்ற புலம்பெயர்பவர்களுக்கான பன்னாட்டு நிறுவனத்தின் தாய்லாந்து தலைவர்.

ஆனால் நிலைமை இன்னும் மோசம். எண்ணிக்கை 50000க்கும் மேலாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு படகில் சிலர் உயிர் தப்பி வந்தனர், ஆனால் கிட்டத்தட்ட 100 பேருக்கு மேல் பசியாலும் மற்ற காரணங்களாலும் உயிரிழந் தனர்.

"இந்தோனேஷிய கடற்படை தண்ணீர் தந்தது, நூடுல்ஸ் தந்தது ஆனால் உதவவில்லை, மலேசிய கடற்படை தண்ணீர் தந்தது, நூடுல்ஸ் தந்தது ஆனால் உதவவில்லை, கடைசியில் 5 நாட்களுக்கு பிறகு அசே கடல் அருகில் இந்தோனேஷியாவில் மூழ்கடிக்கப்பட்டது. மீன்பிடி படகுகளே சில உயிர் பிழைத்தவர்களை காப்பாற்றியது" என்று கூறுகிறார் கோயெஸ் என்பவர்.

http://www.latimes.com/world/asia/la-fg-ff-indonesia-boat-people-20150520 story.html#page=2

பல மாதங்களாக தண்ணீர் இன்றி உணவு இன்றி உயிர் பிழைத்து வருபவர்களையும் ஆளைகடத்தும் குற்றவாளிகள் கடத்தி சென்று சித்ரவதை செய்து கொத்தடிமைகளாக பயன்படுத்துகின்றனர். இவ்வாறு சித்ரவதை செய்து கொலை செய்யப்பட்ட 30 உடல்கள் தாய்லாந்தின் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இவை அனைத்தும் பர்மா முஸ்லிம்களின் உடல்களே. இதற்கு தாய்லாந்து நாட்டின் இராணுவ லெட்டினன்ட் ஜெனரல் மானாஸ் கோங்பேன் என்பவனும் உடந்தை. உலகெங்கும் பலத்த சர்ச்சை கிளம்பிய பிறகு தற்போது அவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

http://www.bangkokpost.com/news/general/579131/arrest-of-senior-army-adviser-sought-for-human-trafficking

http://www.cbc.ca/news/world/thailand-military-officer-arrested-in-human-trafficking-probe-1.3098072



"பல இரவுகள் அவர்களுடைய அலறல்களையும் அழுகுரல்களையும் எங்களால் கேட்க முடிந்தது. ஏனெனில் அவர்களை கற்பழித்த இடம் எங்களுக்கு அருகாமையில் தான் இருந்தது. ஆனால் இரவின் இருட்டின் காரணமாக எதையும் எங்களால் பார்க்க முடியாது"

இவ்வாறு கூறி கதறுகிறார் நூர் கைதா. இவர் பின்னர் அங்கிருந்து தப்பி மலேசியா வந்து விட்டார்.

http://www.rohingyablogger.com/2015/06/women-in-camp-used-as-sex-slaves-by.html#sthash.9aKHGVnk.dpuf

## ரோஹிங்யா முஸ்லிம் பெண்கள் விபச்சார அடிமைகளாக

இவ்வாறு தாய்லாந்திற்கு தப்பி வரும் பெண்கள் அங்குள்ள பதாங் பெசார் என்ற இடத்தில் விபச்சார அடிமைகளாக விற்கப் படுகிறார்கள்.

நூர் கைதா அப்துல் சுகூர் என்ற 24 வயது பெண் தனது குழந்தையுடன் இந்த முகாமில் அடைபட்டிருந்தார்.

"இங்கு கைது செய்து வைக்கப்பட்டிருக்கும் முகாமில் இருந்து தினமும் 2 அல்லது 3 இளம் வயதுடைய அழகான ரோஹிங்யா பெண்கள் ரகசியமான இடத்திற்கு இழுத்து செல்லப்படுவர்."

"அவர்கள் கூட்டமாக கற்பழிக்கப் படுவார்கள், இவ்வாறான பெண்கள் முகாமிலேயே கருவுற்றனர்."

"அவர்கள் முகாமின் காவலர்களால் இழுத்து செல்லப்பட்ட பிறகு இரண்டு மூன்று நாட்களுக்கு அவர்களை பார்க்க முடியாது. பின்னர் அவர்கள் திரும்பி வரும் போது அவர்களிடம் என்ன நடந்தது என நான் கேட்க மாட்டேன். ஆனால் என்ன நடந்திருக்கும் என்பது எனக்கு தெரியும்"

"சில பெண்கள் 6 மாதம் வரை அடைத்து வைக்கப்பட்டு கற்பழிக்கப்பட்டார்கள்"

## ஆங் சு கிஇன் மன்னிக்க முடியாத மௌனம்

ஆம் இப்படித்தான் தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டது அல்ஜசீரா. அவர் அமைதிக்கான நோபல் பரிசை வென்றது உண்மை தான். ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால் அவர் இப்போது அரசியல் வாதியாகி விட்டார். 2012ல் நோபல் பரிசு பெற்ற போது அவர் கூறியது "நமது லட்சியம் என்னவென்றால் பலவந்தமான இடம் பெயர்தலை, நம்பிக்கையின்மையை, வீடுகள் இல்லாமல் இருப்பதை தவிர்த்ததொரு உலகை உருவாக்குவது"

ஆனால் அம்மையாரிடம் தற்போது கோரப்படுவது என்னவெனில் தயவு செய்து இத்தகையதொரு உலகு வேண்டாம் குறைந்த பட்சம் ரோஹிங்யாவையாவது உருவாக்க முன்வாருங்கள்.

http://www.aljazeera.com/indepth/opinion/2015/05/aung-san-suu-kyi-inexcusable-silence-150524085430576.html

ஆனால் அம்மையார் இதனை செய்ய முன்வரவில்லை மாற்றாக அவரின் அறைகூவல் வேறு விதமாக உள்ளது.

“முஸ்லிம்களுக்கு எதிராக மட்டும் கலவரம் நடைபெற வில்லை. புத்த மதத்தினரும் தாக்கப்பட்டுள்ளனர். நான் ஒத்திசைவு (சமாதானம்) செய்ய விரும்புவதால் எந்த பக்கமும் பேச முடியாது”

இந்த நொண்டி சமாதானத் திற்காகவா உங்களுக்கு சமாதானத் திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## மியான்மர் முஸ்லிம் இராணுவம்

இப்படி ஒன்று செயல்படுவதாக புதிய கதை ஒன்றை பரப்பி வருகிறது பர்மிய அரசு. ஆனால் இதனை அந்நாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் பாதுகாப்பு நிபுணர்கள் மறுத்துள்ளனர். அவ்வாறு ஒன்று கிடையவே கிடையாது என்று கூறியுள்ளனர்.

https://firstlook.org/theintercept/2015/05/25/myanmar-muslims-arrested-joining-terror-group-doesnt-exist/

ஆனால் அப்படி ஒன்று இருந்திருந்தால் முஸ்லிம்கள் இவ்வாறு கொல்லப்பட்டிருக்கப் பட மாட்டார்கள்.

## யாங்கி லீ

பர்மாவில் Rohingya இஸ்லாம் மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும், அவர்களின் மோசமான நிலைமையும் நேரில் சென்று எடுத்துரைக்க,ரிப்போர்ட் தயாரிக்க உலக நாட்டாமை UN ஆல் அனுப்பப் பட்டவர் Yanghee Lee (சவுத் கொரிய நாட்டை சேர்ந்த பெண்) அவர் தந்துள்ள அறிக்கை பின் வருமாறு

- இஸ்லாமியர்களுக்கு எதிராக அரசு உருவாக்கி இருக்கும் சட்டங்கள் தவறு
- 2011 இராணுவ ஆட்சி முடிந்து பின்பு தற்பொழுது மியான்மர் குடியரசு நாடு என்ற அங்கீகாரத்தில் இருந்து நழுவி பின்னோக்கி செல்கிறது
- Rohingya இஸ்லாம் (சுமார் 100,000) மக்களின் நிலைமை அகதிகள் முகாமில் மிகவும் கவலைக்கிடமாக உள்ளது (disease and malnutrition)
- Rohingya Muslims ஒடுக்கப்பட்டு துன்பங்களை அனுபவிக்கிறார்கள், ஆகையால் மியான்மர் அவர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும் என்ற தீர்மானம் கடந்த வாரம் UN-இல் நிறைவேற்றப்பட்டது

அவருக்கு எதிராக ஒரு புத்த துறவி இப்படி பேசுகிறார்

> ***“ Ms Lee she should have sex with Muslim Rohingya minority if she liked them so much” .”Don’t assume you are a respectable person, just because you have a position in the UN,” he said. “In our country, you are just a whore.”***

“லீ, அவள் ரோஹிங்யா மைனாரிட்டி முஸ்லிம்களை அதிகம் விரும்புவாளேயானால் அவர்களோடு படுக்கையை பகிர்ந்து கொள்ளட்டும். நீ UN-இல் பதவியில் இருப்ப தனால் மதிக்கப்படும் நபர் என்று எண்ணிக் கொள்ளாதே, எங்கள் நாட்டை பொறுத்தவரை நீ ஒரு விபச்சாரி”

இவ்வாறு சொல்பவன் அஷின் விராத்து என்ற புத்த துறவி தான். இவன் தூண்டி விட்ட கலவரங்களின் மாதிரிகள் சில...

- ஒரு புத்த வேலைபெண்ணை இரு இஸ்லாமியர்கள் கற்பழித்துவிட்டனர் என்ற குற்றசாட்டின் பேரில், ஒரு கும்பல் அந்த இருவரையும் கொன்றுவிட்டது. பெரிய கலவரம், போலீஸ் வேடிக்கை. பின் அந்த பெண்ணே அது நாடகம், காசை கொடுத்து நடிக்க சொன்னார்கள், சொல்ல சொன்னதை சொன்னேன் என்று விசாரணையில் ஒப்புக்கொண்டார்
- ஒரு நகைக்கடை வாய் தகராறை மையமாக வைத்து ஒரு கலவரம் 40 பேர் கொலை
- ஒரு இஸ்லாமிய சிறுமி சைக்கிளில் ஒரு புத்த பிக்குவை இடித்ததால் ,70 வீடுகள் , மசூதிகள் எரிப்பு ,ஒரு கொலை ,பலர் காயம் , etc

## துருக்கியின் உதவி

இத்தகைய சூழ்நிலையில் உதவ முடிந்தது இஸ்லாமிய தலைமை மட்டுமே. கிலாஃபத் மட்டுமே அதற்கான தீர்வாக இருக்க முடியும். துருக்கியிடம் அதற்கான பண்புகள் தெரியவே செய்கின்றன.

மே 19 2015 அன்று நிருபர்களிடம் பேசிய துருக்கியின் பிரதமர் அஹ்மத் தவுதோக்லு இவ்வாறு கூறினார், "துருக்கி மிளிவி (International Organization for Migration ) உடன் இணைந்து கடலில் ரோஹிங்யா முஸ்லிம்களை அடைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக துருக்கியின் ஆயுத படைகள் அந்த பகுதியில் கடலில் பயணம் மேற்கொண்டுள்ளது."

source: hurriyetdailynews

http://burmatimes.net/turkish-military-ship-joins-efforts-to-reach-rohingya-muslims/

"மேலும் ரோஹிங்யா முஸ்லிம்கள் தாய்லாந்தை அடையவும் மலேசியாவை அடையவும் இந்தப்படை உதவி செய்யும்" எனவும் துருக்கி பிரதமர் கூறியுள்ளார்.

இதற்கிடையே பர்மாவில் தற்போதுள்ள மனித உரிமைகள் மீறலைப்பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தலைவர் ஜைத் ராத் அல் ஹுசைன் அவர்கள் பர்மாவில் உள்ள தற்போதையை நிலைமையை குறித்த மிகத் தெளிவான உரையொன்றை தந்தார்கள்.

ஆனால் பர்மாவின் மீது நடவடிக்கை மேற்கொள்ள இரண்டு நிரந்தர உறுப்பு நாடுகள் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது.

http://burmatimes.net/un-security-council-gets-first-ever-briefing-on-rohingya/

## ஓஸ்லோ மாநாடு

இதற்கிடையே நார்வே நாட்டின் ஓஸ்லோவில் உள்ள நார்வேஜியன் நோபல் இன்ஸ்டிடியூடில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இதில் பர்மாவை சேர்ந்த புத்த பிட்சுகள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மனித




உரிமை ஆர்வலர்கள், பன்னாட்டு ராஜதந்திரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதில் முத்தாய்ப்பாக 7 நோபல் பரிசு பெற்றவர்கள் (மைரெட் மேகுயர்- வடக்கு ஐயர்லாந்து, ஜோடி வில்லியம்ஸ் - அமெரிக்கா, தவக்கோல் கர்மன்-யெமன், ஷிரின் இபாதி-ஈரான், லெய்மாஹ் போவீ-லைபீரியா, அடாடல்ஃபோ எஸ்குவெல்- அர்ஜென்டினா) (Mairead Maguire from Northern Ireland, Jody Williams from the USA, Tawakkol Karman from Yeman, Shirin Ibadi from Iran, Leymah Gbowee from Liberia, and Adolfo Pérez Esquivel from Argentina ) பர்மா ரோஹிங்யா படுகொலைகளை அரசு நடத்தும் இனப்படுகொலைகள் என வர்ணித்தனர்.

## ஓஸ்லோ மாநாட்டில் மஹாதீர் முஹம்மது அவர்களின் வீர உரை

மியான்மரில் தற்போது நடந்து வரும் நிகழ்வுகள் என்னை மிகவும் வருத்தத்திற் குள்ளாக்கி உள்ளன. மியான்மரை தென்கிழக் காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உறுப் பினராக்க நான் மிக முக்கிய கருவியாக இருந்தேன். மியான்மர் கண்டிப்பாக பூகோளரீதியாக தென்கிழக்கு ஆசியாவின் ஒரு பகுதியே அதை தவிர்ப்பது தென்கிழக்கு ஆசியாவின் ஒற்றுமை என்பதற்கு முரணாகி விடும். ஆனால் தற்போது நாம் மியான்மரை நடத்தியது போல் மியான்மர் தன் சொந்த மக்களை நடத்தவில்லை.

நாம் மியான்மரை அகற்றவேண்டும் என்று விரும்பவில்லை. ஆனால் மியான்மர் ரோஹிங்யா முஸ்லிம்களை அகற்ற நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் 800




வருடங்களாக அங்கே வசித்து வருகின்றார்கள். அவர்கள் பர்மாவின் குடிமக்களாக இதற்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். மியான்மர் பர்மாவின் தொடர்ச்சி என்பதால் அவர்களும் ரோஹிங்யா முஸ்லிம்களை குடிமக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது மலேசியாவில் பல நாட்டை சேர்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் கடந்த 200 ஆண்டுகளில் இங்கே வந்து ஐக்கிய மானவர்கள். அவர்கள் மலேசிய குடிமக்களாக ஆக உரிமை உள்ளதாக நாங்கள் முடிவு செய்தோம். அரசியல் உரிமை வழங்க, பயிற்சி அளிக்க, தொழில் தொடங்க உரிமை உள்ளதாக கருதினோம். அவர்களை எங்கள் சொந்த குடிமக்களாக ஏற்றுக்கொண்டோம்.

மலேசியா போல் அல்லாமல் மியான்மர் ரோஹிங்யாவினரை குடிமக்களாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. இது அரசு செய்துள்ள மிகப்பெரிய அநியாயம். எங்கள் போராட்டங் களினால் பயன்பெற்ற அதன் மூலம் மியான்மர் அரசினால் விடுதலை செய்யப்பட்டவர்கள் (உதாரணம் ஆங் சான் சு கி) இன்னும் சில மியான்மர் மக்கள் ரோஹிங்யாவினருக்காக குரல் கொடுப்பார்கள் என நான் எதிர்பார்த்தேன். ஏனெனில் ரோஹிங்யாவினரும் அந்நாட்டு குடிமக்கள் தானே.

புத்த மதத்தினர் மேலாதிக்கம் செலுத்தும் இந்த நாட்டின் குடிமக்களாகிய ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக சர்வதேச சமூகம் தன் கவனத்தை செலுத்தும் என நம்புகிறேன். அவர்கள் உயிர் வாழ வேண்டும். எந்த வித அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்படாமல் மியான்மரில் வாழ அனுமதிக்கப்படவேண்டும்.

மீண்டும் நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன், மலேசியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடு என்றாலும் மற்ற மத நம்பிக்கை கொண்டவர்களையும் கருத்தில் கொண்டே வாழ்கிறோம். நாங்கள் அவர்களுக்கு மலேசியாவின் குடிமக்களாக ஆகும் உரிமையை கொடுத்துள்ளோம். சர்வதேச சமூகம் ரோஹிங்யா முஸ்லிம்கள் விஷயத்தில் கவனம் செலுத்தும் என நம்புகிறேன். அவர்கள் மற்ற நாடுகளுக்கு கடலில் தப்பிச் செல்ல பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செல்லும் போது நல்ல கப்பல் கிடைக்காத காரணத்தினால் கடலில் மூழ்கி இறக்கிறார்கள்.

இது ஒரு மனித இனத்தின் சோகம். துரதிருஷ்டவசமான இந்த மியான்மர் மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவும் என நான் நம்புகிறேன். ஒரு நாடு என்றே சொல்ல முடியாத அளவிற்கு இவர்களிடம் பாரபட்சம் காட்டியுள்ளது ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டதாக சொல்லும் இந்த நாடு. நன்றி.

:http://www.rohingyablogger.com/2015/05/the-speech-of-dr-mahathir-mohamad at.html#sthash.54uidZU9.dpuf

## மியான்மரின் நிகழ்வுகள் வரிசைக்கிரமமாக

May 28, 2012: அரகான் மாநிலத்தில் ராம்ரி என்ற நகரத்தில் ஒரு பர்மிய பெண் மூன்று முஸ்லிம்களால் கற்பழித்து கொலை செய்யப் பட்டதாக கூறி, மூன்று பேரை போலிஸ் கைது




செய்கிறது. ஒருவர் போலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டதாக போலிஸ் சொல்கிறது. மற்றைய இரண்டு பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது

June 3: முஸ்லிம்கள் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பஸ் வண்டியொன்றை நூற்றுக்கணக்கான பர்மிய பெரும்பான்மை பௌத்தர்கள் தொங்கோப் என்ற இடத்தில் இருக்கும் போலிஸ் சோதனை சாவடியில் வைத்து தடுத்து நிறுத்தி பயணிகளை தாக்க ஆரம்பிக்கிறார்கள். இதில் பத்து முஸ்லிம்கள் கொல்லப்படுகிறார்கள். பக்கத்தில் நின்ற போலீசாரோ அல்லது இராணுவமோ இந்த கலவரத்தை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

June 3: ஜூன் 3ஆம் திகதி 10முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை விசாரிப்பதற்காக 16பேர் கொண்ட விசாரணை குழு ஒன்றை பிரதி உள்விவகார அமைச்சர் தலைமையில் பர்மிய அரசு அமைக்கின்றது. ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பாக விசாரணை அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்று கட்டளை இடப்படுகிறது. எனினும் இந்த விசாரணை அறிக்கை மூன்று வருடம் கழித்தும் இன்னும் வெளியாகவில்லை

June 8: ரோஹிங்கியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் மங்டொவ் நகரத்தில் இருக்கும் பௌத்தர்களின் சில வீடுகள் தீக்கிரையாக்கப் படுகிறது. பழியை ரோஹிங்கியாக்கள் மீது போடுகிறது அரசும் பத்திரிகைகளும்.

June 8-12: சித்வே என்ற நகரத்தில் பௌத்தர்களுக்கும் ரோஹிங்கியக்களுக்கும் இடையில் பெரும் கலவரம் மூளுகின்றது. பாதுகாப்பு பிரிவினர் இந்த கலவரத்தை தடுத்து நிறுத்தாமல் முஸ்லிம்களுக்கு எதிரான கலகக் காரர்களின் பக்கம் நிற்கின்றனர். ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ரோஹிங்கியா மக்கள் சித்வே நகரத்தில் இருந்து இடம்பெயர்கின்றனர். பல நூற்றுக்கணக் கானவர்கள் கொல்லப்படுகின்றனர். முஸ்லிம் களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்படுகின்றது. போலீசார் பல நூற்றுக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்களை வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று கைது செய்கின்றனர்

June 10: பர்மிய ஜனாதிபதி தியான் சயான் அரக்கேன் மாநிலத்தில் அவசரகால சட்டத்தை பிரகடனபடுத்துகிறார். பொலிசாருக்கு மேல திகமாக இராணுவம் வரவழைக்கப்பட்டு பல நகரங்களில் காலவரையற்ற ஊரடனங்கு சட்டம் பிறப்பிக்கப்படுகிறது.

June-October: இந்த இடைப்பட்ட காலங்களில் பெரும்பான்மை பௌத்த அரசியல் தலைவர்களும் பிக்குகளும் முஸ்லிம்களுடன் எந்த ஒரு வர்த்தக தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை புறக்கணியுங்கள் என்று என்று தமது மக்கள் மத்தியில் பகிரங்கமாகவே பிரச்சாரப்படுத்துகின்றனர். சிலர் சில இடங் களில் இருந்து முஸ்லிம்களை இனவழிப்பு செய்யவேண்டும் என்றும் கூக்குரல் இடுகின்றனர்.

July 6: பர்மிய அரஸு கைது செய்திருக்கும் 10 ரோஹிங்கியாக்களை சார்ந்த ஐநா மற்றும் தொண்டு நிறுவன பணியாளர்களை விடுவிக்கும் படி பர்மிய அசாங்கத்தை ஐநா கேட்டுக் கொள்கிறது. இதில் ஐந்து பேர் விடுதலை செய்யப்படுகின்றனர். இன்னும் ஐந்து தொடர்ந்தும் தடுப்பு காவலில் இருக்கின்றனர்.
July 12: அரக்கேன் மாநிலத்தில் தொடரும் பிரச்சினைகளுக்கு “ஒரேயொரு தீர்வாக” அங்கு இருக்கும் “சட்டவிரோதமான” ரோஹிங்கியாக் களை ஒன்றில் நாடு கடத்தவேண்டும் அல்லது ஐநா அகதிகள் நிறுவமான ஹிழிபிசிஸி இன் மேற்பார்வையில் பங்களாதேஷில் அகதி முகாம்கள் அமைத்து அங்கு குடியேற்ற

வேண்டும் என்று பர்மிய ஜனாதிபதி அதிரடியாக அறிவிக்கிறார். இந்த முன்மொழிவை ஹிழிபிசிஸி மறுக்கிறது.

August 10- அன்றைய துருக்கிய வெளிவிவகார அமைச்சர் அஹ்மத் தாவுதொக்லு அவர்களும் அன்றைய பிரதமரான எர்டோகானின் மனைவியும் பர்மாவுக்கு விஜயம் செய்து ரோஹின்கியா மக்களை நேரில் சந்தித்து தமது உதவிகளை கையளிக்கின்றனர்.

Aug 12 - சவூதி அரசு 50 மில்லியன் டாலர் உதவிகளை பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக கொடுக்கின்றது.

Aug 15- ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கான உதவிகளை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பாக முஸ்லிம் ஒத்துழைப்பு நாடுகளின் மக்காவில் ஒன்று கூடி தீர்மானம் மேற்கொள்கின்றனர். இதில் தமது பிரதிநிதிகளை உடனடியாக பர்மாவுக்கு அனுப்புவது, ரோஹிங்யாக்களுக்கு முழு பிரஜா உரிமை வழங்குவதற்கு ஐநாவின் உதவியை நாடுவது என்பதுடன் பர்மாவில் தமது அமைப்பின் கிளை ஒன்றை அமைக்கவேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது.

துருக்கியர்களின் விஜயம், சவூதியின் நன்கொடை, ளிமிசி இன் தீர்மானத்தால் ஆத்திரம் அடைந்த பௌத்தர்கள் ,இதற்கு பழிவாங்கும் நோக்கில் மேலும் பல ரோஹிங்கியா கிராமங்களை தீ வைத்து அழிக்கின்றனர்.

August 17: சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்ததும் அரக்கேன் மாநிலத்தில் இடம்பெற்ற கலவரத்தை கண்டறிவதற்காக 27பேர் கொண்ட விசாரணை ஆணைக்குழுவை பர்மிய ஜனாதிபதி நியமிக்கிறார்.

October 21-24: ஒரே நேரத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும் ஒன்பது நகரங்களில் ஒரே நேரத்தில் மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை வெடிக்கிறது. தற்போது ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு மேலதிகமாக கமன் இனத்தை சார்ந்த முஸ்லிம்களுக்கும் எதிராகவும் வன்முறை நிகழுகிறது. கிட்டத்தட்ட 40,000 முஸ்லிம்கள்




இடம்பெயருகிறார்கள். இந்த முறையும் பொலிசாரும் பாதுகாப்பு படையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றதற்கு மேலதிகமாக அவர்களும் வன்முறையில் பங்குபற்றுகிறார்கள். ஆகக்குறைந்தது 28 குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

October 25: “எதிர்பாராத வகையில் வன்முறை நிகழ்ந்தது” என்று அரசு கதைவிடுகிறது. மொத்தம் 12பேர் மாத்திரம் கொல்லப்பட்டதாக அரசு அறிவிக்கிறது. சில தனியார்களும் நிறுவனங்களும் வன்முறையின் பின்னால் இருப்பதாகவும் நடக்கும் சிறு சம்பவங்களையும் ஊதிப்பெரிதாக்குவதாகவும் அரசு அவர்கள் மீது குற்றம் சாட்டுகின்றது.

November 15: முஸ்லிம் ஒத்துழைப்பு நாடுகளின் (ளிமிசி) பிரதிநிதிகள் பர்மாவை வந்தடை கின்றார்கள். இவர்களை அங்குள்ள பௌத்த பிக்குகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ரோஹிங்கியா மக்களை சந்திகின்றார்கள். பர்மிய அரசிடம் தமது அலுவலகம் ஒன்றை திறப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு தற்காலிக அனுமதியை பெறுகின்றார்கள். மேலும் ரோஹிங்கியாக்களுக்கு பிரஜா உரிமை வழங்கி அவர்களை உரிய முறையில் மீள்குடியேற்றம் செய்யவேண்டும் என்று வலியுறுத்திறார்கள்.

November 16: பர்மிய ஜனாதிபதி பாராளு மன்றத்தில் உரையாற்றும் போது “உணர்ச்சி வசப்படுவதே எல்லாத்திற்கும் காரணம் “என்றும் “ தனது அரசு ரோஹிங்கியாக்களை உரிய முறை




யில் மீள் குடியேற்றம் செய்வதற்கும், அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கும், வேலை பத்திரம், பிறப்பு சான்றிதழ், நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் செல்வதற்கான அனுமதி போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு தயாராகி வருவதாக" அறிவிக்கிறார்.

November 19: பராக் ஒபாமா பர்மா வந்தடைகிறார். ரங்கூன் பல்கலைகழத்தில் இடம்பெற்ற சொற்பொழிவில் பர்மாவில் இடம்பெறும் வன்முறைகள் 'அபாயகர கட்டத்தை அடைந்து இருப்பதாக" குறிப்பிடுகிறார்.

November 2012-April 2013: அங்காங்கு தொடர்ந்தும் ரோஹிங்கியாக்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடருகின்றது. இதில் பெரும்பாலும் பாதுகாப்பு பிரிவினரே சம்பந்தப்படுகின்றனர். ரோஹிங்கியா பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் இடம்பெறுகின்றன. பல இலட்சக்கான ரோஹிங்கியா முஸ்லிம்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் பெரும் சிரமத்திற்கு மத்தியிலும் எந்தவொரு வாழ்வாதார உதவிகள் இன்றியும் வாழ்கின்றார்கள். இந்த நிலையில் இவர்கள் படகுகள் மூலம் நாட்டைவிட்டு தப்பி பங்காளாதேஷ், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு செல்லும் சம்பவங்கள் தொடருகின்றன. இதில் பல ஆயிரக்கான மக்கள் மலேசியாவை வந்தடைந்த அதே நேரம் பல நூற்றுக்கணக்கான மக்கள் கடலில் இறந்து போவதும் தொடர்ந்து நடக்கும் அவலமாகும்.

30 Dec 2014 - ஐநா பொதுச்சபையில் ரோஹிங்கியாக்களுக்கு முழு பிராஜா உரிமை வழங்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு பெரும்பான்மை வாக்குகளுடன் அந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

20 Jan 2015 - இந்த தீர்மானத்தின் பிறகு சீற்றமடைந்த சர்ச்சைக்குரிய பிக்குவான அசின் விராது பர்மா தொடர்பான ஐநாவுக்கான விஷேட பிரதிநிதி யங்கி லீ அம்மையாரை "விபச்சாரி "என்று பகிரங்கரமாக திட்டுகிறார். மீண்டும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்கள் நடத்தப்படுகின்றன.

March- April 2015- ரோஹிங்கியா அகதிகள் கடலில் தத்தளிப்பதும் பக்கத்தில் இருக்கும் எந்தவொரு நாடும் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் மீண்டும் ரோஹிங்கியா சார்பான அலையை உலகில் தோற்றுவித்து இருக்கிறது.

Source : http://madawalanews.com/70825

கடந்த 2012ம் ஆண்டு ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது கடுமையான தாக்குதல்கள் பௌத்த தீவிரவாதிகளால் நடத்தப்பட்டன. இதில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர். பல லட்சம் முஸ்லிம்கள் உயிர் தப்ப இடம் பெயர்ந்தனர். அவ்வாறு இடம் பெயர்ந்த போது அவர்களை தங்கள் நாட்டிற்குள் நுழைய விடாமல் பல நாடுகள் தடுத்து திருப்பி அனுப்பின. இதன் காரணமாக அவர்களில் பலர் எங்கும் செல்ல இயலாமல் வாழ ஆசைப்பட்டு தத்தளித்து தள்ளாடி கடலிலும் நட்டாற்றிலும் மூழ்கி இறந்தனர். இவ்வாறு ஈவு இரக்க மற்ற செயலை ரோஹிங்யா அஹதி களை விரட்டும் செயலை செய்ததில் இஸ்லாமிய நாடுகளும் சில இருந்தன. குறிப்பாக வங்காள தேசம் இதனை செய்தது.



முஸ்லிம்களை கருவறுக்கும் இந்த கொடூரம் பௌத்த தீவிரவாதிகளால் பின்னர் 2015ம் ஆண்டிலும் தொடரப்பட்டது. இது குறித்த முகப்பு கட்டுரைகளை வைகறை வெளிச்சம் நாளிதழில் வெளியிட்டிருந்தோம். அதில் ரோஹிங்ய முஸ்லிம்கள் குறித்த வரலாற்று பின்னணிகளை தந்திருந்தோம்.

தற்போது மீண்டும் ஒரு அகோர தாண்டவத்தை அஹிம்சாவாதிகளாக அடை யாளம் காட்டப்படும் பௌத்த தீவிரவாதிகள் முஸ்லிம்கள் மீது அரங்கேற்றிக் கொண்டி ருக்கின்றனர், முன்பை விட சிறப்பாக. உலக சமாதான புறா, நோபல் பரிசு நாயகி ஆங் சுகி முஸ்லிம்கள் விஷயத்தில் மற்றவர்கள் செய்வது போலவே கள்ள மௌனம் காத்தார். இல்லை, இல்லை அதைவிட ஒருபடி மேலே சென்று நடந்து கொண்டிருக்கும் பிரச்னைகளுக்கு முஸ்லிம்களையே குற்றம் சாட்டினார்.

ஆனால் இம்முறை இஸ்லாமிய நாடுகள் ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக அணி திரண் டன. ஒன்று சேர்ந்தன. கூட்டாக குரல் எழுப் பின. இதற்கு தலைமை தாங்கியது துருக்கி. இது மேற்கத்திய உலகத்தையும் உலுக்கியது. ஒரு கட்டத்தில் ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்காமல் போனால் இஸ்லாமிய நாடுகளில் கூட்டமைப்பின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என்ற நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டன. எதிர்த்து குரல் கொடுத்தன.



பல நாடுகளில் ஆங் சுகிக்கு எதிராகவும் பௌத்த தீவிரவாதி களுக்கு எதிராகவும் கண்டன ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. பல நாடுகளில் பர்மா தூதரகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டது.

இதற்கிடையே ஆங் சுகிக்கு கொடுக்கப்பட்ட நோபல் பரிசு திரும்பப் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கை உலகெங்கும்

எழும்பத் தொடங்கியது. சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்களே இந்த கோரிக்கைகளை முன் வைக்க ஆரம்பித்தனர்.

https://www.nytimes.com/2017/09/04/world/asia/myanmar-rohingya-suu-kyi-.html




## ரோஹிங்யா தீவிரவாதிகள்

இந்த முறை இனப்படுகொலையை எப்படி ஆரம்பிப்பது என திட்டமிட்ட ஆங் சுகியின் அரசு ஆகஸ்ட் மாதம் இறுதியில் இதனை ஆரம்பித்தது. முதலில் ரோஹிங்யா இஸ்லாமிய தீவிரவாதிகள் சிலர் பர்மா காவல்நிலையத்தை தாக்கி 11 அதிகாரிகளை கொன்று விட்டதாக கூறி பர்மிய இராணுவம் ரோஹிங்யா முஸ்லிம்களை அழித்தொழிக்கும் பணியை ஆரம்பித்தது.

ரோஹிங்யா தீவிரவாதிகள் இயக்கத்தின் பெயர் அராக்கன் ரோஹிங்யா இரட்சிப்பு இராணுவம் (Arakan Rohingya Salvation Army) என்றும் கூறியது. இந்த இயக்கத்தின் முன்னாள் பெயர் ஹரகா அல் யகீன் (நம்பிக்கை இயக்கம்) என்றும் பர்மிய இராணுவம் கூறியது.

பர்மா காவல்துறையின் மீதான தாக்குதல் சரியாக ஐக்கியநாடுகள் சபையின் முன்னாள் தலைவர் கோஃபி அன்னன் அவர்கள் தலைமையிலான குழு மியான்மர் அரசை ரோஹிங்யா மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தவும் ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு உரிமைகளை தர வேண்டும் எனவும் கோரிக்கை வைத்த அடுத்த ஒரு மணி நேரத்தில் நடத்தப்பட்டது.

மியான்மர் அரசுக்கு ஆயுதங்களை அள்ளி வழங்கி ஆயுத வியாபாரம் செய்து வரும் இஸ்ரேல் அவர்களுடைய வழியிலேயே மியான்மர் அரசையும் அழைத்து சென்றது.

ஆங்சுகி வங்காளத்தில் இருந்து ஊடுருவிய தீவிரவாதிகள் காவல்துறையினர் மீது தாக்குதல் நடத்தினர் என்று அறிக்கை விடுத்தார்.

http://www.aljazeera.com/news/2017/08/deadly-clashes-erupt-myanmar-restive-rakhine-state-170825055848004.html

இதில் இரண்டு செய்திகள் உண்டு. ஒன்று அவர்கள் பர்மாவை சேர்ந்தவர்கள் அல்லர் என்பது ஒரு செய்தி. மற்றொன்று தங்கள் நாட்டை சாராத மற்ற நாட்டில் இருந்து ஊடுருவிய தீவிரவாதிகளை தான் நாங்கள் கொன்றொழிக்கிறோம் என்பது. இந்த அறிக்கையை இந்தியா அசாமில் உள்ள முஸ்லிம்களுக்கு எதிராக அடிக்கடி தரும் அறிக்கையோடு நீங்கள் ஒத்து நோக்கினால் அதற்கு நாம் பொறுப்பல்ல. அல்லது மோடியின் மியான்மர் பயணத்தோடு ஒத்து நோக்கினாலும் அதற்கும் நாம் பொறுப்பல்ல.

ஆனால் முஸ்லிம்களுக்கு எதிரான எந்த அரசாங்கமும் ஆகட்டும் அவர்கள் ஒரே மாதிரியாகத் தான் பயணிக்கின்றனர் என்பது வெளிச்சம். இஸ்ரேல், இந்தியா, அமெரிக்கா, மியான்மர் போன்ற நாடுகள் ஒரே மாதிரியாகத் தான் ஒரே பாணியில் தான் செயல்படுகின்றனர்.

எனவே தீவிரவாதிகளை தேடி அழிக்கிறோம் என்று கூறி தன்னுடைய இன அழிவு இயக்கத்தை பௌத்த இராணுவம் தொடங்கியது.

இதன் பின்னர் இவர்களுடன் உள்ளூர் பௌத்த தீவிரவாதிகளும் சேர்ந்து கொண்டனர். அதன் பின்னர் இந்த கொடுங்கோலர்கள் நடத்திய அகோர தாண்டவத்தினை சொல்லி மாளாது.

## கொடூரங்கள் சில

தீயில் தூக்கி எறியப்பட்டவர்கள் அதை

விட்டு அரையும் குறையுமாக எரிந்த நிலையில் வெளியே ஓடி வரும் போது துப்பாக்கியின் பின்புறத்தால் மண்டையிலேயே அடித்து தீக்குள் தள்ளுவது போன்ற கொடுமைகள் ரோஹிங்யாவில் அரங்கேறின.

சிறு குழந்தைகளை மெல்ல மெல்ல குத்திக் கொல்வதும் அதை ரசிப்பதும் ரோஹிங்யாவில் அரங்கேறியது. உயிருடன் கை, கால்களை வெட்டி எடுத்து பின்னர் தலையையும் வெட்டி எடுத்து கொடுமைப்படுத்தி கொலை செய்வதும் நடந்தேறியது. சுட்டுக்கொன்ற பின்னரும் வெறி அடங்காமல் எட்டி உதைத்து வெறியை தணித்து கொள்வதும் கண்களை தோண்டி எடுத்துவெறியை தணித்து கொள்வதும் பௌத்த தீவிரவாதிகளுக்கு அஹிம்சை யாகிப் போனது.

பெண்களை கூட்டாக கற்பழிப்பது பின்னர் அவர்களின் அங்க அவயங்களை வெட்டி வீசுவது என பர்மிய இராணுவம் இதனை ஒரு விளையாட்டாகவே செய்து கொண்டிருந்தது. அவர்களுக்கு இது தினந்தோறும் பொழுது போக்காகி போனது. இதனை வேடிக்கை பார்த்து ரசித்து கொண்டிருந்தார் ஆங் சுகி.

http://www.aljazeera.com/news/2017/08/rohingya-babies-spared-army-170827192311109.html

இந்த தாக்குதல்களுக்கு பின்னர் ரோஹிங்யா முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் சொந்த நிலங்களை விட்டு விட்டு அகதிகளாக கிளம்பினர். அவ்வாறு அகதிகளாக கிளம்பி செல்லும் வழியிலும் பௌத்த தீவிரவாதிகள் அவர்களை கொலை செய்தனர். பெண்களை கூட்டு வன்புணர்ச்சி செய்தனர். இதன் காரண மாக எங்களை பாதுகாப்பாக வெளியில் செல்லவாவது விடுங்கள் என்று கோரிக்கை வைக்கும் அளவிற்கு ரோஹிங்யா முஸ்லிம்கள் தள்ளப்பட்டனர்.

http://www.independent.co.uk/news/world/asia/rohingya-muslims-burma-villages-trapped-mobs-kill-them-all-myanmar-ethnic-cleansing-a7952511.html

கிட்டதட்ட 11 இலட்சம் முஸ்லிம்கள் உலகெங்கும் எங்கு செல்வது என்று தெரியாமல் தங்கள் கால்போன போக்கில் செல்ல ஆரம்பித்தனர். இந்த முறையும் பலர் ஆற்றிலும் கடலிலும் மூழ்கி இறந்தனர். தப்பியவர்கள் குறிப்பாக இந்தோனேஷியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு தப்பி சென்றனர். இந்தியாவிற்கும் பலர் வந்தனர்.

## கன்னிவெடிகள் மூலம் முஸ்லிம்களை கொன்ற இராணுவம்





அவ்வாறு வெளியேறிவர்களில் சிலர் மீண்டும் தாயகம் திரும்பிய போது அவர்களை வரவேற்றது மியான்மர் இராணுவம் புதைத்து வைத்த கன்னி வெடிகள். இந்த கன்னிவெடிகளில் மாட்டி உடல் சிதைவுற்று பல நூற்றுக்கணக்கானவர்கள் இறந்தனர். இவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர். பலரில் கை, கால்கள் அங்க அவயங்கள் பிய்த்தெறியப்பட்டு வயல்வெளி களிலேயே யாராவது உதவிக்கு வரமாட்டார் களா என்று ஏங்கிய நிலையில் கிடந்தன. ஆனால் யாரும் உதவிக்கு வரவில்லை. அப்படியே அண்ணாந்து வானத்தை பார்த்து கண்கள் நிலைகுத்தி உயிரை விட்டவர்கள் பலர்.

## உதவிப்பொருட்கள் வந்த கப்பலை தாக்கிய பௌத்த தீவிரவாதிகள்

இதற்கிடையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகதிகளுக்கு உதவி நிவாரணபொருட்களை ஏற்றி வந்த செஞ்சிலுவை இயக்கத்தை சேர்ந்த கப்பலை 300க்கும் மேற்பட்ட பௌத்த தீவிர வாதிகள் தடுத்து நிறுத்த முயன்றனர். அந்த கப்பலை தாக்க முயன்றனர். ஆனால் நல்ல வேளையாக அந்த கப்பலுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை.

http://aa.com.tr/en/asia-pacific/aid-shipment-disturbed-by-buddhist-mob-in-myanmar/915508

## ஆங் சுகியின் அர்த்தமற்ற உளறல்

இதற்கிடையே பன்னாட்டு சமூக சேவை அமைப்புகளும் மனித உரிமை அமைப்பு களும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு உதவ முன்வந்தன. ஆனால் அவர்களை தீவிரவாதி களுக்கு உதவும் அமைப்புகள் என ஆங் சுகி அறிவித்தார். இதன் காரணமாக இந்த உதவிப் பணிகளுக்கு சென்றவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியானது. எனவே அவர்கள் தங்கள் உதவிகளை நிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எந்த விதத்திலும் உதவிகள் வந்து விடக் கூடாது என்பதற்கான ஆங் சுகியின் நடவடிக்கை யாகவே இதனை பன்னாட்டு முகமைகள் பார்த்தன.

https://www.theguardian.com/world/2017/aug/28/aung-sang-suu-kyis-office-accuses-aid-workers-of-helping-terrorists-in-myanmar

ஆங்சுகியின் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்ட புகைப்படத்தில் பன்னாட்டு சபையின் உலக உணவு நிரலில் (United Nations world food programme) உள்ள பிஸ்கட் பாக்கெட்டுகள் தீவிரவாதிகளின் முகாம்களின் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவை அனைத்தும் பௌத்த இனவாத தீவிர வாதிகள் குழுக்கள் பன்னாட்டு முகமைகள் மீது குற்றச்சாட்டுகளை வைத்த பின்னர் அதே போன்று ஆங் சுகியின் அலுவலகத்தாலும் சொல்லப்பட்டன.

இந்த அறிக்கைகள் அனைத்தும் பொறுப்பற்றவை, ஆபத்தானவை என இலாப நோக்கமற்ற மனித உரிமைகளை பாதுகாக்கும் ஆணையத்தின் செயல் இயக்குனர் (executive director of human rights non-profit Fortify Rights) மாத்தீவ் ஸ்மித் என்பவர் கூறியுள்ளார்.

## மியான்மருக்கு ஆயுதங்களை அள்ளி வழங்கிய இஸ்ரேல்

முஸ்லிம்களை கொன்று குவிப்பதென்றால் அளாதி மகிழ்ச்சி அடைபவர்கள் யூதர்கள். குறிப்பாக இஸ்ரேலிகள். இந்த முறையும் அதனை அவர்கள் வெளிக்காட்டினர். உலகமே மியான்மருக்கு எதிராக அணி திரண்ட போது அவர்கள் ஆதரவளித்தது இரண்டு நாடுகள். ஒன்று இஸ்ரேல். மற்றொன்று இந்தியா.

இது மட்டுமன்றி சீனாவும் ரஷ்யாவும் மியான்மருக்கு ஆதரவளித்தன. ஆனால் அமெரிக்கா இதற்கு மாற்றமாக இது ஒரு இனப்படுகொலை என்றும் மியான்மர் அதிகாரிகளை கைது செய்து விசாரிக்க வேண்டும் என்றும் கோரியது.

http://www.aljazeera.com/news/2017/09/rohingya-demands-prosecution-myanmar-officials-170929043932384.html

இஸ்ரேல் மியான்பருக்கு ஆயுத சப்ளையை நிறுத்த முடியாது என திமிராக கூறியது மட்டுமல்லாமல் கூடுதலாக ஆயுதங்களை சப்ளை செய்யப்போவதாகவும் கூறியது.

https://www.siasat.com/news/burma-israel-refuses-stop-arms-sales-despite-increase-ethnic-cleansing-1237452/

## காமெடி செய்த டெல்லி காவல்துறை

இதற்கிடையே அல்காயிதாவிற்காக ரோஹிங்யா முஸ்லிம்களின் துயர் தீர்க்க போராட ஆள் சேர்த்ததாக ஒருவரை கைது செய்ததாக டெல்லி காவல்துறை கூறியது. சமீயுன் ரஹ்மான் என்பவர் இந்த செயலில் ஈடுபட்டதாக டெல்லி காவல்துறை கூறியது.

மத்திய அரசு ரோஹிங்யா முஸ்லிம்களை நாட்டின் பாதுகாவல் கருதி வெளியேற்றப் போவதாக உச்ச நீதிமன்றத்தில் கூறியிருந்த நிலையில் அந்த கூற்றினை உறுதிப்படுத்த டெல்லி காவல்துறை எடுத்த நடவடிக்கை தான் இது. டெல்லி காவல்துறை இதில் மிக வல்லவர்கள். இது போன்று டெல்லி சிறப்பு படையினரால் கைது செய்யப்பட்ட பலர் பின்னர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

காவல்துறை கூற்றுப்படி பங்களாதேஷை சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் நாட்டு பிரஜை. அவர் 2013ல் அல்காயிதாவில் சேர்ந்தார். பின்னர் சிரியாவில் மூன்று வாரங்கள் பயிற்சி எடுத்துக் கொண்டார். 2014 வரை ஜபத் அல் நுஸ்ராவில் சிரியாவுக்கு எதிரான போரில் பங்கேற்றார்.




அல்காயிதா போன்ற இயக்கங்களின் தொடர்பை மியான்மரோ அல்லது அங்குள்ள இஸ்லாமிய இயங்கங்களோ இதுவரை கூறாத நிலையில் முதன் முதலாக இந்தியா இவ்வாறு கூறியது.




https://scroll.in/article/851196/delhi-police-claim-to-have-caught-an-al-qaeda-man-linked-to-rohingya-how-strong-is-the-evidence

## மருத்துவர்களின் அறிக்கை

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை அளித்த யு.என். மருத்துவர்கள் குழு அந்த பெண்களின் யோனிகள் கிழிக்கப்பட்டிருப் பதையும் கடுமையான முறையில் அவர்கள் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதையும் அறிக்கையில் அளித்துள்ளனர். ஒரு அரசுக்கு எதிராக யு.என். டாக்டர்கள் கூட்டு வன்புணர்வு குறித்து அறிக்கை அளித்திருப்பது இதுவே முதன்முறை. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

http://www.independent.co.uk/news/world/asia/doctors-un-rohingya-muslim-women-refugees-burma-rape-sexual-violence-a7965251.html

## மலேசியா அறிக்கை

இதற்கிடையே தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு (Association of South East Asian Nations (ASEAN) ) அளித்த அறிக்கையை மலேசியா ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அறிக் கையில் ரோஹிங்யா இனப்படுகொலைகளை கண்டிக்கவில்லை. எனவே தாங்கள் இந்த அறிக்கையை புறந்தள்ளுவதாக மலேசியா அறிவித்தது.

"ரோஹிங்யாவில் நடக்கும் இனப் படுகொலைகளுக்கு எதிராக மலேசியா தன் ஆழ்ந்த கண்டனங்களை தெரிவித்து கொள்கிறது. இதனை உலகம் புறந்தள்ளி விட முடியாது. அதன் மீது நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் உள்ளது." என்று மலேசியாவின் அறிக்கை தெரிவித்தது.

"மியான்மர் அரசு உடனடியாக வன்முறையை




நிறுத்தி மக்களின் உயிர்களும் உடைமைகளும் அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும்" என்றும் அறிக்கை விடுத்தது.

http://aa.com.tr/en/asia-pacific/malaysia-disassociates-with-asean-myanmar-statement/918531

## துருக்கியின் உதவி

துருக்கி எடுத்த நிலை ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு பெரும் ஆதரவாக இருந்தது என்றால் மிகையல்ல. கிலாஃபத்தை தாங்கி இருந்த நாடு என்ற அந்தஸ்தை பெற்றிருந்த

துருக்கி அதற்காக தகுதியு டன் இந்த விஷயத்தில் செயல் பட்டது.




ரோஹிங்யா முஸ்லிம்கள் விஷயத்தில் முதல் கண்டனம் முதல் எதிர்ப்பு வெளிவந்தது துருக்கியிடம் இருந்து தான். பின்னர் கத்தார், மலேசியா போன்ற நாடுகள் அவருடன் இணைந்தன. இதற்கு காரணம் துருக்கி மேற்கொண்ட முயற்சி தான்.

துருக்கி இஸ்லாமிய நாடு களின் தலைவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ரோஹிங்யா குறித்து தொடர்ந்து பேசி அழுத்தம் தந்தது. நேரிடை யாகவும் சில நாடுகளோடு பேசியது. இதற்கு நல்ல பயன் இருந்தது. 2012, 2015களில் தங்கள் நாடுகளில் அனுமதிக்க மாட்டோம் என்ற நிலைபாட்டுடன் இருந்த பங்களாதேஷ் இந்த முறை துருக்கியின் அழுத்தத்தால் ரோஹிங்யா அகதிகளை ஏற்றுக்கொண்டது. இதற்காக துருக்கி அந்த அகதிகளை தங்க வைப்பதால் ஏற்படும் மொத்த செலவையும் தாங்கள் ஏற்றுக் கொள்வதாக வாக்குறுதி அளித்தது.

இதன் பின்னர் வங்காளதேசத்தின் அதிபர் ஷேக் ஹசீனா நேரிடையாக அகதிகளை சென்று அகதிகள் முகாமில் பார்த்தார். அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்டு கண் கலங்கினார்.

ஒரு நேர்காணலில் ரோஹிங்யா குறித்து அதிபர் டொனால்ட் டிரம்புடன் பேச வில்லையா என்ற கேள்விக்கு இதைப்பற்றி அக்கறை இல்லாதவர்களிடம் ஏன் பேச வேண்டும் என்றும் எதிர் கேள்வி எழுப்பினார். இவை எல்லாம் துருக்கியின் ஆலோசனைக்கு பின்னரே என்றால் மிகையல்ல.

https://www.facebook.com/aljazeera/videos/vb.7382473689/10156026840813690/?type=2&theater

இதற்கு பின்னர் துருக்கி மேற்கத்திய நாடுகள் அனைத்தையுமி மியான்மருக்கு எதிராக இணைத்தார். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இந்த பிரச்னை குறித்து பேச வைத்தார். ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்கள் கூட்டத்தில் எல்லா நாடுகளும் ஒருமித்த குரலில் பர்மாவுக்கு எதிராக பேசியது.

இதற்கு மிக முக்கிய காரணம் தய்யிப் எர்துகான் அவர்கள். முஸ்லிம்கள் மத்தியில் இதற்கு முன்னர் பல விஷயங்களில் குறிப் பாக பாலஸ்தீன முஸ்லிம்கள், கத்தார் பிரச்னை போன்ற விஷயங்களில் நம்பிக்கை நட்சத்திர மாக விளங்கிய எர்துகான் இப்போதும் இந்த பிரச்னையை கையாண்ட விதம் அலாதி யானது.

இவருடைய ஆலோசனைகளுக்கு பின்னர் பாகிஸ்தான் மற்றும் ஈரானும் இவர்களுடன் சேர்ந்து கொண்டது.

பாகிஸ்தான் ஈரானின் இராணுவ தளபதிகள் மியான்மருக்கு எதிராக முஸ்லிம் உலகத்தின் நடவடிக்கை ஒன்றே ரோஹிங்யா முஸ்லிம்களை காப்பாற்றும் என்று கூட்டாக அறிக்கை விட்டனர். பாகிஸ்தான் இராணுவத் தளபதி கமர் ஜாவித் பஜ்வாவும் ஈரானின் இராணுவ தளபதி முஹம்மது ஹுசைன் பகரியும் கூட்டாக இந்த அறிக்கையை விடுத்தனர்.

http://caravandaily.com/portal/pakistan-iran-army-chiefs-seek-muslim-world-action-to-help-end-rohingya-persecution/

இதற்கு பின்னர் ஐக்கியநாடுகள் சபை



தலைவர் ஆங் சுகியை பார்த்து இது தான் கடைசி வாய்ப்பு என்று கூறும் நிலைக்கு பர்மா தள்ளப்பட்டது.

http://www.independent.co.uk/news/world/asia/united-nations-burma-myanmar-rohingya-aung-san-suu-kyi-bangladesh-ethnic-cleansing-a7951876.html

துருக்கியின் துணைப்பிரதமர் ரெசெப் அக்தப் பங்களாதேஷ்-இல் இருந்த ரோஹிங்யா அகதிகள் முகாமுக்கு சென்று பார்வையிட்டார். அங்கிருந்தவர்களுக்கு தன்னுடைய கைகளாலேயே உதவிப்பொருட்களை வழங்கினார். உடன் அவர் மனைவியும் பேரழிவு மேலாண்மை மற்றும் நிவாரணத் துறை அமைச்சரும் சென்றிருந்தார்கள். கிட்டத் தட்ட 5 இலட்சம் பேர் தங்கியுள்ள அகதிகள் முகாம் அது.

துருக்கியும் பங்களாதேஷ்-உம் இணைந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் தங்கள் தாயகம் திரும்புவதற்கு பன்னாட்டு முகமையில் பணியாற்ற இருப்பதாகவும் ரோஹிங்யா முஸ்லிம்கள் தங்கள் தாயகம் திரும்ப வேண்டும் என்பதையே தாங்கள் விரும்புவதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.

http://aa.com.tr/en/todays-headlines/turkish-deputy-pm-visits-rohingya-camp-in-bangladesh/920702

## வாய்திறந்த ஆங் சுகி

கடைசியாக 2017 செப்டம்பர் 10ம் தேதி ஆங்சுகி ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக வாய் திறந்தார் உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக. ஆனால் பட்டும் படாமல். ரோஹிங்யாவில் நடக்கும் எல்லா விதமான மனித உரிமை மீறல்களுக்கும் அதன் காரணமாக அல்லல் படும் அத்தனை மக்களுக்காகவும் ஆழ்ந்த கவலைப்படுவதாக வாய் வார்த்தையாக கூறினார்.

http://www.aljazeera.com/news/2017/09/aung-san-suu-kyi-condemns-human-rights-violations-170919034711821.html

## இந்தியாவின் நிலை

இந்தியா இந்த பிரச்னையில் நடந்து கொண்ட விதம் மிகவும் விவகாரமானது. மியான்மருக்கு எதிராக எந்த கருத்தையும் தெரிவிக்காத நிலையில் மோடி ஆங் சுகியை சந்தித்து அவருக்கு ஆதரவளிக்கும் வகையில் பேசினார். அத்தோடு இந்தியா ரோஹிங்யா அகதிகளை வெளியேற்ற போவதாக அறிவித்தது. மனித உரிமை ஆர்வலர்கள் உடனடியாக உச்சநீதிமன்றத்தை அணுகினர். உச்ச நீதிமன்றத்தில் ரோஹிங்யா அகதிகள் நாட்டின்




பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்ற அறிக்கை அளித்தது மத்திய பாஜக அரசு. அதை உறுதிப் படுத்த டெல்லி காவல்துறையை கொண்டு ஒருவரை கைது செய்து அவர் அல்காயிதாவிற்கு ஆள் சேர்க்கிறார் ரோஹிங்யாவை காரணம் காட்டி என்று ஊடகங்களில் செய்தியை பரப்பியது. இதன் மூலம் உலகத்தில் தனிமைப் பட்டு நின்றது இந்தியா.

## இந்தியாவில் ரோஹிங்யா முஸ்லிம்கள்

இந்தியாவில் ஏறத்தாழ ஒரு லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் இருக்கின்றார்கள் என்று கணிக்கப்படுகிறது.

இவர்கள் நேரடியாக இந்தியாவுக்குள் புகுந்தவர்களல்ல. மாறாக பல்வேறு காலக் கட்டங்களிலும் இந்தியாவுக்குள் வந்தவர்கள்.

இவர்களில் அகதிகள் அந்தஸ்தில் இருப்பவர்கள் 40,000 பேர். ஏனையோர் தங்கள் வாழ்க்கைத் தேவைகளைத் தாங்களா கவே தேடிக் கொள்கின்றார்கள் அவர்கள் யாருக்கும் பாரமாக இல்லை.

இந்த ரோஹிங்யா முஸ்லிம்களை இனப் படுகொலை புகழ் மோடி ஆட்சிக்கு வந்த வுடன் எல்லாவிதமான கெடுபிடிகளுக்கும் ஆளாக்கினார்.

அவர்கள் நாட்டின் உள் நாட்டுப் பாதுகாப் பிற்கு மிகப்பெரிய ஆபத்து என்றார். அத்தோடு நில்லாமல் தனது வழக்கமான பல்லவியாகிய தீவிரவாதம் என்ற பல்லவியைப் பாடத் தொடங்கினார். அவர்களெல்லாம் தீவிரவாதிகள் என வெட்கமில்லாமல் அறிவித்தார்.

இந்த இனப் படுகொலை புகழ் மோடி அரசால் தாங்கள் பாதிக்கப்படுவோம் என நினைத்த ரோஹிங்யா முஸ்லிம்கள் தங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துச் சொல்லிட உச்ச நீதிமன்றத்தை அணுகினார்கள்.

மொத்தமாக இந்தியாவில் வாழும் ரோஹிங்யா முஸ்லிம்கள் சார்பில் டெல்லியில் வாழும் ரோஹிங்யா முஸ்லிம்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத் தார்கள்.

நாங்கள் ரோஹிங்யா முஸ்லிம்கள். ஆனால், தீவிரவாதிகள் அல்ல என்று உச்ச நீதிமன்றத்தில் வாதாடினார்கள். அவர்களின் சார்பில் முதலில் மூத்த வழக்கறிஞர் காலிங்க கன்சால்வஸ்தான் வாதாடினார்.

டெல்லியில் வாழும் ரோஹிங்யா முஸ்லிம்கள் 10.000 பேர். இவர்கள் அனைவரும் ஒரே இடத்தில்தான் வாழ்ந்து



கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தாங்கள் வாழுமிடத்திற்கான வாடகை முதற்கொண்டு அனைத்தையும் தாங்களே உழைத்துத் தந்து விடுகின்றார்கள். இவர்கள் தங்குவதற்கு இடம் தந்திருப்பவர்கள் முஸ்லிமல்லாதவர்கள்தாம்.

இந்த முஸ்லிமல்லாதவர்கள் இவர்களிடம் வாடகையை வாங்கிக் கொண்டு அவர்களை தொந்திரவு இல்லாமல் வாழவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் தங்கள் உழைப்பை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் மோடி அரசு ஆட்சிக்கு வந்த நாள் முதலே, அவர்களைத் தீவிரவாதிகள் என்றும் அவர்களை வெளியேற்றிட வேண்டும் என்றும் அடம்பிடித்து வருகின்றது.

இதனை எதிர்த்து அவர்கள் நமது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தபோது உச்ச நீதிமன்றத்தில், இதுபோன்ற விவகாரங்களில் தலையிட உச்ச நீதிமன்றத்திற்கு அதிகார மில்லை. நாங்கள் அதாவது மோடி அரசு அவர்களை வெளியேற்றிய தீருவோம் என வாதாடியது.

ஆனால் 2017 அக்டோபர்-3, இல் இதற்கு பதில் தந்த உச்ச நீதிமன்றம் "நிச்சயமாக இதுபோன்ற வழக்குகளில் தலையிட உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என அடித்துக் கூறியது" அதேபோல அரசு அவர்களை வெளியேற்றிட இயலாது என்றும் கூறியது.

ரோஹிங்யா முஸ்லிம்களின் சார்பில் இந்த வழக்கை 3-10-2017 இல் வாதாடிய பாலிநரிமான் தனது அக்டோபர் 3, 2017 வாதத்தில் அனைவரும் அதிரும்படியான ஓர் வாதத்தை வைத்தார். அது நானே ஒரு பர்மா அகதிதான் என்றார்.

ஆகவே அகதிகளை தீவிரவாதிகள் எனச் சித்தரிப்பது கேவலமானது என்றார்.

## மோடி அரசின் வெட்கம்கெட்ட வாதம்

மோடி அரசு ரோஹிங்யா முஸ்லிம்களின் சார்பில் வைத்த வாதங்களில் ஒன்று அவர்கள் இந்திய குடிமக்களுக்கு சேர வேண்டிய உணவுப் பொருட்களை தின்று விடுவார்கள் என்பதாகும்.

அவர்கள் ரோஹிங்யா முஸ்லிம்கள் உழைத்துத்தான் சாப்பிட்டுக் கொண்டிருக் கின்றார்கள், இலவசமாக அல்ல.

அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் கூட ஐக்கிய நாடுகள் சபையின் செலவில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அல்லாமல் மோடியின் ஆட்களின் உணவை உண்ண வில்லை.

உண்மையிலேயே இந்தயிாவின் பொருளாதாரத்தை உண்டு மட்டுமல்ல, கொள்ளையடித்துச் சென்றவர்கள் மல்லையா, லலித்மோடி, அதானி ஆகியோர்தாம், இவர்கள் அனைவரும் மோடியின் ஆட்கள்தாம்.

## ஐ.நா.விலும் நமது நாட்டை விட்டுக் கொடுத்தவர்

ஐக்கிய நாடுகள் சபையிலும் இந்தியாவில் வாழும் ரோஹிங்யா முஸ்லிம்கள் பற்றிய விவகாரம் விவாதத்திற்கு வந்தது.

ஐக்கிய நாடுகளின் சபையின் சார்பில் கருதுதுக்களைச் சொன்னவர்கள். இந்தியா தன்னிடம் தஞ்சம் புகுந்து அமைதியாக வாழ்ந்துகொண்டிருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்களை திரும்ப மியான்மர் அனுப்பு வது மனிதாபிமானமற்ற செயல், சர்வதேச விதிகளுக்கு எதிரானது என்றார்கள்.



இதற்கு பதில் தந்த மோடியின் அடியாள் வெளி விவகாரத்துறை இணை அமைச்சர் ரிஜ்ஜி இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு பற்றி ஐக்கிய நாடுகள் சபை கவலைப்பட வில்லை என்றார்.

ஏதோ ரோஹிங்யா முஸ்லிம்கள் இந்தியா வின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு உலை வைத்து விடுவார்கள் என்பதுபோல் பேசினார்.

அதேபோல் நாங்கள் அகதிகள் சம்மந் தப்பட்ட எந்த சர்வதேச ஒப்பந்தத்திலும் நாம் கையெழுத்து போடவில்லை என்றார்கள்.

இதற்கு பதில்தந்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் நீங்கள் அவர்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்தங்களில் கையெழுத் திடாவிட்டாலும், சர்வதேச அரசியல் ஒப்பந்தங்களின் கையெழுத்திட்டிருக்கின் றீர்கள். அவற்றின்படி எந்த மக்களையும் அவர்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்திரவாதமில்லாத இடத்திற்கு அனுப்பக் கூடாது. அதற்குக் கட்டுப் படுங்கள் என்றார்.

## யோகி ஆதியானந்த்-இன் தீவிரவாதம்

நாட்டில் நடந்த பல குண்டு வெடிப்பு களுக்கும் பணம் தந்தவர் யோகி ஆதியானந்த் அப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினர்.

இப்போது உத்திரப்பிரதேச மாநில முதல மைச்சர். இவரது ஆட்சிக்கு உட்பட்ட உத்திர பிரதேசத்திலும் ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். அவர்களுக்கு வேலை கொடுத்துக் கொண் டிருந்தவர்களிடம் ஆதார் அட்டை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என தடை செய்துள்ளார்.

ரோஹிங்யா முஸ்லிம் களுக்கு ஆதார் வழங்குவ தில்லை. இதனால் அவர் களுக்கு அகதிகள் என அட்டை வாங்கிக் கொடுக் கும் முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கின் றார்கள் அங்குள்ள முஸ்லிம்கள்.

**அங்கு வாழும் ரோஹிங்யா முஸ்லிம்களிடம் உங்களுக்கு உதவி என்றால் அவர்கள் எங்களுக்கு இந்த உழைக்கும் அட்டை வாங்கித் தர உதவுங்கள் போது என்கின்றார்கள்.**

- தி இந்து 4-10-2017

**ஆக்கம் : ரஹ்மத்துல்லா / MGM**

# ரோஹிங்கியாக்களை கைவிடுவதுதான் இந்தியாவின் அறமா?



இப்படியொரு முடிவை அறிவிக்க, இதைவிட மோசமான ஒரு நேரம் இருக்க முடியாது. மியான்மரின் ரக்கைன் மாநிலத்திலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்கள் தப்பி ஓடி வந்துகொண்டிருக்கும் நேரத்தில், அவர்களை அடையாளம் கண்டு நாடு கடத்தும் முடிவிலிருந்து பின்வாங்க முடியாது என்று மத்திய அரசு அறிவித்திருக் கிறது.

இந்தியா என்ற கருணை மிக்க நாடு, ஜனநாயக நாடு, வந்தாரை வாழவைக்கும் நாடு என்ற சிந்தனை ஒரே வரியில் மாயமாக மறைந்துவிட்டது. ஏற்கெனவே நொந்து கிடக் கும் ரோஹிங்கியாக்களுக்கு அது பேரிடியாக நெஞ்சில் இறங்கியது. கருணை, அன்பு, அரவணைப்பு, மற்றவர்கள் மனம் நோகாமல் பேசும் பண்பு ஆகியவற்றையெல்லாம் கை விட்ட - இதயம் கல்லான - அரசாக மாறி விட்டோம். தேவையில்லாத அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரும் அதிகாரவர்க்கமும், எல்லைப்புறப் பாதுகாப்பை மட்டும் வலுப் படுத்த நினைக்கும் தேசிய ஆலோசனை நிபுணர்களும் உலக அரங்கில் வளர நினைக்கும் இந்தியாவுக்கு ரோஹிங்கியாக்கள் அவசியமில்லை என்று கருதியிருக்கலாம்.

‘சர்வதேசச் சமூகத்தின் கடைசி மனிதர்கள்’ என்று காந்தி கூறியவர்களுக்கு உதாரணம்தான் ரோஹிங்கியாக்கள். உலகிலேயே அதிகம் வதைக்கப்பட்ட சன்னி பிரிவைச் சேர்ந்த இந்த முஸ்லிம்கள் ரக்கைன் மாநிலத்தில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றனர். மியான்மர் ராணுவத்தால் அடிமைகளாக நடத்தப்படு கின்றனர். பவுத்த பேரினவாதிகளும் திட்ட மிட்டு வதைக்கின்றனர். தார்மிகம், மனித உரிமைகள் என்ற விழுமியங்களை, ரோஹிங்கி யாக்கள் படும் வேதனையைக் கண்டும் காணாமல் மௌனம் சாதிப்பதன் மூலம் நாசமாக்கிவிட்டார் ஆங் சான் சூச்சி.

மியான்மர் ராணுவ ஆட்சிக்கு எதிராக மனித உரிமைகள் மீட்கப்பட அவர் நடத்திய நீண்ட காலப் போராட்டம்தான் அவருக்கு ‘அமைதி’க்கான நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. ரோஹிங்கியாக்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்தால் அரசியல்ரீதியாகப் பின்ன டைவு ஏற்படும் என்று அஞ்சுகிறார்.

ஒன்று மட்டும் நிச்சயம் - நேருவின் அரசோ, இந்திரா காந்தி யின் ஆட்சியோ இப்படியொரு முடிவை நிச்சயம் எடுத்திருக் காது. அவ்விருவருமே பாதிக்கப்பட்ட மக்களை அரவணைத்தார்கள், எல்லைகளைத் திறந்து வைத்தார்கள். ஜவாஹர்லால் நேரு திபெத்துக்கு ஆதரவு தெரிவித்தார், தலாய் லாமா

இங்கே வந்து தங்குவதற்குத் துணிச்சலாக அனுமதித்தார். அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் நிக்ஸன், வெளியுறவு அமைச்சர் ஹென்றி கிஸ்ஸிங்கர் போன்றோர் மிரட்டியபோதும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் வந்த அகதிகளுக்குப் புகலிடம் அளித்தார் இந்திரா.

ரோஹிங்கியாக்களின் வாழ்க்கை பாழாகிப் பல ஆண்டுகளாகின்றன. "மியான்மர் சமூகத்தின் ஆதிகுடிகள் அல்ல ரோஹிங்கியாக்கள், பிற்காலத்தில் குடியேறியவர்கள்" என்று கூறி அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற அவர்கள்மீது தாக்குதலை நடத்துகிறது மியான்மர் ராணுவ அரசு. சுயாட்சியும் கலாச்சார அந்தஸ்தும் அவர்களுக்கு மறுக்கப்பட்டன. குடிமக்களாவதற்கான அனைத்து உரிமைகளையும் இழந்தனர். கல்வி, சுகாதாரம் மட்டும் மறுக்கப்படவில்லை, குடியுரிமைக்காகக் கோரிக்கை வைக்கும் உரிமைகூடத் தரப்படவில்லை.

மியான்மர் ராணுவத்தாலும் பவுத்தப் பேரினவாதிகளாலும் நசுக்கப்பட்ட ரோஹிங்கியாக்கள் இந்தியா, வங்கதேசத்தை நோக்கி வெளியேறினர். இந்தியாவில் ராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர், தமிழ்நாடு, கேரளம் வரையில் குடியேறியுள்ளனர். சர்வதேசத் தரகர்கள் பல மடங்கு பணம் பெற்றுக்கொண்டு பல ஊர்களுக்கும் அவர்களை அனுப்புகின்றனர். போதை மருந்து கடத்துகின்றனர் என்று கூறி வங்கதேசம் ரோஹிங்கியாக்கள் வர முடியாமல் எல்லைகளை மூடிவிட்டது.

மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா நாடுகளுக்குப் படகுகளில் செல்ல முயன்றனர். இஸ்லாமிய நாடுகளான அவையும் அனுதாபமாக இல்லை. 'அகதிகளை முடிந்த அளவு ஏற்றுக்கொண்டுவிட்டோம், இனி இடமில்லை' என்று கைவிரித்துவிட்டன. சிரியா அகதிகளுக்கு சர்வதேசப் பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் கிடைத்த அனுதாபம், ரோஹிங்கியாக்களுக்குக் கிடைக்கவில்லை.

ரோஹிங்கியாக்கள் பயங்கரவாதிகள் என்ற பிரச்சாரம் ஓய வேண்டும் என்று போப்பாண்டவர் பிரான்சிஸ் விடுத்த வேண்டுகோளை யாரும் பொருட்படுத்தவில்லை. அன்னை தெரசாவின் கருணையும் தலைமைப் பண்பும் அரசுக்கு இல்லை. அவர் இருந்திருந்தால் ரோஹிங்கியாக்களை அரவணைத்திருப்பார். இன அழிப்பைச் சந்திக்கும் இத்தகைய எளிய





மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பவர்கள் அதிகாரிகளாகத்தான் இருக்கின்றனர். அகதிகள் என்றால் அவர்கள் அரவணைப்புக்கு உரியவர்கள்.

ஆனால், சட்டவிரோதக்குடியேறிகள் என்று முத்திரை குத்திவிட்டால், அவர்களை எப்படி வேண்டுமானாலும் அலைக்கழிக்கலாம். முறைசாராப் பொருளாதாரத்தில் கொத்தடிமைகளாகத்தான் அகதிகள் நடத்தப்படுகின்றனர். ரோஹிங்கியாக்கள் சட்டவிரோதக் குடியேறிகள் என்பதில் இணையமைச்சர் கிரண் ரிஜிஜு உறுதியாக இருக்கிறார். அவர்கள் இங்கே வாழ்வதற்கு அடிப்படையே இல்லை என்கிறார். மனிதாபிமானச் சட்டப்படியும் ஐ.நா. சபையின் மாநாடுகள் எடுத்த முடிவுகளின்படியும் இந்திய அரசின் நிலை சரியானதுதானா என்ற கேள்வி எழுகிறது.

எப்போதும் தூங்கிக்கொண்டிருக்கும் தேசிய மனித உரிமை கள் ஆணையம் இந்த முறை சுறுசுறுப்பாகி, 'ரோஹிங்கியாக்களை ஏன் வெளியேற்றப் பார்க்கிறீர்கள், நான்கு வாரங்களுக் குள் பதில் அளியுங்கள்' என்று இந்திய அரசைக் கேட்டிருக்கிறது.

"அடிப்படை மனித உரிமைகள் என்பவை எல்லோருக்கும் பொதுவானவை; இந்தியக் குடிமக்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் உரிமைகள் உண்டு" என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதை மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இந்த அறிவுரைகளும் வேண்டுகோள்களும் இப்போதைய அதிகாரவர்க்கத்திடம் செல்லுபடியாகாது; அது நாட்டின் பாதுகாப்பு, பயங்கரவாத ஆபத்து, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஆகியவற்றைத்தான் ஆதரவற்ற மக்கள் விஷயத்திலும் முக்கியத்துவம் தந்து பேசும். ரோஹிங்கியாக்கள் வெளி நாட்டவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால் அவர்களும் மனிதர்கள்தான் என்று மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

ரோஹிங்கியாக்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமாகிவிட்டது. அவர்கள் மியான்மருக்குத் திரும்பினால் உயிர் பிழைத்திருப்பதே நிச்சயம் இல்லை, அப்படியே உயிரோடு இருக்க முடிந்தாலும் வதைபடாமல் இருக்க முடியாது. இந்தியாவை எதிர்கொண்டிருப்பது தார்மிகப் பிரச்சினை. குடியுரிமை, சுதந்திரம் என்றால் என்னவென்று அது புரிந்து கொண்டிருக்கிறது என்பது தெரிய வேண்டும். ரோஹிங்கியாக்களை நாம் இப்போது கைவிட்டால், அகதிகளுக்கு நாம்தான் புகலிடம் என்ற கொள்கை யைக் கைவிட்டோம் என்பதே நிலைக்கும்.

பார்சிகள், திபெத்தியர்கள், ஆப்கானிஸ்தானத்தவர், யூதர்கள் என்று பலருக்குப் புகலிடம் அளித்துவிட்டு மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் ரோஹிங்கியாக்களைத் திருப்பி அனுப்புவது சரியல்ல. அரசின் இந்த முடிவுக்கு எதிராக மக்கள் அமைப்புகள் கிளர்ந்து எழும் என்று நம்புவோம்; ஆதரவற்றவர்களுக்குத் துணை நிற்பதே அறம் என்ற தேசத்தின் ஆன்மாவைக் காப்பாற்று வதே இங்கே முக்கியம்.

**இந்தியா எப்படிப்பட்டதாக இருந்தது என்பதே இப்போது மாறிக்கொண்டிருக்கிறது. மக்கள் குழுக்கள் இனியும் வாய்மூடி மவுனிகளாக இருக்கப் போகின்றனவா? நம் அனைவருக்குள்ளும் ஒரு ரோஹிங்கியா இருக்கிறார், மறந்துவிடக் கூடாது**

-நன்றி தி இந்து 8/9/2017

# இந்தியாவின் பலதெய்வ கொள்கை வழிபாட்டின் தோற்றம்

மத்திய கிழக்கு கலாச்சாரங்களை விட இந்திய கலாச்சாரம் பழமையானதாக இல்லாவிடினும், அதுவும் உலகத்தின் பழமையான கலாச்சாரங்களில் ஒன்றே.

இந்தியாவில் காணப்படும் பல தெய்வ வழிபாட்டிலும் தெய்வங்களின் எண்ணிக்கை எல்லையற்றதாக இருக்கிறது. மிக நீண்ட ஆராய்ச்சிக்கு பின், மத்திய கிழக்கில் எவ்வாறு பல தெய்வ வழிபாடு தோன்றியதோ அதைப் போன்றே இந்தியாவிலும் இம்முறை தோன்றிய தாக அன்ட்ரூ லங் (Andrew Lang) தீர்மானித்தார்.

ரிக் வேதத்திலும் ஓரிறைவனின் தன்மையை விளக்கவே பல தெய்வங்கள் கருதப்பட்டுள்ளது என்று இந்திய மதங்களின் நம்பிக்கை குறித்து எழுதிய எட்வர்ட் மக் கிரேடி (Edward McCrady) குறிப்பிடுகின்றார்.

ரிக் வேதத்தில் காணப்படும் ஸ்துதி பாடல் களிலும் ஓரிறை கொள்கையை பற்றிய கருத்து தகர்க்கப்படுவதற்கான அடையாளத்தை காண லாம். மாக்ஸ் முல்லர் (Max Muller) என்ற ஆராய்ச்சியாளரும் இந்தியாவில் முதலில் ஓரிறை வழிபாடு இருந்ததை ஒத்துக் கொள்கிறார்:

வேதங்களின் பல தெய்வக் கொள்கைக்கும் முன்னரும் ஓரிறை கொள்கை இருந்துள்ளது. பல தெய்வ கொள்கையின் பிரார்த்தனையில் கூட ஒரே இறைவனை பற்றிய நினைவூட்டுதல் உள்ளது.

**ஐரோப்பாவில் மதங்களில் ஏற்பட்ட சீர்குலைவு:**

ஐரோப்பாவிலும் இதே நிலைமை இருந்ததற்கான அடையாளத்தை காணலாம்.



பழங்கால கிரேக்கர்களின் பல தெய்வ வழிபாட்டினை ஆராய்ச்சி செய்த Axel W Persson தன்னுடைய "The Religion of Greece in Prehistoric times" என்ற புத்தகத்தில் கூறுகிறார்.

"பல கடவுள்கள் பின்னரே உருவாக்கப் பட்டுள்ளன. கிரேக்க மத புராணங்களிலும் இந்த கடவுள்களின் பெயர்களை காணலாம். ஒரே கடவுளை குறிப்பிடும் பல பெயர்களை கொண்டே பலவிதமான கடவுள்கள் ஏற்படுத் தப்பட்டுள்ளன" என்பதே என் கருத்து.

இதே மாற்றங்களே இத்தாலியிலும் நடை பெற்றதற்கான சான்றுகளை பார்க்கலாம்.

எட்ரஸ்கேன்ஸ் காலத்தில் (Etruscan - இத்தாலிய நாகரீகம்) உள்ள Iguvine அட்டவனையை ஆராய்ச்சி செய்த பின், தொல் இயல் நிபுணரான Irene Rosenweig கீழ் கண்ட முடிவுக்கு வந்தார்.

கடவுளை விளக்குவதற்கு பயன்படுத்தப் பட்ட அடைமொழி பெயர்களே பின்னர்

தனி தெய்வங்களாக மாறின.

சுருக்கமாக, கடந்த நூற்றாண்டின் மானுடவியல், தொல்இயல் துறை ஆதாரங்கள் சமூகங்கள் முதலில் ஓரிறை கொள்கையிலும் பின்னர் அதிலிருந்து மாற்றம் பெற்றதாக குறிப்பிடுகின்றன.

**இறைவனால் அருளப்பட்ட சத்திய மார்க்கம்:**

உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் சமூகங்களின் கலாச்சாரங்களையும் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் நாம் உற்று நோக்கும் போது பெரும்பாலான விடயங்கள் பொதுவாகவே உள்ளன என்பதை நாம் புரியலாம். இந்த சமூகங்களுக்கு இடையே கலாச்சார பரிமாற்றங்கள் நடைபெறவில்லை.

ஆனால் மனித இனம் அல்லாத அதாவது தேவதைகள், சாத்தான் மற்றும் ஜின்கள் இருப்பதாக நம்புகின்றனர். இறப் பிற்கு பின் வரும் மறுமை வாழ்கையை நம்பு கின்றனர். மேலும் அவர்களின் வணக்கங் களிலும் பொதுவான அம்சங்கள் காணப்படு கின்றன. உதாரணமாக, நோவா கப்பலை பற்றிய குறிப்புகள் சுமேரியன் பதிவேடுகளி லும், வேல்ஸ் மதங்களிலும், சீனர்களின் கல்வெட்டுகளிலும் மற்றும் பழைய லிதுனானி யன் மதங்களிலும் காணப்படுகின்றன.

வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் இறைவன் தன்னுடைய அடியார்களை தேர்ந்தெடுத்து அவர்களின் மூலம் மனிதனுக்கு மத நெறிமுறைகளை வழங்கி தன்னை வெளிப் படுத்துகின்றான். திருக்குர்ஆன் வசனங்களும் இதை கூறுகின்றது.

*ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வழிகாட்டி கள் அனுப்பபட்டனர். (அல் குர்ஆன் 13:7)*

*அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களை அனுப்பாத வரையில் எவ்வூராரையும் நாம் அழித்திடவில்லை. ஞாபக மூட்டுவதற்காகவே (நபிமார்கள் வந்தார்கள்) - நாம் அநியாயம் செய்பவராக இருக்கவில்லை. (அல் குர்ஆன் 26: 208-209)*

அந்த இறைத் தூதர்களும் அவர்களுடைய சமூகங்களை ஓரிறைவனின் பக்கம் அழைத் தனர். நல்லதை ஏவி தீயதை தடுக்கவும் போதனை செய்தனர்.'

மனித இனம் இந்த இறைத் தூதர்களை பின்பற்றுவதன் மூலமும், மேலும் அவர்கள் விட்டு சென்ற வேதங்களை பின்பற்றுவதன் வழியாகவே இரட்சிப்பு அடைய முடியும். இவ்வாறே இறுதியாக மனித இனத்தின் அருட்கொடையாக வந்த இறைத் தூதரே நபி முஹம்மது (ஸல்) அவர்கள். இறுதி வேதமே குர்ஆன். இதை இறைவன் யுக முடிவு நாள் வரை பாதுகாப்பான். மனித இனத்தின் மிகச் சரியான வழிகாட்டியும் இந்த குர்ஆனே.

**முடிவுரை:**

பொருள் முதல் வாதிகள் படைப்பின் உண்மையை மறுக்கின்றனர். மேலும் ஜடப்பொருள் (Matter) ஒரு நிலையான வஸ்து என்றும் எப்பொழுதும் அது நிலையானதாக இருக்கும் என்றும் நம்புகின்றனர். ஆனால் இன்று அறிவியல் ஆராய்ச்சிகள் பிரபஞ்சம் என்பது ஒன்றுமில்லாத நிலையில் இருந்து உருவாக்கப்பட்டது என்கிறது. இதனால் பொருள்முதல்வாத தத்துவங்கள் பொருளை இழக்கின்றன.

காலத்தை (Concept of Time) பற்றிய உண்மை நிலையை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் பொருள் முதல் வாதிகள் ஜடப்பொருள், காலம் இரண்டையும் நிலையானது என்று நம்புகின்றனர். இந்த நிலையே அவர்கள் உண்மையை அறிந்து கொள்ள முடியாமல் தடுக்கின்றது. ஆனால் நவீன விஞ்ஞானம் காலத்திற்கு ஒரு ஆரம் பத்தை வரையறுக்கிறது. மேலும் காலத்தை சார்புடைமை தத்துவத்தை கொண்டு விளக்க முடியும் என கடந்த நூற்றாண்டில் நாம் கண்டுள்ளோம்.

**காலமும் அதன் இயற்கை தன்மையும்:**

ஒரு கணத்தை மற்றொரு கணத்துடன் (moment) ஒப்புமை செய்வதற்கு நாம் கடைபிடித்த முறையே காலம் ஆகும். இதை உதாரணத்துடன் விளக்கலாம். ஒருவர் ஒரு




பொருளை தட்டும் பொழுது ஒரு குறிப்பிட்ட ஓசையை கேட்கிறார். அவர் அதே பொருளை மறுபடியும் தட்டும் பொழுது மறுபடியும் ஓசையை கேட்கிறார். இரண்டு ஓசைகளுக்கும் இடைவெளி இருப்பதாக நம்புகிறார். இந்த இடைவெளியை காலம் என அழைக்கிறார். இரண்டாம் தடவை அவர் ஓசையை கேட்கும் அந்த சமயத்தில், முதலாவதாக அவர் கேட்ட ஓசை (அப்பொழுது) மனதில் உள்ள ஒரு கற்பனையே. அதாவது அவர் நினைவுருக்களில் உள்ள ஒரு சிறிய தகவலே. இவ்வாறாக ஒரு நபர் தற்சமயத்தை (நிகழ் காலத்தை) தன்னுடைய நினைவுருக்களில் உள்ள தகவலோடு ஒப்புமை செய்து காலத்தை பற்றிய கருத்தை வடிவமைக்கிறார்.

அவர் அந்த ஒப்புமையை செய்யாவிடில், காலத்தை பற்றிய கருத்திற்கு வர வேண்டிய தில்லை.

**ஜூலியன் பார்பர் என்ற இயற்பியலாளர் காலத்தை பற்றி இவ்வாறு வரையறுக்கிறார்:**

ஒரு பொருளின் நிலையில் ஏற்படும் மாற றத்தை குறிக்கும் அளவீடே காலம் ஆகும்.

சுருக்கமாக சொன்னால், மூளையில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களை ஒப்புமை செய்வதன் விளைவாகவே காலம் உண்டாகிறது. ஒருவேளை மனிதன் நினைவு ருக்களை கொண்டிருக்காவிடில் (No Memory), அவனுடைய மூளை இந்த ஒப்புமை விளக் கத்தை ஏற்படுத்தியிருக்காது. எனவே அவன் காலம் பற்றிய கருத்தினை ஏற்படுத்தியிருக்க மாட்டான். ஒருவர் தன்னுடைய வயதை முப்பது என தீர்மானிக்கிறார் ஏனெனில், அவர் அந்த முப்பது வருடத்தில் பெறப்படும் தகவல்களை சேர்த்து வைத்துள்ளார்.

ஒருவேளை அவர் நினைவுருத் திறன் என்ற ஆற்றலை பெற்றிருக்காவிடில், தனது முந்தைய காலத்தை பற்றி சிந்தனை செய்ய இயலாது. மேலும் அவர் வாழும் அந்த நொடிப்பொழுதை மட்டுமே உணர்ந்து கொள்ள இயலும்.

**கடந்த காலம் என்பது நினைவுருக்களில் உள்ள தகவலே எனும் கோட்பாடு:**

நாம் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என தனித்தனியான காலங்களில் வாழ்கிறோம் என நமக்கு சொல்லிக் கொடுக் கப்பட்டுள்ளதால், நாமும் அவ்வாறே நினைக் கின்றோம். நமது நினைவுருக்களில் இருக்கும் பல்வேறு நிகழ்வுகளின் பதிவாக்கத்தினை கொண்டே கடந்த காலம் என்ற கருத்து உருவாகிறது என்று மேலே நாம் கண்டோம்.

உதாரணமாக, நாம் ஆரம்ப பள்ளியில் சேர்க்கப்பட்ட கணத்தை எண்ணிப் பார்க் கின்றோம். எனவே இது கடந்த கால நிகழ்வு என நினைக்கின்றோம். எனினும் எதிர்கால நிகழ்வுகள் நம்முடைய நினைவுருக்களில் இல்லை. எனவே நமக்கு தெரிய முடியாத இந்த நிகழ்வுகளை எதிர் காலத்தில் நாம் செய்வோம் என கருதுகின்றோம்.

கடந்த காலத்தின் கருத்தை நாம் மேலே விளக்கியது போல, எதிர் காலத்தின் கருத்தை யும் அவ்வாறே புரிந்து கொள்வோம். ஏனெ னில் இந்த (எதிர் கால) நிகழ்வுகள் நம்முடைய நினைவுருக்களுக்கு இதுவரையிலும் வர வில்லை. நாம் அவற்றை அறிய முடியாது.

எதிர் காலத்தின் நிகழ்வையும் நம்முடைய

நினைவுருக்களில் இறைவன் வைத்துவிட்டால், நமக்கு எதிர்காலமும் கடந்த காலமாக ஆகி விடும். உதாரணமாக, முப்பது வயதுடைய ஒரு நபர், முப்பது வருடத்தில் நிகழ்ந்த நினைவுகளையும், நிகழ்வுகளையும் எண்ணிப் பார்க்கிறார்.

இதன் காரணமாக அவர் முப்பது வருடங்களை கடந்தவர் என எண்ணுகிறார். ஒருவேளை, அவருக்கு முப்பது முதல் எழுபது வயது வரை நடக்கும் எதிர்கால நிகழ்வுகளை நினைவுருக்களில் வைத்துவிட்டோம் என்றால், அவருக்கு முப்பது வருட நிகழ்வுகளும் மற்றும் முப்பது முதல் எழுபது வருட நிகழ்வுகளும் கடந்த காலமாகவே மாறிவிடும். (காலம் ஒரு முழுமையான, பூரணமான வஸ்து அல்ல என்பதை விளக்கவே இந்த உதாரணங்கள் கூறப்படுகிறது). இந்த நிலையில் அவருக்கு கடந்த காலமும், எதிர் காலமும் நினைவுருக் களில் இருக்கும். மேலும் இரண்டு காலங் களையும் அவர் தெளிவாக உணர்ந்து கொள்வார்.

நிகழ்வுகளின் பதிவுகள் ஒரு வரையறுக் கப்பட்ட முறையிலே அமைய வேண்டும். அதாவது, கடந்த காலத்திற்கு பின் எதிர்காலம் என்ற கால நகர்ச்சியின் அடிப்படையில் அமைய வேண்டும் என மனிதனை இறைவன் படைத்துள்ளதால், எதிர் காலத்தை பற்றி அறிவிக்கவோ அல்லது எதிர் கால தகவல் களை இறைவன் நமது நினைவுருக்களில் வைக்கவோ இல்லை.

எதிர்காலம் நம்முடைய நினைவுருக்களில் தான் இல்லையே தவிர, மனிதனின் கடந்த மற்றும் எதிர் காலம் அனைத்தும் என்றுமே நிரந்தரமான இறைவனின் புறத்தில் (நினைவில்) உள்ளது. ஏற்கனவே முழுமையாக நடித்து முடிக்கப்பட்ட திரைப்படத்தை காண்பது போல், மனிதனின் வாழ்கையை காண்பது போன்றதற்கு சமமானவை இவை. இத்திரைப்படத்தை முன்னரே பார்க்க முடியாதவர்களுக்கு (மனிதர்களுக்கு), தங்களு டைய வாழ்க்கை ஒவ்வொரு கட்டமாக நகரும்.

திரைப்படத்தில் பார்க்காத கட்டமே எதிர்காலம் என மனிதன் (தவறாக) புரிந்து கொள்கின்றான்.

**உலக வரலாறும் ஒரு சார்புடைமை தத்துவமே:**

வரலாறிலும் சமூக வாழ்க்கையிலும் இந்த உண்மையை பொருத்தி பார்க்கலாம். காலம் மற்றும் பிரபஞ்ச வெளி இவற்றிற்கு உட்பட்டே சமூக, உலக வரலாற்றை நாம் எண்ணி பார்க்கின்றோம். நாம் இப்பொழுது வரலாற்றை பல கட்டங்களாக பிரித்து, அவற்றை சார்புடைமை தத்துவத்தை கொண்டு காணலாம்.

நாம் வாழ்வதற்கு நம்முடைய ஐந்து புலன்கலையே சார்ந்து இருக்கின்றோம். நம்முடைய புலன்கள் எவற்றை கிரகிக்கின் றதோ அவற்றை மட்டுமே நாம் புரிந்து கொள்கின்றோம். இந்த புலன்களின் எல்லையை கடந்து நம்மால் வெற்றி பெற இயலவில்லை. இந்த எல்லைகளுக்குள்ளேயே நாம் காலத்தையும் பிரபஞ்ச வெளியையும் புரிந்து கொள்கின்றோம். நம்முடைய ஐந்து புலன்களின் வழி ஏதேனும் ஒன்றை நம் மூளையால் கண்டு பிடிக்க முடியவில்லை எனில், அப்பொருள் மறைந்து விட்டது அல்லது இல்லை என்கின்றோம்.

மனிதனின் நினைவு சக்தி வரையறைக் குட்பட்டது. இறைவனின் நினைவு சக்தி எல்லாவற்றிற்கும் மேலானது. எல்லைகளற்றது. என்றும் நிலையானது. இங்கே ஒரு விஷயத்தை சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும். அது, “இறைவனின் நினைவு சக்தி” என்ற பதம் புரிந்து கொள்வதற்காக சொல்லப்பட்டது.

**மனிதனின் நினைவாற்றலை இறைவனின் நினைவாற்றலோடு பொருத்தி பார்ப்பது சாத்தியமற்றது. அந்த இறைவனே எல்லாவற்றையும் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து படைத்தான். அவன் அனைத்தையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான்.**

**- அபூஹாசின்**

# செல்வமா.. வறுமையா..?

## எது சிறந்தது?



இமாம் யூசுப் அல்கர்லாவி

எது முதலில்? அல்லது எது ஏற்றமானது? என்பதை ஆய்தறியும் இந்நூலில் இப்போது நாம் அறிஞர்கள் வட்டாரத்தில் நீண்ட நெடும் காலமாக விவாதிக்கப்பட்டு வரும் ஒரு கேள்விக்குரிய பதிலை பார்ப்போம்....

வறுமையை சகித்துக் கொண்டு ஏழையாகவே வாழ் வதா? கிடைத்த செல்வத்தை அனுபவித்துக் கொண்டு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாழ்வதா?

அதுவே சிறந்தது. இதுவே ஏற்றமானது என்று இருவேறு பதில்கள் கூறப்பட்டிருப்பினும் குர்ஆன், சுன்னாவை ஆய்வு செய்ததின் அடிப்படையில் எனக்குச் சரி என்று தோன்றுவது இதுதான். கிடைத்த செல்வத்துக்கு நன்றி செலுத்தும் செல்வந்தனாக வாழ்வதே ஏற்ற மானது, சிறந்தது. சிலர் நினைப்பதுபோல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதென்பது சாதாரணமான ஒன்றல்ல.

அல்லாஹ் கூறுகிறான் : ''என் அடியார்போல் நன்றியுள்ளவர்கள் சொற்பமானவர்களே'' (34:13)

''அவர்களில் பெரும்பாலானோரை நன்றி செலுத்தக் கூடியவர்களாக நீ பெற்றுக் கொள்ள மாட்டாய்'' (என்று ஷைத்தான் அல்லாஹ்விடம் கூறினான். (7:17)

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் செல்வத்தைக் கேட்டார்கள். வறுமையை விட்டு பாதுகாப்புத் தேடினார்கள்.

''இறைவா! நேர்வழி, இறை யச்சம், சுயச்சார்பு செல்வம் ஆகியவற்றை உன்னிடம் (நான் வேண்டுகிறேன்)'' என்று நபி (ஸல்) பிரார்த்தனை செய் தார்கள். (அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் (ரழி) நூல் : முஸ்லிம், திர்மிதி, இப்னுமாஜா)

''இறைவா! வறுமை, பற்றாக்குறை இழிவு ஆகிய வற்றைவிட்டும் நான் அநீதி இழைப்பதை விட்டும் அநீதி இழைக்கப்படுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்'' என்று பிரார்த்தனை செய்தார்கள் (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, ஹாகிம்)

''இறைவா! வறுமை, இறை மறுப்பு, பாவங்கள், பிணக்கு, நயவஞ்சகம் ஆகியவற்றை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்'' என்று நபி (ஸல்) பிரார்த்தனை செய்தார்கள். (அறிவிப்பாளர் : அனஸ் (ரழி) நூல் : ஹாகிம், பைஹகி)

''இறைவா! பசியை விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். ஏனெனில் அது தீய நண்பன்'' என்று நபி (ஸல்) பிரார்த்தனை செய்தார்கள். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா)

ஸஅத் (ரழி)விடம் நபி (ஸல்) கூறினார்கள்

''எளிமையான இறையச்சமுள்ள செல்வந்

தனான அடியார்களை அல்லாஹ் விரும்பு கிறான்'' (நூல் : அஹ்மது, முஸ்லிம்) அம்ருபின் ஆஸ் (ரழி)விடம் நபி (ஸல்) கூறினார்கள் ''நல்ல மனிதரிடம் நல்ல செல்வம் இருப்பது நல்லது தான்''(நூல்: அஹ்மது, ஹாகிம், இப்னுஹிப்பான்)

அபூஹுரைரா (ரழி) கூறினார்கள் ;

நபி (ஸல்) அவர்களிடம் ஏழைகள் (சிலர்) வந்து, ''செல்வந்தர்கள் உயர்ந்த (மறுமை) பதவிகளையும் நிலையான இன்பங்களையும் அடைந்து விடுகின்றனர். எங்களைப் போலேவே தொழுகின்றனர். எங்களைப் போலவே நோன்பு நோற்கின்றனர். எனினும் தம்மிடமுள்ள அதிகப் படியான செல்வங்கள் மூலம் ஹஜ் செய்கின்ற னர். உம்ரா செய்கின்றனர். அறப் போர்(க்காக செலவு) செய்கின்றனர். தர்மம் செய்கின்றனர். (நாங்கள் இவ்வாறு செய்ய இயலுவதில்லை)'' என்று கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள்

''நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லித் தரட்டுமா? அதை நீங்கள் கடைப்பிடித்தால் (செல்வத்தால்) உங்களை முந்தியவர்களை நீங்கள் தொட்டுவிடலாம். உங்களுக்கு பின் வரும் எவராலும் உங்களைத் தொட இயலாது. நீங்கள் வாழும் தலைமுறையில் நீங்களே சிறந்தவர்களாவீர்கள் உங்களைப் போன்று மற்ற வர்களும் கடைப்பிடித்தால் தவிர (அவர்களால் இச்சிறப்பை அடைய முடியாது)''

''நீங்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்ன ரும் 33 தடவை சுப்ஹானல்லாஹ் என்றும் 33 தடவை அல்ஹம்து லில்லாஹ் என்றும் 33 தடவை அல்லாஹு அக்பர் என்றும் கூறுங்கள்'' என்று சொன்னார்கள்.

இறுதியாக நபி (ஸல்) அவர்கள் ''அது செல்வம் அல்லாஹ்வின் அருள். தான் நாடிய வர்களுக்கு அதை அவன் வழங்குவான்'' என்று கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இந்த நபிமொழியைப் பாருங்கள் செல்வந்தர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி முறைப்படி அதைப் பயன்படுத்தினால் ஏழைகள் செய்ய முடியாத நன்மைகளை எல்லாம் செய்ய முடியும் என்பதையும் செல்வம் அல்லாஹ் அரும் அருட்கொடை என்பதையும் தெளிவாகச் சொல்கிறதல்லவா?

அது மாத்திரமன்று, அல்லாஹ் தன் திருமறை யில் சங்கைக்குரிய இறைத்தூதர்களை பலரை நன்றியுள்ளவர்கள் என்று பாராட்டுகிறான்.

''அவர் நன்றியுள்ள நல்லடியார்'' (17:3) என்று நூஹ் நபியையும் ''அவர் இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தக் கூடியவர் அவரை அல்லாஹ் தேர்ந்தெடுத்து நேர்வழிக்குக் கொண்டு வந்து சேர்த்தான்'' என்று இப்ராஹீம் நபியையும் (16 : 22)

''தாவூதின் குடும்பத்தினரே நன்றி செலுத்தி யவர்களாக செயல்படுங்கள் என் அடியார்களில் நன்றியுள்ளவர்கள் சொற்பமானவர்களே'' என்று (34:13) என்று சுலைமான் தாவூத் (அலைஹிமா) இருவரையும் பாராட்டுகிறான்.

எறும்பின் பேச்சைக் கேட்ட பின் சுலைமான் (நபி) கூறினார்கள்...

இறைவா! எனக்கும் என் தந்தைக்கும் நீ வழங்கிய அருட்கொடைகளுக்கு நான் நன்றி செலுத்திடும் வாய்ப்பை எனக்கு வழங்குவாயாக (27:19) என்று எடுத்துக்கூறி அவர்களைப் பாராட்டுகிறான்.

''இறைவா! நீ எனக்கு ஆட்சியதிகாரத்தை தந்தாய், கனவின் விளக்கங்களையும் கற்பித் தாய்''என்று (12:101) யூசுப் நபி கூறியதை எடுத் துரைத்து அவர்களைப் பாராட்டுகிறான்.

''(நபியே) உம்மை அவன் பிறரின் பராமரிப் பில் இருப்பவராகக் கண்டு உம்மை (சுயச்சார் புள்ள) செல்வந்தராக்கினான்'' என்று கூறி நபி (ஸல்) க்கு செல்வத்தைத் தந்து அருள் புரிந் ததைக் கூறிவிட்டு ''எனவே உம் இறைவனின் அருட்கொடையை எடுத்துரைப்பீராக'' என்றும் கூறுகிறான். (93:8,11)

மேலும் நபித்தோழர்களுக்கு வழங்கிய செல்வத்தையும் எடுத்துரைக்கிறான் பாருங்கள்! ''பூமியில் நீங்கள் (ஆரம்பத்தில்) சிறுபான்மை யினராகவும் பலஹீனமானவர்களாகவும் இருந்த நிலையில் மனிதர்கள் (எதிரிகள்) உங்களை அழித்துவிடுவார்களோ என்றும் நீங்கள் அஞ்சிக் கொண்டிருந்தபோது அவன் உங்களுக்கு அடைக் கலம் தந்து உங்களை தன் உதவியால் பலப் படுத்தினான். உங்களுக்குதூயவற்றை உணவாகத் தந்தான். நீங்கள் நன்றி செலுத்துவதற்காக (இவற்றை வழங்கினான்) (8:26)

எனவே வறுமை வாழ்வை விட வளமை வாழ்வே சிறந்தது. வறுமையை சகித்துக் கொண்டு வாழும் ஏழையை விட நன்றி செலுத்தி வாழும் செல்வந்தரே ஏற்றமானவர்.

“எது முதலில்” பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகிறார்கள்

எதற்கு முதலிடம் தர வேண்டும் என்பதை அதற்குரிய முக்கியத்துவத்துடன் அணுகிய அறிஞருள் ஒருவர் பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்

தம்முடைய ‘அர்பயீன்’ எனும் நூலில் இதுபற்றி அவர்கள் கூறியிருந்தாலும் இஹ்யாவு உலூமித்தீன் என்ற பென்னம் நூலில் தெளிவாக இதைப்பற்றி விளக்கியுள்ளார்கள். முஹ்லிகாத் = அழிக்கக் கூடியவை என்ற பெரும் தலைப்பின் கீழ் பத்தாவதாக அவர்கள் கூறுவது ஃதம்முல் ஆகூரூர் “ஏமாறுதல் ஓர் இழுக்கு” என்பதாகும்.

**இந்தத் தலைப்பின் கீழ் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தம்மையும் அறியாமல் தம்மிடமே ஏமாந்து போனவர்கள் பற்றி கூறியுள்ளார்கள்.**

கல்வியாளர்கள், வணக்க வழிபாட்டில் திளைப்பவர்கள், துறவிகள், செல்வந்தர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறிவிட்டு இவர்களில் யாரெல்லாம் தம்மிடமே ஏமாந்தவர்கள். இவர்களின் தீய செயல்களைக் கூட ஷைத்தான் எவ்வாறு இவர்களுக்கு அழகாக்கிக் காட்டினான் என்பதையெல்லாம் விபரமாகவும் விரிவாகவும் படம்பிடித்துக் காட்டியுள்ளார்கள் இமாம் கஸ்ஸாலி (ரஹ்). அவற்றுள் இரண்டு வகைகளை மட்டும் இங்கே எடுத்துரைக்கிறேன்...

இதன்மூலம் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தையும் மனிதர்களின் உலகத்தையும் எவ்வளவு அருமையாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் அகத்திலும் புறத்திலும் சமுதாயத்தை சீர்திருத்த வேண்டும் என்பதில் அவர்கள் எவ்வளவு பேரார்வம் உள்ளவர்கள் என்பதையும் “எது முதலில்” துறைக்கு அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள் என்பதையும் அறிந்திடவும் முடியும்.

இதோ இமாம் கஸ்ஸாலி (ரஹ்)வின் நுண்ணறிவுத்திறன் மிக்க ஆழமான வலிமையான விமர்சனத்தைப் படியுங்கள். தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளும் வணக்கசாலிகள் வணக்க வழிபாட்டில் திளைப்பவர்களில் சிலர் கடமைகளில் கோட்டை விடுகின்றனர். உபரியான கூடுதலானவற்றை அக்கறையாகச் செய்கின்றனர்.

சில நேரங்களில் இவர்கள் (கடமை களைத் தாண்டி) சிறப்பானவை என்று கருதப்படுபவற்றைச் செய்வதற்காக வரம்பு மீறிப் போகின்றனர்.

உதாரணமாகப் பாருங்கள். தொழுகைக்காக ஒளு (அங்க சுத்தம்) செய்யும்போது மனக் குழப்பம் ஏற்பட்டு திரும்ப திரும்ப கழுவிய உறுப்பையே கழுவுகின்றனர். மார்க்கத் தீர்ப்பின் படி சுத்தமாக இருக்கும் தண்ணீரைக் கூட சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அதில் அசுத்தம் கலந்திருக்குமோ என்று வீணாகக் கற்பனை செய்கின்றனர்.

ஆனால், உணவுகள் விஷயத்தில் இவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. ஹராமான (அனுமதிக்கப்படாத) உணவாக அது இருப்பதற்கான) வாய்ப்பை புறக்கணிக்கின்றனர். சில நேரங்களில் ஹராமான உணவைக் கூட தின்று விடுகின்றனர்.

நீரில் காட்டும் அக்கறையை உணவில் காட்டுவதுதான் நபித்தோழர்களின் வழிமுறைக்கு ஒத்திசைந்தது. இதோ பாருங்கள் : உமர் (ரழி) அவர்கள் ஒரு கிறிஸ்தவரின் பாத்திரத்திலிருந்த நீரில் ஒளு செய்தார்கள். அது அசுத்தமாக இருப்பதற்கான வாய்ப்புள்ளது. இத்தனைக்கும் உமர் (ரழி) எப்படிப் பட்டவர்களென்றால் ஹராமை (விலக்கப்பட்டதைச்) செய்து விடுவோமோ என்ற அச்சத்தில சில ஹலால் (அனுமதிக்கப்பட்டவை)களைக் கூட விட்டு விடக்கூடியவர்கள். (காண்க : அர்ரசூல் வல இல்ம் – கர்ளாவீ, பக்கம் 26–23)

இன்னும் சிலர் இப்படி இருக்கிறார்கள் கடமைகளில் அக்கறை காட்டுவதில்லை. உபரி வணக்கங்களிலோ பேரார்வம் கொண்டிருக்கிறார்கள்.

ளுஹா (முற்பகல்) தொழுகை இரவுத் தொழுகை உள்ளிட்ட உபரி தொழுகையின் நேரம் வந்தால் பேரானந்தத்துடன் இவற்றைத் தொழுகின்றனர். ஆனால் கடமையான தொழுகைகளில் இவர்களுக்கு ஆனந்தம் இருப்பதில்லை. நேரம் வந்த உடனேயே கடமையான

தொழுகையைத் தொழ வேண்டும் என்று ஆர்வம் கொள்வதில்லை.

இவர்கள் பின்வரும் நபிமொழியை மறந்து விட்டார்கள்...

“தம்மீது கடமையாக்கப்பட்டதைச் செய்து நெருக்கத்தைப் பெறுவதைப் போல வேறு எதனாலும் என் நெருக்கத்தைப் பெற முடியாது” என்று அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) கூறினார்கள் (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புகாரி)

நல்ல காரியங்களை அவற்றின் வரிசைப்படி நிறைவேற்றாததும் தீமைகளில் ஒன்றுதான் என்பதையும் அவர்கள் மறந்து விட்டனர். சில நேரங்களில் மனிதனுக்கு ஒரு நெருக்கடி ஏற்படும். ஒரே நேரத்தில் இரண்டு கடமைகளைச் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகளைச் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். அப்பொழுது இந்த நேரத்தைத் தவறவிட்டால் பிறகு செய்ய முடியாது என்ற நிலையிலுள்ள கடமையே உடனே செய்ய வேண்டும். மற்றொன்றை அப்புறம் செய்ய வேண்டும். இப்பவும் செய்யலாம் எப்பவும் செய்யலாம் என்பவற்றை அப்புறம் செய்ய வேண்டும். இந்த ஒழுங்கைப் பேணாதவன் ஏமாளி.இதுபோன்ற உதாணரங்களைக் கூறப் போனால் கூறிக்கொண்டே போகலாம்.

பாவங்கள் எவை? நண்மைகள் எவை? என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் நன்மைகளில் எதை முதலில் செய்வது, எதை அப்புறம் செய்வது என்பதுதான் சிலருக்குப் புரிவதில்லை.

உபரியான (நஃபில்)வற்றைவிட கடமைகளையே முதலில் செய்ய வேண்டும். ஃபர்ளு இஃபாயா எனும் சமுதாயத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் கடமையைவிட ஃபர்ளு அய்ன் எனும் தனி மனிதனின் மீதான கடமைகளுக்கே முதலிடம் தர வேண்டும். ஒரு ‘ஃபர்ளு கிஃபாயா’வை சமுதாயத்தின் சார்பில் யாரேனும் சிலர் செய்து கொண்டிருந்தால் இன்னொரு ‘ஃபர்ளு கிஃபாயாவை செய்ய ஆளில்லை என்றால் இதைச் செய்வதற்கு முதலிடம் தர வேண்டும்.

‘ஃபர்ளு அய்ன்’ எனும் கடமைகளில் எது முக்கியமோ அதை முதலில் செய்ய வேண்டும். குறித்த நேரத்தில் செய்ய வேண்டியதை அந்த நேரத்திலேயே செய்து முடிக்க வேண்டும்.

தந்தையின் தேவையை விட தாயின் தேவையை நிறைவேற்றிட முன்னுரிமை தர வேண்டும்.

ஏனெனில் நபி (ஸல்)விடம் ஒருவர் “யாருக்கு நான் அதிக உபகாரம் செய்ய வேண்டும்? என்று கேட்டபோது “உன் தாய்க்கு” என்றார்கள். “பிறகு” என்றார் அவர். “உன் தாய்க்கு” என்று மீண்டும் கூறினார்கள். “பிறகு?“ என்றார் அவர். “உன் தாய்க்கு” என்று மூன்றாவது தடவையும் கூறினார்கள் நபி (ஸல்) அவர்கள். “பிறகு யாருக்கு?” என்று கேட்டார். “உன் தந்தைக்கு” என்று கூறினார்கள். “பிறகு யாருக்கு?” என்று கேட்டார் அவர். “உனக்கு மிக நெருங்கியவர்களுக்கு பின்னர் அவர்களுக்கு அடுத்து நெருக்கமானவர்களுக்கு” என்று பதில் கூறினார்கள் (நூல் : திர்மிதி, ஹாகிம்)

எனவே உறவுகளில் நமக்கு மிக நெருக்கமானவர்களிடமிருந்து நம் உதவிகள் தொடங்க வேண்டும். ஒரே தரத்தில் இருவர் இருந்தால் அவ்விருவரில் யார் ரொம்பத் தேவை உள்ளவர் என்று பார்க்கவேண்டும். அதிலும் இருவரும் ஒரே தரத்தில் இருந்தால் அவ்விருவரில் யார் இறையச்சமுள்ளவரோ யார் மிக்க ஒழுக்கமானவரோ அவருக்கு முன்னுரிமை தர வேண்டும்.

ஒருவரிடம் பணம் உள்ளது. அதை வைத்து ஹஜ்ஜுக்குச் செல்ல விரும்புகிறார். அப்பொழுது அவரின் பெற்றோருக்கு பணம் தேவைப்படுகிறது. இவரிடம் வேறு பணம் இல்லை என்றால் அப்பொழுது என்ன செய்வது?

ஹஜ்ஜை விட பெற்றோர் நலனே முதன்மையானது. இப்போது இவர் ஹஜ்ஜுக்குச் சென்றால் இவர் ஏமாளி. தம்மிடம் ஏமாந்தவர். இது முக்கியக் கடமையை விட அதி முக்கியக் கடமைக்கு முதலிடம் தரும் பண்பாகும்.

ஒருவரிடம் “நான் இத்தனை மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்” என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அவரைப் பார்க்கப் புறப்பட்டார். அப்பொழுது வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது. அவரைப் பார்க்கச் சென்றால் தொழுகை நேரம் முடிந்துவிடும் என்றிருந்தால் தொழுகைக்கே முதலிடம் தர வேண்டும்.

வாக்குறுதியை நிறைவேற்றுவதென்பது ஒரு நல்ல காரியமாக இருப்பினும் ஜு ம்ஆவை விட்டு விட்டுச் செய்வது பாவமாகி விடும். ஒருவரின் ஆடையில் அசுத்தம் பட்டுவிட்டது. இதற்குக் காரணமான தன் பெற்றோரை (அல்லது குடும்பத்தினரை) கடுமையாகப் பேசுகிறார். அசுத்தமும் தவிர்க்கப்பட வேண்டியதுதான். பெற்றோரை மன வேதனைக்கு ஆளாக்குவதும் தவிர்க்கப்பட வேண்டியதுதான். எனினும் தம் ஆடையை அசுத்தப்படுத்திய தம் பெற்றோரைத் துன்புறுத்துவதையே தவிர்க்க வேண்டும். இதற்கே முதலிடம் தர வேண்டும். பிறகு அசுத்தத்தை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுபோல் உதாரணங்களைச் சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே நன்மைகளை அதற்கேற்ற தர வரிசைப்படி செய்யாதவர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கிறார். இது ஆழமான அறிவீனத்தால் ஏற்பட்ட ஏமாற்றம். ஆம்! நன்மை ஒன்று நினைத்துக் கொண்டு செய்யும் ஒரு செயல் பாவமாகிக் கொண்டிருப்பதை இவர் அறியவில்லை. அதைவிட முக்கியமான வேறொன்று இருக்க அதை விட்டு விட்டு இதைச் செய்து பாவியாகிக்கொண்டிருக்கிறார். என்னே ஏமாளித்தனம். (நூல் : இஹ்யாவு உலூமித்தீன்)

சட்டமேதை இமாம் கஸ்ஸாலி (ரஹ்) என்ன அருமையான விளக்கத்தை தந்திருக்கிறார் பார்த்தீர்களா?

இந்தப் புரிதலும் தெளிவும் புலமையும் இஸ்லாமிய அழைப்பாளர்கள் அனைவருக்கும் தேவை. ஃபித்ஹு மராத்திபில் அஃமால் எனும் நன்மைகளின் தர வரிசைப்பற்றிய புரிதல் மேலும் மார்க்கத்தின் கட்டளைகள் தடைகள் இவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தரத்தையும் இடத்தையும் மார்க்கம் வைத்துள்ளது. ஒவ்வொன்றையும் அதனதனுக்குரிய தரத்தில் வைக்கவேண்டும் என்பதை நான் (கர்ளாவீ) நீண்ட நெடுங்காலமாக கூறிக்கொண்டிருக்கிறேன்.

இஸ்லாமிய இயக்கங்கள் அழைப்பாளர்கள் இதில் மெத்தக் கவனம் செலுத்த வேண்டும். ''நன்மைகளுக்கு மத்தியிலுள்ள தராதரங்களைப் பேணாமல் விடுவதும் கூட தீமைகளுள் என்றுதான்'' என்று 'ப்ளிச்' சென்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறிவிட்டார்கள். இந்த வரிகளை முன்பை விட இப்போது தான் நான் தெளிவாகவும் ஆழமாகவும் வாசிக்கிறேன். இமாம் கஸ்ஸாலி (ரஹ்)வின் வரிகளை முன்னர் நான் (கர்ளாவீ) வாசித்திருக்கிறேன் என்றாலும் இவ்வளவு ஆழமாக இப்போதுதான் வாசிக்கிறேன்.

செல்வத்தை ஏறுக்கு மாறாக செலவிட்டு ஏமாறும் செல்வந்தர்கள் பற்றி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) தொடர்கிறார்கள். செல்வந்தர்களில் சிலர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். அவர்களுள் சிலர் பள்ளிவாசல்களையும் மதரஸா எனும் கல்விக் கூடங்களையும் மிருகங்களைப் பராமரிக்கும் சாலைகளையும் ஆற்றுப்பாலங்களையும் இன்ன பிற மையங்களையும் மக்களுக்கெல்லாம் தெரியும்படி கட்டிக் கொடுக்கின்றனர். பிறகு அதில் தமது பெயர் பொறித்த கல்வெட்டுக்களைப் பதிக்கின்றனர்.

இதுதான்? தாம் இறந்த பின்னரும் தமது பெயர் நிலைத்திருக்க வேண்டும். மங்காத புகழ்பெற வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் செய்வது தமது பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும் என்று நினைக்கின்றார்கள். இவர்கள் இருவகையில் ஏமாளிகள். தம்மையே ஏமாற்றிக் கொண்டவர்கள்.

ஒன்று : இவர்கள் மக்கள் பணத்தைச் சுரண்டி லஞ்சம் வாங்கி தவறான வழியில் பொருளீட்டி அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானவர்கள். அந்தப் பணத்தை வைத்து கட்டிடங்கள் கட்டி மறுபடி அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகிறார்கள்.

ஆம்! அவர்கள் முறை தவறிப் பொருளீட்டியிருக்கக் கூடாது. அதுவே ஒரு பாவம். அப்படி முறை தவறிப் சம்பாதித்தவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் தேடி மனம் திருந்தியிருக்க வேண்டும்.

அந்த (லஞ்சம், ஊழல்) பணத்தை உரியவர்களிடம் திருப்பித்தர வேண்டும். கொள்ளையடித்த அதே பொருளைத் தர வேண்டும். அது இயலாத பொழுதே அதற்கு ஈடானதை உரியவர்களிடம் தர வேண்டும்.

உரியவர்கள் இல்லையென்றால் அவர்களின் வாரிசுகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

வாரிசுகள் யாரும் இல்லையென்றால் நல்ல காரியங்களுக்காக அதைச் செலவிட வேண்டும். ஏழைகளுக்கு அதைப் பகிர்ந் தளித்து விடலாம். இப்படிச் செய்தால் தம் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று பயந்து கட்டி டங்களை எழுப்புகின்றனர். இது என்ன நியாயம்?

இவ்வாறு கொள்ளையடித்த பணத்தில் பேரும் புகழும் அடைந்திட விரும்பி கட்டிடம் கட்டி அதில் தங்கள் பெயரையும் பொறித்துக் கொள்கிறார்கள். இப்படி தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். இது ஒருவகை ஏமாளித்தனம்.

**மற்றொன்று :**

இவர்கள் நன்மையைக் கருதியும் அல்லா ஹ்வுக்காகவும் கட்டிடப்பணிக்கு உதவியாகக் கருதிக் கொள்கின்றனர். தமது பெயர் பொறிக்காத கட்டிடத்துக்காக எவ்வளவு வலி யுறுத்தி கேட்டாலும் ஒரு தினார் (தங்கக்காசு) கூட தர மனம் வராது இவர்களுக்கு.

பெயர் பொறித்தாலும் பொறிக்காவிட்டா லும் செலவளித்தவன் யாரென்பது அல்லாஹ் வுக்குத் தெரியுமல்லவா?

பிறகு ஏன் தருவதில்லை? இவர்கள் மனிதர்களிடமிருந்து கிடைக்கும் புகழையும் பாராட்டையும் தான் விரும்புகின்றார்கள். இறை வன் திருப்தி இவர்களுக்கு முக்கியம் இல்லை. இதுவும் ஓர் ஏமாளித்தனமே. செல்வந்தர்களில் இன்னொரு வகை ஏமாளிகள்...

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) தொடர்கிறார்கள், செல்வந்தர்களில் சிலர் தமது செல்வம் தம்மிடமே இருக்க வேண்டும். வேறெ ங்கும்போய்விடக் கூடாது என்று கஞ்சத்தன மாக செலவு செய்யாமலிருக்கின்றனர்.

உபரி நோன்பு, இரவுத் தொழுகை, குர்ஆன், ஓதி முடித்தல் என்று செலவில்லாத வணக்கங்களையே கடைப்பிடிக்கின்றனர். இவர்களும் ஏமாளிகளே!

ஏனென்றால் இவர்களின் அடிமனதில் கஞ்சத்தனம் ஆதிக்கம் செலுத்தி கொண்டி ருக்கிறது. அதை அடக்க ஒரே வழி அற வழியில் செலவளிப்பது தான். ஆனால் இவரோ வேறு வழியில் நன்மைகளைத் தேடுகிறார்.

இதற்கு ஒரு உதாரணம் கூறலாம்... ஒருவனின் ஆடைக்குள் பாம்பு புகுந்துவிட்டது. அவன் மரணத்தின் விளிம்புக்கு வந்துவிட்டான். ஆனால் அவனோ தன் உடலில் உள்ள பிடித்த நீரைக் கட்டுக்குள் வைத்திட மூலிகைக் கஷாயம் தயாரிக்க முனைப்புக் காட்டினானாம். பாம்பு கடித்து இறந்துபோனால் மூலிகைக் கஷாயத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய?

ஃபிஷ்ரு(ரஹ்)விடம் “ஒரு பெரயி செல்வந்தர் ஏராளமாக நஃபில் நோன்பு நோற்கிறார். நிறைய நஃபில் தொழுகிறார்” என்று கூறப்பட்டபோது “இவன் செல்வந்தன்” அல்ல. ஏழை, தான் செய்ய வேண்டியதைச் செய்யாமல் மற்றவன் செய்ய வேண்டியதைச் செய்து கொண்டிருக்கிறான்”

“நோன்பு என்ற பெயரில் தனக்குத்தானே பசியூட்டிக் கொள்வதை விட தொழுவதை விட ஏழைகளுக்குத் தராமல் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பதை விட இவருக்குச் சிறந்தது எதுவென்றால் ஏழைகளுக்கு வழங் குவதும் பசித்தோருக்கு உணவளிப்பதும்தான்” என்று பிஷ்ரு (ரஹ்) பதிலளித்தார்கள்.


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள!**

**தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**

# சுதந்திர தின விழாவில் மோடி விட்ட புருடா...!

# வீழ்ச்சியில் இந்திய பொருளாதாரம்



செப்டம்பர் மாத தொடர்ச்சி,,,,,,,,,,,

## தொடரும் சங்கப் பரிவார திரிபுகள்...

களைக் காட்டுகின்றது சங்கப் பரிவாரத்தின் துரோகம் பற்றிய விவாதம். அதுவும் சென்ற வைகறை இதழின் அட்டைப்பட கட்டுரையாக அடியொற்றி சங்கப் பரிவாரத்தின் வழக்கமான வரலாற்று திரிபுகள் தொடங்கி இருக்கின்றன.

சங்கப் பரிவாரம் விடுதலைப்போரில் பெரும்பங்காற்றியதாக சங்கப்பரிவாரத்தைச் சார்ந்த ராகேஷ் சின்கா என்பவர் ஓர் வரலாற்று நூலை எழுதி இருக்கின்றார்.

இந்த வரலாற்று நூலின் தகிடு தத்தங்களை தோலுரித்துக் காட்டியுள்ள இராம் புனியானி என்ற எழுத்தாளர் சங்கப்பரிவாரம் விடுதலைப் போரில் பங்கு பெறவில்லை. மாறாக காட்டிக் கொடுக்கும் துரோகத்தைச் செய்தது என நிரூபித்துக் காட்டினார். அத்தோடு நில்லாமல் இன்னும் ஒருபடி மேலே போய் சங்கப் பரிவாரம் விடுதலைப் போரில் கலந்துகொள்ள வந்த தங்கள் தொண்டர்களைத் தடுத்து நிறுத்தவும் செய்தது என்பதையும் நிரூபித்து உள்ளார். இதற்கு பக்கத் துணையாக பட்டவர்த்தமான ஒரு நிகழ்ச்சிகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

கோல்வால்கர், அதாவது RSS-இன் இரண்டாவது தலைவர் பற்றி வெளி வந்த நூலில் இச்சம்பவம் இடம் பெறுகின்றது. டாக்டர் ஜி அவர்களிடம் ஒருவர் வந்தார். அவர் ஆர்.எஸ்.எஸ்.-ஐ சார்ந்தவர். அவர் விடுதலைப் போர் ஒரு உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. அதில் கலந்துகொள்ள வேண்டாம் என நீங்கள் தடை விதித்திருக்கின்றீர்கள். அதனால் என் மனம் சஞ்சலப்படுகின்றது. நான் விடுதலைப் போரில் கலந்துகொள்ளப் போகின்றேன் எனக் கூறினார்.

உடனேயே டாக்டர் ஜி அவர்கள் விடுதலைப் போரில் கலந்துகொண்டால் உன் குடும்பத்தை யார் கவனிப்பார்கள் எனக் கேட்டார்கள். அதற்கு அவர் நான் என் குடும்பத்திற்குத் தேவையானவற்றையெல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு சேர்த்து வைத்துவிட்டேன் என்றார்.




இதனை கேள்விப்பட்டதும் டாக்டர் ஜி அப்படியானால், அந்த இரண்டு ஆண்டுகளையும் ஆர்.எஸ்.எஸ்.-க்குச் செலவு செய்துவிடு எனக் கூறினர்.

அவர் ஆர்.எஸ்.எஸ். இலும் பணி செய்யவில்லை, விடுதலைப் போரிலும் கலந்து கொள்ளவில்லை. C.P. Bhishikar : Biography of Golwalkar, Shiji Pioneer of New Era. PP47/48.

இதல்லாமல் நாம் வைகறை வெளிச்சம், செப்டம்பர் இதழில் குறிப்பிட்டதைப்போல், சங்கப் பரிவாரத்தினர் தங்கள் "ஷாகா"க்களில் மட்டுந்தான் கவனம் செலுத்திட வேண்டும் ஆங்கிலேயர்களை எதிர்க்கும் விதத்தில் எதையும் செய்திடக் கூடாது என அறிக்கை விடுத்தார்கள்.

அஃதல்லாம், ஆர்.எஸ்.எஸ்.-ஐ சார்ந்தவர்கள் அடிக்கடி சிறைச்சாலைகளுக்குச் சென்று வந்தார்கள். அதிலும் விடுதலைப் போர் வீரர்கள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகளுக்குச் சென்று வந்தார்கள். காரணம், சிறைச்சாலைகளுக்குச் செல்பவர்கள் நிச்சயமாக தியாகசிந்தனையுடையவர்கள் அவர்கள் சங்கப் பரிவாரத்தில் இணைந்தார்கள் என்றால் பாசிசத்தைப் பயங்கர வேகத்தோடு வளர்க்கலாம் என நம்பினர். ஆனால் அந்தச் சிறைவாசிகள், பாசிசத்திற்கு மசிய, மறுத்துவிட்டர்கள்.

ஆனால், டாக்டர் ஜி என்ற ஹேக்டேவர் விட்டுக்கொடுக்காமல், சிறைச்சாலைகளை தரிசித்துக் கொண்டே இருந்தார். இவருக்கு ஆங்கிலேயர்கள் தாராளமாக சிறைச்சாலை அனுமதியை வழங்கினார்கள். காரணம் முஸ்லிம் ஆங்கிலேயர்களுக்கும் எதிரி, பாசிஸ்ட்டுகளுக்கும் எதிரி.

இவற்றையெல்லாம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் உளவுத்துறை பதிவு செய்துகொண்டே இருந்தது. இந்தப் பதிவுகளை அப்படியே திருப்பி டாக்டர் ஜி அடிக்கடி சிறை சென்றார் என எழுதி குவிக்கின்றார்கள். பாசிசத்தைப் பாதையாகக் கொண்டவர்கள். இவர்களுக்கு கோடிக் கணக்கில் பணம், தாரைவார்த்துத் தரப்படுகின்றது. With input to from Rampuniyan

இராம் புனியானியின் கூற்றுப்படி இந்தியாவின் சுதந்திரப் போரில் அனைத்து தரப்பு மக்களும் கலந்துகொண்டார்கள். ஆர்.எஸ்.எஸ்.-ஐத் தவிர.

## 2017 -ம் ஆண்டு சுதந்திர தின விழாவில் மோடி விட்டப் புருடா...?

ஒரு நாட்டின் பிரதமர் செங்கோட்டையில் நின்று பேசுகின்றார் என்றார் அதில் உண்மையான புள்ளி விவரங்கள் மட்டுமே இருக்கும். ஏனெனில் அது அரசின் அதிகாரப்பூர்வமான உரை.

உரையை தயார் செய்பவர்கள் அரசின் அதிகாரிகள். அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த புள்ளி விவரங்களையே வழங்குவார்கள்.

அந்தப் புள்ளி விபரங்களின் அடிப்படையிலேயே உரைகளைத் தயார் செய்வார்கள். ஆனால் மோடி வகையறாக்கள் அதிலும் பொய்களையும் புனைந்துரைகளையும் இணைத்திட தயங்கவில்லை.

செங்கோட்டையில் நின்று ஆற்றிடும் உரையை அனைவரும் நம்புவார்கள் என்பதால் அதில் ஒரு பொய்யைக் கட்டவிழ்த்து விட்டார்.

ஆமாம், தான் பணமதிப்பு நீக்க நடவடிக்கைகளை மேற்கொண்டதால் 3.5 லட்சம் கோடி ரூபாய்கள் வங்கிகளுக்கு வரவில்லை. வங்கிகளில் டெபாசிட்டாகச் செலுத்தப்படவில்லை எனப் பீற்றினார்.

அடுத்த நாளே மத்தய ரிசர்வ் வங்கி நாங்கள் இன்னும் வங்கிகளின் மூலம் வந்த நோட்டுகளை எண்ணிடவில்லை எனக் கூறியது. மோடியின் பொய், அம்பலமானது. அதாவது

பாசிஸத்தின் பொய் அம்பலமானது.

இதுவல்ல முதல்முறை, வெட்கம் அவர்களைவிட்டுப் போய் தலைமுறைகள் பல ஆகிவிட்டன.

### மத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை

அடுத்தாற்போல் மத்திய ரிசர்வ் வங்கி தனது ஆண்டறிக்கையை ஆகஸ்ட் 30-இல் வெளியிட்டது.

அதில் நவம்பர்-8, 2016 போது புழக்கத் திலிருந்த பணத்தில் 99 சதவிகிதம் பணம், வங்கிக்குத் திரும்பவந்துவிட்டது என்றது விளக்கமாகச் சொன்னால் பண மதிப்பு நீக்கப்பட்டப் பணத்தில் 98.6 % நோட்டுகள் வங்கிக் கணக்கில் வந்து விட்டன. இதில் மோடி சொன்னதெல்லாம் பொய் என்பது மட்டும் நிரூபணமாகிடவில்லை. மாறாக, பண மதிப்பு நீக்கத்தால் எந்தப் பலனும் விளையவில்லை என்பதும் பட்டவர்த்தனமாக வெளிச்சத்திற்கு வந்துவிட்டது., 173 பேர் மாண்டதும், புதுப் பணத்தை அச்சடிக்க 8000 (எட்டாயிரம்) கோடி ரூபாய் செலவானதும், பல திருமணங்கள் நின்று போனதும்தான் மிச்சம்.

### இந்து பத்திரிகையின் தலையங்கம்

தி இந்து ஆங்கில நாளிதழ் செப்டம்பர்-1, 2017 இல் எழுதிய தலையங்கத்திற்கு இப்படித் தலைப்பிட்டது.

It is official demonetization totally failed, to curb black money / its prefessed objective

பொருள் : பணமதிப்பு நீக்க நடவடிக்கை முழுமையாகத் தோற்றுப்போய்விட்டது என்பது அதிகாரப் பூர்வமானது. அது கறுப்புப் பண புழக்கத்தைக் குறைக்கவில்லை. அது எதற்காக அறிவிக்கப்பட்டதோ அந்த லட்சியத்தில் அது முற்றாகத் தோற்றுப் போய்விட்டது.

நவம்பர்-8, 2016 அன்று நள்ளிரவில்தான் பணமதிப்பு நீக்க நடவடிக்கையைப் பிரஸ் தாபித்தார் மோடி. ஏதோ கறுப்புப் பணம் காலையில் ஒழிந்துவிடும். ஏனெனில் பணக் காரர்கள் பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவர் கள் இவர்களின் கைகளிலிருக்கும் பணம் நிமிடத்தில் வெற்றுக் காகிதமாக ஆகிவிடும், என அதிர்ந்தார். பின்னர் "டிஜிட்டல் இகாணமி" டிஜிட்டல் பொருளாதார முறையை அறிமுகப்படுத்தவே இந்த பண மதிப்பு நீக்க நடவடிக்கை என்றார்.

தொடர்ந்து தங்களுக்கு ஞானோதயம் வந்துவிட்டதுபோல், புழக்கத்திலிருக்கும் எல்லா பணத்திற்கும் முகவரி வந்துவிட்டது என்றார்கள்.

அட, அறிவு கெட்டவர்களே! இந்தக் கணக்கு ஏற்கெனவே சரியாக ரிசர்வு வங்கி அறிக்கையிலும் இதர பொருளாதார அறிக்கையிலும் இடம் பெற்றவைதான். ஏதோ கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை எனப் பிதற்றிக் கொண்டிருக்கின் றார்கள். என்னவென்பது இவர்களை. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துபோனது?.

இந்துப் பத்திரிகையின் தலையங்கம் ஒரு பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதார மாக மாற்றுவதற்கு வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன, அப்படியிருக்க இத்துணை பெரிய இழப்புகளை ஏற்படுத்தும் ஓர் கொடிய நடவடிக்கையை அரசு மேற் கொண்டிருக்கவேண்டாம் என்கின்றது.

இது தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் வழி - Self defating work என அறைகின்றது.

நிதி அமைச்சர் அருண்ஜேட்லியின் சாதனை பேச்சுக்கள் அனைத்தும் முட்டாள்தனமானது என்றும் அறிவுறுத்துகின்றது தி இந்து ஆங்கில நாளிதழின் செப்டம்பர்-1, 2017 தலையங்கம்.

யார் எப்படி எட்டி உதைத்தாற்போல் சொன்னாலும் இந்த பாசிஸ்ட்டுகளுக்கு அது புரிவதில்லை. இவர்கள் தீவிரவாதத்தின் வழி ஆட்சியைப் பிடித்தவர்கள்.

வெளிநாட்டு வங்கிகளில் இருக்கும் கறுப்புப் பணத்தை இந்தியா கொண்டு வருவோம் என்ற வாக்குறுதி...? என்னவானது? ஆட்சிக்கு வந்த 150 நாட்களில் ஒவ்வொரு இந்தியனின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் போடுவோம் என்பது என்னவாயிற்று.

## மோடியினால் பொருளாதார சீரழிவுகள்

9.2% மோடியின் விழுக்காடாக இருந்த பொருளாதார வளர்ச்சி மோடியின் முட்டாள் தனமான பணமதிப்பு நீக்கத்தால் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றது. இப்போது அது 5.7%. இதனை மட்டும் அழியும் இவர்களுக்குத் தெரிவதில்லை. ஆதாரம் தி இந்து செப்.-4. 2017.

இது உண்மையிலேயே 3.2% சதவிகிதம் தான் என்று தெளிவுபடுத்துகின்றார் யஸ்வந்த் சிங்கா என்ற முன்னள் பி.ஜே.பி. யின் நிதி அமைசசர்.

கறுப்புப் பணமும், கள்ள நோட்டுகளும் இப்போது வெள்ளப் பணங்களாக பவனி வருகின்றன.

வங்கிகளில் செலுத்திய 1000 ரூபாய், 500 ரூபாய் நோட்டுகளில் பெரும்பாலனவை கள்ளப் பணமும், கறுப்புப் பணமும்தான். இப்போது இவையெல்லாம் வங்கிகள் வழியாக புதிய இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளாகவும் 500 ரூபாய் நோட்டுகளாகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

1000, 500 ரூபாய் பணமதிப்பு நீக்கத்தால் தீவிரவாதத்திற்குச் செல்லும் பணம் கிடைக்காமல் போய்விடும் என்றார் மோடி. இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகமே மோடி வகையறாக்கள்தாம்.

இந்த இந்துத்துவ தீவிரவாதிகள் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை முன்னரே தெரிந்து கொண்டார்கள். அதனால் அந்தப் பணத்தை முன் கூட்டியே வங்கிகளில் செலுத்திவிட்டார்கள். எஞ்சியவற்றை சொகுசு கார்கள், பங்களாக்கள் ஆகியவைகளாக மாற் றிக் கொண்டார்கள். இவர்களின் பணத்தைப் பெற்றுக் கொள்ள சில வங்கிகள் இரவு பகலாக வேலை செய்தன.

இவையெல்லாம் ஊடகங்களில் அவ்வப் போது வெளிவந்தன. அவற்றையெல்லாம் வெளிச்சத்தில் வெளியிட்டோம். குண்டுகளை வைத்துக்கொண்டிருந்த இந்துத்துவ தீவிர வாதிகள் ஆட்சியக்கு வந்தபின் குண்டுகள் வெடிப்பு நடக்கவில்லை. ஆகவே தீவிரவாதத் திற்கு செல்லும் பணம் நின்றுவிடும் என்ற மோடியின் கூற்றுப் பொய்யான கேலிக் குரியது.

## பணமதிப்பு நீக்க நடவடிக்கைகளால் பயனடைந்தவர்கள்?

பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் பயனடைந்தவர்கள் முதன் முதலில், மோடியைச் சுற்றி வீற்றிருக்கும் கார்ப்பரேட் கம்பெனிகள். இவர்கள் அரசியலையும், அரசையும் கொள்ளையடித்து பணம் குவிக்கும் பண முதலைகள். இவர்கள்தாம் 2014 தேர்த லில் மோடியைப் பிரதமராக்கிட பல லட்சம் கோடிகளை "ஆப்கோ" என்ற இஸ்ரேலிய நிறுவனத்திற்கு அள்ளித் தந்தார்கள். இந்த நிறுவனந்தான் தன்னுடைய அபார விளம்பர உத்தியால் மோடியைப் பிரதமராக ஆக்கிற்று. இதனை 2014 வைகறை வெளிச்சம் இதழ்களில் விளக்கமாக வெளியிட்டிருக்கின்றோம்.

ஆகவே மோடி அந்த நிறுவனங்களுக்குச் செஞ்சோற்றுக் கடன் பட்டிருக்கின்றார். மோடி பதவியேற்றபோது விருந்தினர்களாக இந்த பண முதலைகளே அங்கு வீற்றிருந் தார்கள்.

இந்தப் பண முதலைகள் 11,00,000 கோடி ரூபாயை - பதினொரு லட்சம் கோடி ரூபாயை நமது வங்கிகளில் கடனாகப் பெற்றுவிட்டு திரும்பத் தந்திடவில்லை. இவர்களில் பலர் இந்தியாவிலேயே இல்லை. இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு அவர்களைத் தேடுவதைப்போல் ஓர் பாசாங்கு செய்து கொண்டிருக்கின்றார்கள். இதில்தான் விஜய் மல்லையா, லலித்மோடி போன்றவர்கள் வருகின்றார்கள்.

விஜய் மல்லைய்யாவின் விவகாரத்தை - சிறையில் ஒரு நீதிபதி என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் செப்டம்பர்-2017 வைகறை வெளிச்சத்தில் வெளியிட்டிருந் தோம்.

இந்த பணத்தை, அதாவது பதினொரு லட்சம் கோடியை நமது வங்கிகளால் இந்த

கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து திரும்ப பெற்றிட இயலவில்லை. காரணம், அவர்கள் பிரதமரின் செல்லப் பிள்ளைகள். உண்மையைச் சொன்னால் இனப் படுகொலைகள் பலவற்றை செய்து ஒரு பெண்ணுக்குப் பின்னால் சென்ற வரை மோடியை இந்தியாவின் பிரதமராக ஆக்கிட முதல் போட்டவர்கள்.

வராக்கடன் மிகுதியால், வங்கிகள் பல திவாலாகும் நிலை. வங்கிகள் வீழ்ந்தால் எல்லாம் சீரழிந்துபோகும். இதனால் இந்த கார்ப்பரேட்கள் பண முதலைகள் தந்த அறிவுரைதான் பணமதிப்பு நீக்கம்.

இந்த பணமதிப்பு நீக்க நடவடிக்கையை நவம்-8, 2016 நள்ளிரவில் அறிவித்தவுடன், வங்கிகளில் பணம் கொட்டோ கொட்டு என வந்து கொட்டிக்கொண்டிருந்தன. இதற்காக 173 இந்தியர்கள் செத்து மடிந்தார்கள். இவர்களுக்காக ஓர் அனுதாபச் செய்தியைக் கூட அறிவிக்கவில்லை இனப்படுகொலை புகழ் மோடி.

## நாடாளுமன்றத்தை புறக்கணித்தார்

இதுபோன்ற பெரிய நடவடிக்கைகள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு சட்ட மாக்கப்பட வேண்டும். அதுவும் நடக்க வில்லை. 2016 குளிர்கால கூட்டத் தொடர் முழுவதும் நடக்கவில்லை. அதன்பின் கூட்டப் பட்ட கூட்டத்திற்கு பிரதமர் நாடாளுமன்றம் வரவில்லை. பிரதமரின் இந்த ஈனச் செயலுக் கெதிராக எதிர்க் கட்சிகள் போராட்டங்களை நடத்தின.

நாடே நையாண்டி பண்ணிய பின்பு, ஒரு நாள் வந்தார். அன்று எதிர்க் கட்சிகள் தாம் பேசினவை அல்லாமல் பிரதமர் மோடி வாய்த்திறக்க வில்லை. ஆனால் வெளியே கூட்டங்களைக் கூட்டி வாய்சவடால் விட்டுக் கொண்டிருந்தார்.

மொத்தத்தில் நாடாளுமன்றம் இருக்கின் றது. அதன்வழி அனைத்தையும் சாதித்து விடுவோம் எனச் சவடால் விட்டவர்களை சம்மட்டியால் அடித்தார். அவமானப்படுத் தினார்.

இந்துத்துவ பாசிஸ்ட்டுகள் ஜனநாயகத்தின் மேல் நம்பிக்கையற்றவர்கள். அவர்கள் அடா வடியாக தாங்கள் நினைத்தவற்றை மக்கள் மேல் திணிப்பார்கள் என நாம் நடத்திய பாடங்களைச் செவி சாய்க்காமல் சகட்டு மேணிக்கு ஜனநாயகத்தை நம்பியவர்கள் இன்று ஏமாந்து நிற்கின்றார்கள்.



## மத்திய ரிசர்வ் வங்கி கவர்னரின் கூற்று

1000, 500 ரூபாய் பண மதிப்பு நீக்க நடவடிக்கை 2015 ஆண்டு இறுதியில் அல்லது 2016 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே கொண்டுவந்து விட வேண்டும் எனத் துடியாய்த் துடித்தார் மோடி.

இந்தப் பணமதிப்பு நீக்க நடவடிக்கை அறிவிக்கும் அதிகாரம் நமது மத்திய ரிசர்வ் வங்கியின் கவர்னருக்குத்தான் உண்டு. அதனால் மத்திய ரிசர்வ் வங்கியின் அப்போதைய கவர்னர் ரகுராஜனிடம் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை உடனேயே மேற்கொள்ள வேண்டும் என மோடி கட்டாயப்படுத்தினார். அவர் ஒத்துக்கொள்ளவில்லை.

பின்னர் அவரிடம் நீண்ட நாள்களுக்குப் பின் பலன் தரும் நடவடிக்கையாக தான் கருதுவதாக மோடி ஜோதிடம் சொன்னார்.

மோடியின் கூற்றை ரிசர்வ் வங்கியின் தலைவர் ஒத்துக்கொள்ளவில்லை. அப்படி ஏதும் நீண்டநாள் பயன் இருப்பதாக தெரிய வில்லை என்றும் அப்படி இருந்தாலும்



அது பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்காக மேற்கொள்ளும் செலவால் பாழ்ப்பட்டுப் போகும் எனக் கூறிவிட்டார், மறுத்துவிட்டார்.

மோடியால் பொறுக்க இயலவில்லை. ஏனெனில் மோடியின் ஆட்களுக்குக் கோடி கோடியாகப் வங்கிகளின் பணத்தைத் தாரை வார்த்துத் தந்தது எதுவும் திரும்பவில்லை. நாங்கள் திவாலாகப் போகின்றோம் என்று ஓலமிட்டன வங்கிகள்.

மோடியின் ஆட்கள் - அதாவது வங்கிகளில் கடன் வாங்கியவர்கள் வெளிநாடுகளில் அழகிகளோடு ஆனந்தமாக ஆடிக்களித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மோடி அவர்களிடம் கொஞ்சமாவது வங்கிக் கடன்களைச் செலுத்துங்கள் என கூறிப்பார்த்தார். அவர்கள் இன்று உலகத்தை உல்லாசமாகச் சுற்றி, சுற்றி வரும் உன்னை அரியணையில் அமர்த்திட நாங்கள் இஸ்ரேலின் ஆப்கோ நிறுவனத்திற்கு கொட்டிய பணத்தில் இன்னும் பாதிக்கூட வரவில்லை எனக் கூறிவிட்டார்கள்.

இறுதியில் எல்லா நியதிகளையும் முறைமைகளையும் காற்றிலே தூக்கி வீசிவிட்டு பணமதிப்பு நீக்க நடவடிக்கையை அறிவித்தார். இல்லை நாட்டு மக்கள் மெல்ல மெல்ல சேர்த்த பணத்தை வங்கிகளிலேயே வரிசையிலே நின்று கட்ட வைத்தார். வாடி வதங்கி மடிந்தவர்கள் ஏராளம்... ஏராளம்.. இதனால் வங்கிகள் திவால் நிலையிலிருந்து வெளியே வந்தன. ஆனால் வங்கிகளுக்கு ஏற்பட்ட இந்த 11 லட்சம் கோடி இழப்பிற்கு வழியற்றுப் போய்விட்டது. வங்கிகள் அவற்றை வருடந்தோறும் வராக்கடன் என எழுதி கழித்திட திட்டமிட்டுள்ளன.

ஆக பணமதிப்பு நீக்கத்தால் பயனடைந்தவர்கள் மோடியின் வகையறாக்கள் மட்டுந்தான். இவர்கள் தாம் நாட்டு மக்களின் பணத்தை மொத்தமாக சுருட்டியவர்கள்.

## இன்னும் சீரழியும் பொருளாதாரம் - தி இந்து நாளிதழ் உறுதி

தி இந்து நாளிதழ் செப்டம்பர் 2-ஆம் நாள் ஒரு தலையங்கத்தைத் தீட்டியது, அதற்கு "Slowdown" முடிவில்லா வீழ்ச்சி - என நமது பொருளாதார வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டியது.

நவம்பர்-8, 2016 பண நீக்க நடவடிக்கைக்குப் பின் ஜூலை-1, 2017 மறைமுக வரி என்ற நிஷிஜி என்ற இன்னும் பொருளாதார வீழ்ச்சி ஏற்ப்பட்டுள்ளது. காரணம் ஜி.எஸ்.டி.-யால் மக்கள் பொருள்களை வாங்கிட தயங்குகின்றனர். இதனால் பொருளாதார நடவடிக்கையின் முக்கிய பகுதியாகக் கருதப்படும் "Demand" என்ற தேவை - அதாவது அங்காடியில் பொருள்களை வாங்கிட வருபவர்கள் குறைந்துபோனார்கள். இதனால் இந்திய பொருளாதாரம் இன்னும் வீழும்..? ஆதாரம் தி இந்து செப்-2, 2017

**- எம்.ஜிஎம்.**



# வங்கியில் தேங்கிக் கிடக்கும் ரூ. 67.5 லட்சம் கோடி முஸ்லிம்களின் பணம்

இந்திய வங்கியில் 67.5 லட்சம் கோடி ரூபாய் முஸ்லிம்களால் கோரப்படாமல் உள்ளது. வட்டி வாங்குவது / கொடுப்பது இவற்றை இஸ்லாம் தடை செய்துள்ளதே இதற்கு காரணம். கேரளாவில் மட்டும் 40,000 கோடி ரூபாயும் கஷ்மீரில் 50,000 கோடி ரூபாயும் கோரப்படாமல் உள்ளது என டெல்லி மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவரான ஜபருல் இஸ்லாம் கான் இந்திய ரிசர்வ் வங்கியின் ஓர் அறிக்கையை சுட்டிக் காட்டி மேற்கண்டவாறு கூறினார்.

பிரதான பொருளாதார வல்லுனரான பேராசிரியர் தஹிர் பைக் புள்ளிவிவரங்களை ஒதுக்கி விட்டு, முஸ்லிம்கள் வட்டி என்பதால் பணத்தை எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதில் நிச்சயமாக மாற்று கருத்து இருக்க முடியாது என்று கூறுகிறார். மேலும் இவ்வளவு பெரிய தொகையை கொண்டு சமுதாயத்தில் பல நல திட்டங்கள் செய்யலாம், அதற்கு உலமாக்களும் அறிஞர்களும் இதுபற்றி ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

இப்பணத்தை விட்டுவிட்டால் ஒருவேளை இந்த தொகை முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படும் சமுக விரோதிகளின் கைகளுக்கு செல்வதற்கு வாய்ப்புகளும் உண்டு. அவர்கள் முஸ்லிம்களின் பணத்தை வைத்தே முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படக்கூடும் என்கிறார்.

வங்கியின் வழி கிடைக்கும் வட்டியை பற்றி இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உள்ளது. ஏனென்றால் இந்த வட்டியை அவர்கள் யாரிடத்திலும் நிர்பந்தித்து வாங்கவில்லை. வங்கி தானாகவே தனது வாடிக்கையாளரிடம் சேர்த்துவிடுகிறது அதனால் இதை பொது சேவைகளுக்கு ஏன் பயன்படுத்தக்கூடாது என ஒரு கேள்வி எழுகிறது.

ஒரு சிலர் இந்த தொகையை கொண்டு எந்த ஒரு லாபநோக்கமில்லாத செயலுக்கு பயன்படுத்தலாம் என்கின்றனர். மறுமையில் எந்தக் கூலியையும் எதிர்பார்க்கக் கூடாது என்கின்றனர். எடுத்துக்காட்டாக கழிப்பறை களைகட்டுவது. அனால் இது ஏற்றுக்கொள்ளும் படி இல்லை. ஏனென்றால் இது ஓர் அத்தியா வசியத்தேவையே. வேறு சிலர் இதை ஏழை மக்களுக்கு கொடுத்துவிடலாம் எந்த ஒரு நன்மையை எதிர்பார்க்காமல் என்கிறார்கள்.

இந்தப் பெருந்தொகையை வளர்ச்சிப் பாதையில் பயன்படுத்திட வட்டி இல்லா வங்கி முறையைக் கொண்டு வந்திட முயற்சி களை மேற்கொண்டது முந்தைய காங்கிரஸ் அரசு. அதனை இந்துத்துவா தீவிரவாதிகள் தடுத்துவிட்டார்கள்.

ஆனால் இப்போதும், நமது மத்திய வங்கி இதைப் பரிந்துரைத்து வருகிறது.

காலத்தின் சூழ்நிலையை கருதி இதற்கு உலமாக்கள் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும். ஆதாரம்: caravandaily july 27.

மக்கள் கேட்பதற்கு இனிமையாக இருந் தாலும் மேல கூறப்பட்ட செய்தியில் இதில் வேறேதேனும் உள்நோக்கங்கள் உள்ளதா

என்பதையும் நாம் அறிய முற்படவேண்டும்.



*1)* இந்தியா ரிசெர்வ் வங்கி - ஒருபோதும் மக்கள் நலன் சார்ந்து சிந்தித்ததில்லை, இதற்கு பல உதாரணங்களை கூறலாம் - பண மதிப்பிழப்பு, பெரு நிறுவனங்களின் கடன் தள்ளுபடி, ஏழை விவசாயி களிடம் அடாவடியாக வசூல் / ஜப்தி செய்வது, சேமிப்பு கணக்கில் வட்டியை குறைந்தது, ATM பணம் எடுக்க 25 ரூபாய் வசூல் செய்வது, குறைந்தபட்சம் 5000 வங்கிக் கணக்கில் இருக்க வேண்டும் என்று ஏழைகளை வாட்டு வது போன்றவை அடங்கும்.

*2)* சமூக நலன் / முஸ்லிம்களின் வளர்ச்சி இருப்பது போல தோன்றினாலும் இவர்கள் உலமா / அறிஞர்களை மார்க்க விசயத்தை மாற்ற கோருவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

*3)* 67.5 லட்சம் கோடி என்பது சாத்தியமா என்பது இன்னொரு கேள்வி, காரணம் இவ்வளவு பெரிய தொகை வங்கியை விட்டு சென்றால் அது வங்கி நிர்வாகத்தையே நஷ்டத் தில் தள்ளும். அவர்கள் கூறும் காஷ்மீரில் வில் உள்ள 50,000 கோடி அனைத்து மாநிலத்திலும் இருந்தாலும் இந்தியாவில் மொத்தம் 14.5 லட்சம் கோடி தான் வரும். இதன்மூலம் இவர்கள் கூறுவது உண்மையான தொகையா என்பது மிகப்பெரும் சந்தேகம்.

**பின்னப்பட்டுள்ள சூழ்ச்சி:**

மேலே சொன்ன காரணங்களுடன் நமது நாட்டு வங்கிகள் எப்படி இயங்குகிறது என்று பார்ப்போம். வங்கி தனது வாடிக்கை யாளர்களிடம் பணத்தை வாங்கி தொழில் செய்பவர்களிடம் அதிக வட்டியில் கடன் கொடுப்பார்கள். வரும் லாபத்தில் ஒரு பகுதியை வாடிக்கையாளர்களின் கணக்கில் வட்டியால் ஈன்ற பணம் என்று சேர்த்துவிடு வார்கள். அவர்களிடம் பணம் எப்போதும் இருந்தால் தான் அவர்களால் பிழைப்பு நடத்த முடியும், அவர்கள் ஒருபோதும் பணம் வங்கியை விட்ட செல்ல விரும்பமாட்டார்கள்.

**பிறகு ஏன் ரிசெர்வ் வங்கி இப்படி அறிக்கை விட்டது?**

வங்கி ஊழியர்கள் தனியார்மயமாவதை எதிர்த்து செப்-15 போராட்டம். தேசிய வங்கிகள் ஈட்டிய 1.5 லட்சம் கோடி லாபத்தில் 547 கோடிதான் மிச்சம், காரணம் பெருநிறுவனங்களின் கடன் தள்ளுபடி என்ற ஒரு செய்தியை வெளியிட்டது தமிழ் இந்து நாளேடு 12 செப்டம்பர் அன்று.

அரசு வங்கியை தனியார் மயமாக்க வேண்டுமென்றே கடன் தள்ளுபடி செய்வது, வங்கிகள் சுமைக்கு மேல் புதிய கணக்கு இலவச மாக தொடங்கவைத்தது, மானியம் வங்கியில் செலுத்துவது போன்ற திட்டம் அனைத்தும் வங்கிகளை நாசமாக்கி பின்பு நஷ்டத்தில் இயங்கும் வங்கிகள் என்று தனியாரிடம் தரை வார்க்கதிட்டம். அதில் ஒரு பகுதியே கோரப் படாத முஸ்லிம்களின் பணத்தை வெளியேற்று வதாக இருக்கலாம்.

இந்த இடத்தில் ஒரு புத்தகத்தின் செய்தியை மேற்கோள் காட்டி நாம் என்ன செய்யவேண்டும் என்று பார்க்கலாம்.

(இஸ்லாத்திற்கெதிராக பிரிட்டிஷ் உளவாளியின் ஒப்புதல் வாக்குமூலம் - புத்தகம்)

இல்லுமினாட்டிகள் ஹெம்பரிடம் பகிர்ந்த

அதி உயர் ரகசியங்கள் 3 - 11 வது திட்டம் என்னவென்றால் " முஸ்லிம்களிடம் எல்லா வகையான வட்டியையும் பிரபலப்படுத்த வேண்டும், வட்டியானது தேசிய பொருளாதாரத்தை சிதைப்பதோடு மட்டுமன்றி குர்ஆனியா சட்டங்களுக்கு பணிய மறுக்கும் பழக்கத்தை முஸ்லிம்களிடம் ஏற்படுத்தி விடும். சட்டத்தின் ஒரு பிரிவை ஒருவன் முதலில் மீறிவிட்டால், மீதமுள்ள சட்டத்தை மீறுவது என்பது அவனுக்கு எளிதாகிவிடும்.

மேற்சொன்ன குறிப்பின் மூலம் இதன் சூழ்ச்சி எங்கு இருந்து தொடர்கிறது என்று அறிய வேண்டும்.

**இஸ்லாத்தில் வட்டியை பற்றி:**

யார் வட்டி (வாங்கித்) தின்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்: இதற்குக் காரணம் அவர்கள், “நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே” என்று கூறியதினாலேயாம்; அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்; ஆயினும் யார் தன் இறைவனிடமிருந்து நற்போதனை வந்த பின் அதை விட்டும் விலகிவிடுகிறானோ, அவனுக்கு முன்னர் வாங்கியது உரித்தானது - என்றாலும் அவனுடைய விவகாரம் அல்லாஹ் விடம் இருக்கிறது; ஆனால் யார் (நற்போதனை பெற்ற பின்னர் இப்பாவத்தின் பால்) திரும்புகிறார்களோ அவர்கள் நரகவாசிகள் ஆவார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள். அல் குர்ஆன் 2:275

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் உண்மையாக முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வுக்கு அஞ்சியடங்கி, எஞ்சியுள்ள வட்டியை வாங்காது விட்டு விடுங்கள். இவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால் அல்லாஹ்விடமிருந்தும், அவனுடைய தூதரிடமிருந்தும் போர் அறிவிக்கப்பட்டு விட்டது (என்பதை அறிந்து கொள்ளுங்கள்)- நீங்கள் தவ்பா செய்து (இப்பாவத்திலிருந்தும் ) மீண்டுவிட்டால், உங்கள் பொருள்களின் அசல் - முதல் - உங்களுக்குண்டு; (கடன்பட்டோருக்கு) நீங்கள் அநியாயம் செய்யாதீர்கள், - நீங்களும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள். அல் குர்ஆன் 2:278,279

வட்டி என்பது ஒரு பெரும் பாவம், அது சமூகத்தையே சீரழித்துவிடும், தற்போது உலகில் உள்ள எல்லா நாடும் கடன்காரர்களாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு வட்டியே காரணம். அமெரிக்காவில் பல வங்கிகள் திவால் ஆனது, பொருட்களின் விலை ஏறிக் கொண்டே இருப்பது, பலர் மன உளைச் சலுக்கு ஆளாகி தற்கொலை செய்துகொள்வது போன்ற எண்ணில் அடங்கா சோகங்கள் வட்டி என்ற ஒற்றை சூழ்ச்சியில் புதைந்துள்ளது.

நம்மை படைத்த இறைவன் அதனால் தான் வட்டியை பெரும்பாவமாக்கியுள்ளான். மார்க்கம் முழுமைபெற்றுவிட்டது. வட்டி தடைசெய்யப்பட்டுவிட்டது.

இந்த வட்டி முறையில் பலர் வீழ்ந்து மாற்று முறையை தேடிக்கொண்டு இருக்கின்ற காலத்தில் இஸ்லாமிய வங்கிகள் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

இஸ்லாமியர்கள் பலரும் மற்ற சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் இஸ்லாமிய வங்கியின் (பொருளாதார திட்டத்தின்) தேவையை உணர ஆரம்பித்து இருக்கிறார்கள், இந்தியாவில் கூட இஸ்லாமிய வங்கி அறிமுகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாற்றை மூடவே யூதர்கள் முஸ்லிம்களை வட்டியின் பக்கம் தள்ளுகிறார்கள். இந்த வட்டியின் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டுவது மேலும் அவர்களை காலத்திற்கும் கடனாளிகளாக வைத்து இருக்கலாம், இதற்கு நேர் எதிரான முறை இஸ்லாமிய (பொருளாதார திட்டம்) வங்கி முறை, அதை பற்றி யாரும் பேசக்கூடாது என்பதற்கே முஸ்லிம்களை வட்டியின் பக்கம் திருப்பும் முயற்சி.

இன்ஷா அல்லாஹ், வட்டியின் கொடுமை மற்றும் தற்போது உள்ள வங்கிக்கு மாற்று பற்றி இனிவரும் காலங்களில் பார்க்கலாம்

**- அபுதாஹிர்**

# இந்துத்துவா பிரமுகரின் சதி அம்பலம்..!



திருவள்ளூர் மாவட்டத்தில் பா.ஜ.க. பிரமுகர் அரங்கேற்றிய கபட நாடகத்தை பொதுமக்களே புரிந்து கொள்வீர் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் எச்சரிக்கை அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அறிக்கை வருமாறு:

**கபட நாடகமும் - கைதும்!**

திருவள்ளூர் மாவட்டம் அயனம்பாக்கத்தைச் சேர்ந்தவர் பரமானந்தம் என்ற நபர். திருவள்ளூர் மேற்கு மாவட்ட பா.ஜ.க. எஸ்.சி. பிரிவு செயலாளராக உள்ளவர். இவர் 21-9-2017 அன்று அதிகாலை, தன் வீட்டுக்குள்ளே மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டை வீசிய தாகவும், அதனால் வீட்டி லிருந்த சோபா தீப்பிடித்து எரிந்ததாகவும் காவல் துறை யில் புகார் கொடுத்ததை யடுத்து, திருவேற்காடு காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து, அது அவரே நடத்திய நாடகம் - அப்படி ஏதும் நடக்காமலேயே அவர் செய்தது என்று கண்டறிந்து, 22.9.2017 அன்று மாலை பரமானந்தத்தினைக் கைது செய்துள்ளனர்.

''கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு'' என்று ஒரு பழமொழி நம் நாட்டில் உண்டு. ஆனால், இவரின் புளுகோ ஒரு நாள் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை!

**தனது தோல்வியைத் திசை திருப்புவதற்காக...**

அவரிடம் பதிவு செய்த வாக்குமூலத்தில் சில உண்மைகளை காவல் துறை யினர் அம்பலப்படுத்தியுள்ள னர்.

''பரமானந்தத்திற்குச் சொந்தமான நிலத்தருகே பொதுமக்கள், கடந்த ஆண்டு நடந்த பெருமாள் கோவில் கும்பாபிஷேகத்துக்கான யாக சாலை பந்தல் அமைத்தனர். இதற்கு எதிராக பரமானந்தம் மற்றும் அவரது சகோதரர்கள், உறவினர்கள் பூவிருந்தவல்லி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

அதன் விளைவாக பொது மக்கள் யாக சாலைக்காக அமைக்கப்பட்ட பந்தலை அகற்றி விட்டு, அதே இடத் தில் கொட்டகை அமைத்த னர். அதனைக் கண்டு ஆத் திரமடைந்த பரமானந்தம், தனது தோல்வியைத் திசை திருப்புவதற்காக, தன் வீட்டுக் குள்ளே தானே தீயை வைத்து விட்டு, மர்ம நபர்கள் பெட் ரோல் குண்டு வீசியதாக நாடகமாடியது தெரிய வந்துள்ளது! ('தி இந்து தமிழ்', 23.9.2017, பக்கம் 4)

**இது முதல்முறை அரங்கேற்றம் அல்ல!**

தமிழ்நாட்டில் பா.ஜ.க. வினர் செய்யும் இத்தகைய பித்தலாட்ட நாடகம் இது முதல்முறை அரங்கேற்றம் அல்ல. இதற்குமுன் பல இடங்களிலும் இதுபோன்ற பொய்ப் புகார்கள் காவல் துறையினரிடம் தாக்கல் செய்யப்பட்டு, பிறகு பொய் என்று கண்டறியப்பட்டுள்ள

சம்பவங்கள் பற்பல ஊர்களில் நடந்துள்ளன.

திண்டுக்கல்லில் பா.ஜ.க. சேர்ந்த ஒருவரின் வீட்டு ஜன்னலை உடைத்து தாக்க வந்தனர் என்று கொடுக்கப்பட்ட புகாரும் கற்பனை - திட்டமிட்ட நாடகம் என்று காவல்துறை கண்டறிந்து - சில மாதங் களுக்குமுன் இந்நிகழ்வு - கற்பனை, ஜோடிப்புகள் என்பது அம்பலமாகியது!

கோவை வடவள்ளியில் கடந்த இரண்டு ஆண்டு களுக்குமுன்பு ஒரு பொய்ப்புகாரை காவல்துறையினர் விரைந்து, விசாரித்து இதன் உண்மை வெளிச்சத்திற்கு வந்தது. தனது வீட்டில் குண்டு வீசப்பட்டது என்று காவிக் கட்சிப் பிரமுகர் கூறிய புகாரில் உண்மை இல்லை என்று கண்டறியப்பட்டது.

ஈரோட்டை அடுத்த சதுமுகையில் பிள்ளையார் சிலைக்குச் செருப்பு மாலை போட்டதும் இந்து முன்னணி யினர் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

## குறுக்குவழியில் விளம்பரம் தேடுவது!

தென்காசியில் ஆர்.எஸ்.எஸ்.காரர் ஒருவரைக் கொலை செய்துவிட்டு, அவரது உடலைக்கூட வாங்க மாட்டோம் என்று சண்டித்தனம் செய்து, பிறகு ஒரு இஸ்லாமிய இளைஞர்மீது கொலைக் குற்றம் சுமத்தியதால், ஊரில் பதற்றமான சூழ்நிலை உருவானது. பிறகு தமிழகக் காவல்துறை சில மாதங்களுக்குப் பிறகு இந்த உண்மைகளை அலசி ஆராய்ந்து வெளிப் படுத்தியது!

ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வை வளர்த்தெடுக்க இப்படி ஒரு குறுக்குவழி, விளம்பரம் தேடுவது ஒருபுறம் -

## ‘திடீர் தேசப் பக்த திலகங்களாக’

மற்றொரு புறம், பல்வேறு வழக்கு களில் சிக்கியுள்ள பழைய கிரிமினல் பேர்வழி களுக்கும், பொறுப்புக்கு ஆட்கள் சிக்காத நிலையில், இவர்கள் திடீரென்று காவி உடை அணிந்து, காக்கிகளை மிரட்டி, தாங்கள் ஏதோ மிகப்பெரிய பொது சேவையாளர்கள், ‘திடீர் தேசப் பக்த திலகங்களாக’ வேடமணிந்து உலா வருகின்றனர்.

எனவே, பொதுமக்களுக்கு இது புரிய வைக்கப்படல் வேண்டும்.

எந்த அரசியல் கட்சியானாலும், அவர்களது பூர்வோத்திரம் அறிந்தே தங்கள் அமைப்பில் சேர்த்தால், புது உறுப்பினர்களால் பொது ஒழுக்கம் காப்பாற்றப்பட பெரிதும் உதவிடும். கட்சியை வளர்க்கும் கண்ணோட்டம் தேவைதான் - ஆனால், பொது ஒழுக்கம் அதைவிட முக்கியம் அல்லவா!






# மாற்றத்தை நோக்கி...

ஒட்டுமொத்த மனித சமுதாயமும் இன்று பல்வேறு வகையிலான இன்னல்களையும் துன்பங்களையும் சந்தித்து வருகிறது. எல்லோரும் தீர்வைத்தேடி ஓடுகின்றனர். தீர்வு என சில வழிமுறைகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஆனால் தீர்வு கிடைக்காமல் புதிய புதிய பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுத்து மனிதனைப் பாடாய்படுத்துகிறது.

இவ்வேளையில் தீர்வை கையில் வைத்துள்ள இஸ்லாமிய சமுதாயம் வேறேதேதோ கொள்கைகளில் செயல்பட்டு விழி பிதுங்கி நிற்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு நாமும் சும்மா இருந்து விடக்கூடாதென "நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கமும்" "தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்டும்" தீர்வை மக்களிடம் கொண்டு சென்றாக வேண்டும். அதன் மூலம் நாமும் நமது வாரிசுகளும் சுபிட்சமாக வாழ வேண்டும் என்ற சிந்தனையில் மக்களை மீட்க களம்காண முடிவு செய்து இக்கருத்தை மக்களிடம் சேர்க்கும் விதமாக கடந்த 20-08-2017 அன்று திருப்பூரில் "மாற்றத்தை நோக்கி" என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இன்று பல்வேறு கொள்கை சார்ந்து மக்கள் இருப்பதால் முடிந்தவரை அனைத்து கொள்கை சார்ந்தவர்களையும் அழைக்க முடிவு செய்து அதில் தமிழகத்தில் பிரபலமாக உள்ள கம்யூனிசம், திராவிடம், தலித் அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளையும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தலைவர் குலாம் முஹம்மது அவர்களையும் அழைத்து கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் திருப்பூர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் கோவை முன்னாள் பாராளு மன்ற உறுப்பினருமான சகோதரர் சுப்புராயன் அவர்களும் திராவிட கழக பேச்சாளர் பெரியார் செல்வன் அவர்களும், தலித் விடுதலை கட்சியின் மாநில பொதுச் செயலாளர் செங்கோட்டையன் அவர்களும் மனித நேய மக்கள் கட்சியின் பேச்சாளர் கோவை செய்யது அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்புராயன் அவர்கள் உரையாற்றும்போது சுதந்திர போராட்டங்களின் போது எப்படி முஸ்லிம்களும் இந்துக்களும் தியாகம் செய்து போராடினார்கள் என்பதை சுட்டிக்காட்டினார்கள். இன்றைய சூழலில் பா.ஜ.க. பயங்கரவாதிகள் எப்படியெல்லாம் ஒவ்வொரு துறையிலும் ஊடுருவி வருகின்றனர் என்பதையும் இந்தியா பேராபத்தில் சிக்கியுள்ளதையும் தெளிவாக எடுத்துக்கூறி அனைவரும் ஒன்றுபடுவதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

அடுத்ததாக நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்துக் கொண்டிருந்த ஜமாஅத்தே இஸ்லாமின் மாவட்ட தலைவர் ஹசன் அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் பாசிச பயங்கரவாதத்தின் கோர முகத்தை தோலுரித்துக் காட்டினார். தீர்வாக நாம் அனைவரும் தேர்தல் பாதையை முன்னெடுக்க வேண்டும் என குறிப்பிட்டார்.

அடுத்ததாக உரையாற்றிய திராவிடர் கழகத்தின் பேச்சாளர் பெரியார் செல்வன் சங்கப்பரிவார் அமைப்புகள் சுதந்திர போராட்ட காலத்தில் இந்தியர்களுக்கு எதிராக பிரிட்டிஷாருக்கு ஆதரவாக நயவஞ்சகமாக கோழைத்தனமாக காட்டிக்கொடுத்து வந்ததை சுட்டிக்காட்டினார். மேலும் சங்கப்பரிவாரின் சதிகளையும் சூழ்ச்சிகளையும் தோலுரித்துக் காட்டினார்.

அடுத்து உரையாற்றிய தலித் விடுதலைக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் செங்கோட்டையன் அவர்கள் மாற்றத்தை நோக்கி நாமெல்லாம் செல்ல வேண்டிய அவசியத்தை சுட்டிக் காட்டினார். மார்க்சிஸ்ட் தீர்வாக அமையும் என குறிப்பிட்டார்.

அடுத்ததாக பேசிய கோவை செய்யது அவர்கள் நாமும் நிறைய வடிவில் போராட்டங்களை நடத்திவிட்டோம். ஆனால் தீர்வேதும் கிடைக்கவில்லை. ஆகவே தீர்வை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதை தனக்கே உரிய பாணியில் வலியுறுத்தினார்.

இறுதியாக உரையாற்றிய தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் குலாம் முஹம்மது அவர்கள், இந்திய சுதந்திரத்தில் மறைக்கப்பட்ட பகுதிகளை எடுத்துரைத்தார். இந்தியாவை கையில் வைத்துக் கொண்டிருப்பதில் இனி எந்த இலாபமும் இல்லை என்ற காரணத்திலேயே பிரிட்டிஷ் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கியதை வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டினார்.

இந்துத்துவ பயங்கரவாதத்தின் வெளியில் அறியப்படாத பல செய்திகளை வெளிப்படையாக தெரிவித்தார். ஜனநாயகம் என்ற பெயரில் நாம் ஏமாறுவதையும் ஏமாற்றப்படுவதையும் விரிவாக எடுத்துரைத்தார். ஜீனைதை, அஹ்லாக்கை அடித்தபோது உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் மற்ற பலிகள் தடுக்கப்பட்டிருக்கும் என்றும் கூறினார். தற்காப்பு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அங்கீகாரமிருக்கின்றது என்றார்.

முஸ்லிம்களைத்தான் சங்கப் பரிவாரத்தினர் முக்கியமான எதிரியாக கருதுவதையும் இதை முஸ்லிம்கள் புரிந்து அதை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார். அவர்கள் கொள்கை ரீதியாகத்தான் முஸ்லிம்களை எதிர்க்கிறார்கள். ஆகவே நாமும் கொள்கை ரீதியாக அவர்களை எதிர்க்க வேண்டும் என வலியுறுத்தினார். இந்துத்துவாவிற்கு மாற்றாக இஸ்லாம்தான் இருக்க முடியும். உலகில் பல்வேறு மொழி, இன, மத, மக்களை ஒன்றாய்க்கொண்டு ஆட்சி நடத்திய வரலாறு இஸ்லாத்திற்கு மட்டுமே சொந்தம் என்றார். இதற்கு அதன் நீண்ட நெடிய வரலாறு சாட்சி என்றார்.

எதிரிகள் எந்த வடிவில் வருகிறார்களோ அந்த வடிவில் எதிர்கொள்ள வேண்டும் என விரித்துரைத்தார்.

இஸ்லாத்தை தாழ்த்தப்பட்ட மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இஸ்லாமிய ஆட்சியின் கீழ் தான் அனைவரும் நிம்மதியாக வாழ முடியும் என்பதை வரலாற்று ஆதாரத்தோடு விளக்கினார். மக்களுக்கான தத்துவங்களும் செயல்களும் இஸ்லாத்தில் தான் உள்ளன என்பதையும் அதைக்கொண்டு சேர்க்க வேண்டிய கடமை நமக்குதான் உள்ளது என்றும் அது ஒன்றே மாற்றத்திற்கான வழி என்பதைத் தெளிவுபடுத்தினார்.

இக்கருத்தரங்கிற்கு திரளான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சிக்கு அனைத்து இஸ்லாமிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் முஹம்மது யாசர் அவர்களும் ஜமாஅத்தே இஸ்லாமிய ஹிந்த்தின் திருப்பூர் மாவட்ட தலைவர ஹசன் அவர்களும் முன்னிலை வகித்தனர்.

**– நமது நிருபர். திருப்பூர்**

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறை களையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது, பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி**

**ஹாஜி. அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்

51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,

Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**

**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.

and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.